28.03.2013

# உதய சூரியன்

Source for reading hunters

களம் - 01. சூரியன் -30 பக்கம் :32 விலை: 15/=



## மூன்றாவது கண்டத்திலிருந்து தப்புமா இலங்கை?

## மது போதையுடன் பாடசாலைக்கு வந்த மாணவன்

வைத்தியர்களின் அசமந்தம்: ஊசலாடும் மாணவியின் உயிர்!



# வைத்தியர்களின் அசமந்தம்: ஊசலாடும் மாணவியின் உயிர்!

**வைத்தியர்களின் கவனக் குறைவினாலும், அசமந்தப் போக்கினாலும் நிதம் ஒரு பிரச்சினையை எதிர்கொள்ளும் அப்பாவி மக்கள்!**

மனிதர்கள் கடவுளுக்கு அடுத்தபடியாக வைத்தியர்களையே தம்முயிரைக் காக்க தகுந்தவக்கள் என கருதி மதிப்பும் மரியாதையும் கொடுக்கின்றனர். எனவேதான் அதனை தொழிலாகக் கருதாமல் வைத்திய சேவை என்ற கௌரவத்தையும் அளிக்கிறோம். ஆனால் இன்று வைத்தியசாலைகளில் நடைபெறும் சில சம்பவங்கள் வைத்திய தொழிலின் கௌரவத்திற்கு களங்கமாக அமைகிறது.

வைத்தியசாலையில் உள்ளவர்களில் சிலரது கவனக்குறைவாலும், அசமந்தப் போக்காலும் அநியாயமான முறையில் அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர்.

அண்மையில் கம்புறுப்பிட்டிய மற்றும் மாத்தறை வைத்தியசாலைகளில் இடம்பெற்ற சம்பவம் எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்குவதாக அமைகின்றது.

கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி!

கம்புறுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த க.பொ.த. சாதாரண தரத்தில் கல்வி பயிலும் சமர்கா தில்ஹானி என்ற மாணவி வழமை போல அன்றும் பாடசாலைக்கு செல்ல தயாரானாள். ஆனால், வழமைபோல இல்லாமல் அவளின் உடம்பில் ஏதோவொரு வித்தியாசத்தை உணர்ந்தாள் பரவாயில்லை எப்படியாவது பாடசாலைக்கு செல்லவேண்டுமென்ற எண்ணத்துடன் பாடசாலைக்குச் சென்றாள்.

பாடசாலைக்கு சென்ற அவளால் நெடுநேரம் தாக்குப்பிடிக்க முடியவில்லை. திடீரென மயங்கி கீழே விழுந்தாள்.

ஆசிரியர்களும், சக மாணவர்களும் கம்புறுபிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

சமர்காவை பரிசோதனை செய்த வைத்தியர் x-ray எடுக்க வேண்டுமெனக்கூறி சமர்காவை x- ray அறைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதே நேரம் அந்த அறையில் இரண்டு முதியவர்களும் x- ray எடுப்பதற்காக காத்துக்கொண்டிருந்தனர்.

அந்த இடத்தில் அடுத்து நடக்கவிருக்கும் அசம்பாவித செயற்பாடு அவளின் வாழ்க்கையை கேள்விக்குறியாகிவிடும் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை.

x- ray யை பரிசோதித்த வைத்தியர் சொன்ன தகவல் சமர்காவின் தலையில் பேரிடியாக விழுந்தது.

சமர்காவின் இதயம் கரைந்து கொண்டு வருவதாக அதிர்ச்சித் தகவலை கூறினார்.

அதேசமயம் அவளுக்கான சிகிச்சையை கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் வழங்க முடியாது என்றும் மாத்தறை வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் பணித்தார்.

பாடசாலை ஆசிரியர்கள் சமர்கா குறித்த விடயத்தை அவளின் பெற்றோருக்கு அறிவித்தனர்.

தகவலை கேள்விப்பட்ட பெற்றோர் பதறியடித்துக்கொண்டு மாத்தறை வைத்தியசாலைக்கு சென்றபோது அங்கு தனது பிள்ளையின் நிலைமையை கண்டு கலங்கினர்.

மாத்தறை வைத்தியசாலையில் சமர்காவை சத்திரசிகிச்சை அறைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை வழங்கியுள்ளனர். சத்திரசிச்சையின் பிறகு வார்டுக்கு மாற்றப்பட்டாள்.

பெற்றோருக்கு நடந்தவையெல்லாம் வெறும் சூனியமாக இருந்துள்ளது.

இவளுக்கு இதயத்தில் பிரச்சினையா? என்பதையும் நம்ப முடியவில்லை.

சத்திரசிகிச்சையின் பிறகு மறுபடியும் x- ray எடுத்து பார்த்த வைத்தியர்களுக்கு பெரும் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது. அதேசமயம் சமர்காவின் பெற்றோருக்கு பேரிடியாகவும் அமைந்தது.

கம்புறுப்பிட்டி வைத்தியசாலையில் இருந்து அனுப்பிய x- ray க்கும் தாங்கள் எடுத்துள்ள x-rayயிற்கும் பாரிய வேறுபாடு இருப்பதை கண்ட வைத்தியர்கள் ஏதோ தவறு நடந்து இருக்கின்றது என்பதை உணர்ந்து கொண்டுள்ளனர்.

மேலும் வைத்தியர்கள் இது தொடர்பாக எத்தத் தகவலையும் சமர்காவிடமோ அல்லது அவளின் பெற்றோர்களிடமோ சொல்லவில்லை. நான்கு நாட்களுக்கு பிறகு வைத்தியசாலையில் இருந்து வீடு திரும்பிய சமர்காவின் உடல் நிலை மிகவும் மோசமானது. முன்பைவிட தற்போது பாரிய வேதனையையும் அனுபவித்தாள்.

கை, கால்கள் சக்தியிழந்தது. அவளால் எழுந்து நடக்க முடியாமல் வேதனையால் துடித்தாள். இவள் படும் வேதனையை பார்த்து சகித்துக்கொள்ள முடியாத பெற்றோர் மீண்டும் மாத்தறை வைத்தியசாலைக்கு சமர்காவை அழைத்துச் சென்றனர்.

இவ்வாறு நடக்கும் என்பதை ஏற்கனவே அறிந்திருந்த வைத்தியர்கள் x- ray மாறிய விடயத்தை கூறினார்கள்.

மேலும் இது எங்களின் தவறு அல்ல கம்புறுபிட்டிய வைத்தியசாலையில் இருந்து அனுப்பிய x- rayயை பரிசோதித்த பிறகே நாங்கள் சத்திரசிகிச்சை மேற்கொண்டோம் என தங்களின் தரப்பு நியாயத்தை கூறினர்.

இந்த விடயம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை யடுத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள்.

யார் என்ன சொன்னாலும் என்ன செய்தாலும் இனி என்ன பயன். வைத்தியர்களை நம்பி வந்த பிள்ளையின் எதிர்காலமே சூனியமாக மாறிவிட்டது.

**சசிக்கலா புஷ்பராஜா**



# பரதேசி

## தேயிலை தொழிலாளர் கொத்தடிமை தனத்தை சொல்லும்

சுதந்திரத்துக்கு முந்தைய முப்பதுகளின் காலகட்டத்தில் தேயிலை தோட்டத் தொழிலாளர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட அவலத்தை சொல்லும் "ரெட் டீ" நாவலை அடிப்படையாக வைத்து பரதேசி எனும் திரைப் படத்தை தென்னிந்திய இயக்குநர் பாலா உருவாக்கியிருக்கிறார்.

தென் தமிழ்நாட்டிலிருந்து ஜனங்களை வேலைக்கென்று கூட்டங் கூட்டமாக அழைத்துச் சென்று தேயிலை தோட்டங்களில் கொத்தடிமைகளாக்கினார்கள். அப்படி அழைத்துச் செல்லப்பட்ட சாலூர் கிராமத்திலிருந்து கதை தொடங்குகிறது.

கதை தொடங்கும் காலகட்டம் 1939. அன்றைய தென்னக கிராமம் ஒன்றை, அன்று கிராமமும், மனிதர்களும் இப்படித்தான் இருந்திருப்பார்கள் என்று மனதார நம்பும் வகையில் காட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. கலை இயக்குநரும், ஒளிப்பதிவாளரும் இணைந்து அன்றைய காலகட்டத்தை அப்படியே நம் கண்முன் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோல் பேச்சு வழக்கு. கிராமத்து இயல்பு அச்சு அசல் அப்படியே.

களிமண்ணை கொடுத்தால் பாலா அதற்கும் ஒரு தேசிய விருது வாங்கித் தருவார் என்பதை ஒவ்வொரு கணமும் நினைவுப்படுத்துகிறது படத்தில் இடம்பெற்றவர்களின் நடிப்பு. அதர்வாவின் நடிப்பை எப்படி குறிப்பிடுவது? அதிலும் வகை வகையாக அவர் அழும் காட்சிகள். திருமணத்தில் சோறு கிடைக்காமல் ஆங்காரத்தில் அழுவது ஒருவகை என்றால், தான் இருக்கும் பாழும் கொத்தடிமை குழியில் மனைவியும், மகனும் அகப்பட்டதை நினைத்து கதறுவது இன்னொரு வகை. ஒவ்வொரு வருடமும் கூலி மறுக்கப்பட்டு மீண்டும் கொத்தடிமை தொழிலுக்கு திரும்புகையில் ஒட்டு மொத்த பச்சாதாபத்தையும் பெறுகிறது அவரின் நடிப்பு.

பஞ்சம் பிழைக்க தேயிலை தோட்டத்தை தஞ்சமடையும் ஏழைகள் அனுபவிக்கும் கொடுமைகள். இந்த ஒரு வரிதான் கதை. அதைத் தாண்டி எதுவும் இல்லை. இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை.

பஞ்சம் பிழைக்கப் போய் கொத்தடிமைகளாகும் கதையில் என்னவெல்லாம் இருக்கும்? பின்னணியில் சோகப்பாடல் ஒலிக்க ஊரைவிட்டு கிளம்பும் காட்சி, சகிக்க முடியாத வேலைச் சூழல், பெண்களை பாலியல் பலாத்காரம் செய்யும் வெள்ளைத்துரை, கனவு கலைந்து போனதால் உண்டாகும் ஏக்கம், தப்பிக்க முயற்சித்து தண்டனைக்குள்ளாகும் அவலம்... எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வருகிறது.

படம் நெடுக விடைத்துக் கொண்டு நிற்பது சோகம்... மேலும் சோகம்.

பரிதாபத்துக்குரிய பின்னணியை உடைய ஒரு கதாபாத்திரம் சித்ரவதை அனுபவிக்கையில் சோகம் எழத்தானே செய்யும்?

பஞ்சம் பிழைக்க சாலூர் கிராமம் கிளம்பியதும் செங்காடே சோகப்பாடல் ஒலிக்க, போகிற இடத்தில் இவர்கள் சித்ரவதை அனுபவிக்கப் போகிறார்கள் என்பதை எளிதாக யூகிக்க முடிகிறது. அந்த சித்ரவதை என்னவாக இருக்கும் என்ற நமது கற்பனை அப்படியே காட்சிகளாக வருகிறது. முக்கியமாக சோகத்தை முன்னறிவிப்பதாக வரும் பின்னணி இசையும் பாடல்களும்.

தமிழில் வருகிற பிற படங்களுடன் ஒப்பிடுகையில் நேர்மையான காத்திரமான

படத்தில் வரும் செங்காடே பாடல் தேயிலைத் தொழிலாளர்களின் அவலத்தை சொல்கிறது. 1935 இல் நடந்ததாக பாலா பதிவு செய்திருக்கும் இந்தப் பாடல் இன்றும் நம் தேயிலைத் தோட்டங்களின் யதார்த்தமாக இருக்கிறது.


இதோ அந்தப் பாடல் வரிகள்!

செந்நீர் தானா செந்நீர் தானா
செந்தேநீரில் செம்பாதிக் கண்ணீர் தானா
நியாயம் தானா நியாயம் தானா
ஓர் ஏழைக்குக் கைக் கூலி காயம் தானா

ஆண்டைக்கு ஒரு பாதி ஆவி போச்சே
அட்டைக்குச் சரி பாதி ரத்தம் போச்சே
எங்க மேலு காலு வெறும் தோலா போச்சே
அது கங்காணி செருப்புக்குத் தோதா போச்சே
(செந்நீர் தானா....)

யே ஊசி மழையே ஊசி மழையே
எங்க உடலோடு உயிர்ச்சூடு அத்துப் போச்சே
யே ஊதக்காத்தே ஊதக்காத்தே
எங்க பூர்வீக போர்வையும் பொத்துப் போச்சே

தேகத்தில் உள்ள எலும்புக்கு
ஒரு வெறி நாயும் தெரு நாயும் மோதுதே
வானத்தில் வாழும் நெஞ்சமோ
தன் மாராப்பைத்



தாராமல் ஓடுதே
உயிர் காப்பாத்தும் தெய்வங்கள் கண் மூடுதே ஓ...

ஊரெல்லாம் விட்டு நம் இளமை கெட்டு
நாம் வெளியானோம் பூனைக்கு வாக்கப்பட்டு
ஒரு மானங் கெட்டு சிறு சோறு திம்போம்
பேய் மழையோடும் பனியோடும் தூக்கங்கெட்டு

பாம்புக்குப் பசி வந்ததே
ஒரு சிறு கோழி என்னாகும் கூட்டிலே
யானையின் பெருங்காலிலே
சிறு காளான்கள் என்னாகும் காட்டிலே

இவள் உயிர் காத்த ஒரு சொத்தும் பறிபோனதே...
(செந்நீர் தானா

ஆண்டைக்கு ஒரு பாதி ஆவி போச்சே

அழகுக்கலை பயிற்சி
புதிய வகுப்புகள் ஆரம்பம்
- இப் பயிற்சியின் நோக்கம் வீட்டில் இருந்தவாறே உங்களின் அழகை மெருகூட்டிக்கொள்ளவும். உங்களுக்கென்றே ஓர் சுயதொழில் வாய்ப்பும்
- 08 மாதத்தில் முறையான பயிற்சி அளிக்கப்படும். (பயிற்சிக்கான பொருட்கள் அனைத்தும் இலவசம்)
ஏப்ரல் மாதத்தில் பயிற்சியில் இணைபவர்களுக்கு டம்மி ஒன்று இலவசம்.


தையல் Diploma பயிற்சி
சான்றிதழ் வழங்கப்படும்
இந்தியன் கட்டிங் 100% சுருக்கமற்றது
- 01 மாத 22 வகையான சாறி பிளவுஸ்
- 06 மாத பயிற்சி (சகலவிதமான ஆடை தைக்கும் முறை)
01 மாத கால சல்வார் பயிற்சி திரைச்சீலை
2,7 CSC கண்டியில் 9.00 am | 1,7 நவோதயம் மாத்தளையில் 9.00 am | 6,13 PCS Lanka கம்பளையில் 9.00 am | 6,13 லைசியம் Academy ஹட்டனில் 2.00 pm
என்றும் தரத்துடன்
திருமதி. செரின்
077 5454002
077 5454110

# அடிமேல் அடி விழும்போது

வாழ்க்கைக்கு வழிசொல்லும் விழிப்புணர்வுத் தொடர் 28

துரதிர்ஷ்டம் தனியாக வருவதில்லை. சில நேரங்களில் படையாக சேர்ந்து வந்து தாக்குகின்றன. பல முனைத் தாக்குதல் வரும்போது, இதற்கெல்லாம் தீர்வு ஒன்று கண்ணுக்கெட்டிய வரை தெரியாதபோது மனிதன் உடைந்து போவது இயல்பே. இந்த சந்தர்ப்பங்களில் குடி போன்றவற்றை தற்காலிக மறதிக்கான வழிகளை சிலர் நாடி அதை நியாயப்படுத்துவதும் உண்டு. ஒருசிலர் வாழ்க்கையை முடித்துக் கொண்டு நிரந்தத் தீர்வு காண முனைவதும் உண்டு.

அப்படி தற்கொலை செய்ய முனைந்தவர்தான் பக்மினிஸ்டர்-புல்லர் என்ற மேலை நாட்டுக்காரர். 32 வயதில் தொழிலில் நட்டம் ஏற்பட்டு வாழ்வில் எல்லா நம்பிக்கையையும் இழந்து, ஒரு டிசம்பர் இரவில் கொட்டும் பனியில், லேக் மிச்சிகன் என்ற பரந்த நீர்நிலையில் குதித்து தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள எண்ணி வந்தார். அந்தத் தண்ணீரில் குதிக்க முற்பட்டவர் அதில் பிரதிபலித்த நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்தைப் பார்த்தார். அந்த அழகு அவர் மனதை அசைக்க அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தார்.



கொட்டும் பனி, மின்னும் நட்சத்திரம், பரந்த வானம் எல்லாம் கண்டபோது பிரபஞ்சத்தின் எல்லையில்லாத அமைதியான பேரழகில் ஒரு கணம் அவர் மனம் லயித்தது. அந்த நேரத்தில் பிரபஞ்சம் அவருக்கு ஒரு செய்தியைச் சொன்னதாக அவர் உணர்ந்தார். உன் உயிரை மாய்த்துக் கொள்ள உனக்கு உரிமை இல்லை. நீ உன்னுடையவன் அல்ல. என்னுடையவன்.

தன்னைப் பிரபஞ்சத்தின் அங்கமாக உணர்ந்த அந்தக் கணம் அவர் வாழ்வின் பெரிய திருப்பு முனையாக அமைந்தது. புதிய வாழ்க்கையை ஆரம்பித்தார். வயது முதிர்ந்து அவர் இறந்தபோது அவருக்கு கணித மேதை, பொறியியலாளர், கவிஞர், கட்டிடக்கலை நிபுணர் என்ற பல அடைமொழிகளும், 170 கண்டுபிடிப்புகளுக்கு உரிமையாளர் என்ற புகழும் இருந்தது.

தனது 32 ஆவது வயதில் அனைத்து வழிகளும் மூடப்பட்டதாய் நினைத்து வாழ்க்கையை முடித்துக்[illegible] அன்று இறந்திருப்பாரானால்[illegible] யாரும் நினைவில் வைத்து[illegible]யமில்லை.

வாழ்க்கையில் பின் வாங்குபவர்கள் என்றுமே வாழ்ந்த சுவடில்லாமல் போய் விடுகிறார்கள். எனவே என்றுமே பின்வாங்காதீர்கள். அடி மேல் அடி விழும்போது, எல்லாமே முடிந்து விட்டது என்று தோன்றும்போது, இனி என்ன இருக்கிறது என்ற விரக்தி வரும் போது பக்மினிஸ்டர்-புல்லருக்குப் பிரபஞ்சம் சொன்னதை நினைவில் கொள்ளுங்கள்.

ஒரு இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக் கொள்ளும் போது, எல்லாமே உனக்கு எதிராக மாறும் போது, இனி ஒரு நிமிடம் கூட தாக்குப் பிடிக்க முடியாது என்று தோன்றும் அந்த முக்கிய தருணத்தில் கண்டிப்பாக தோல்வியை ஒப்புக் கொண்டு பின்வாங்கி விடாதே. ஏனென்றால் அந்த இடத்தில் அந்தத் தருணத்தில் தான் அலை உன் பக்கமாகத் திரும்பப் போகிறது. எல்லாமே முடிந்து விட்டது என்று நினைப்பதே ஒரு தனிப்பட்ட கருத்துதான். அந்த தனிப்பட்ட கருத்தும் கூட அடிமேல் அடி வாங்கி நொந்து இருக்கும் பலவீனமான நேரத்தில் பிறக்கும் பொய்யான கருத்து. அது பிரபஞ்ச உண்மை அல்ல. பலவீனமான நேரங்களில் தீர்மானங்களை எடுக்காதீர்கள். அவையும் பலவீனமானதாகவே இருக்கும். அப்படிப்பட்ட நேரங்களில் உள்ளே கேட்கும் சந்தேக இரைச்சல்களைக் கேட்பதை விட்டு மனதை அமைதியாக்குங்கள். பக்மினிஸ்டர் - புல்லருக்குக் கூட இயற்கையின் அழகில் தன்னை மறந்து லயித்த அந்த நேரத்தில் தான் பிரபஞ்சம் பேசியது.

அப்படி இயற்கையின் அழகிலோ, நல்ல தன்னம்பிக்கை தரும் வரிகளைக் கொண்ட நூல்களிலோ, இனிமையான இசையிலோ ஈடுபட்டு மனதை அமைதியாக்கி கவனியுங்கள். பிரபஞ்சம் உங்களுக்கும் சலிக்காமல் அந்த செய்தியைச் சொல்லும் நீங்கள் சாமானியர்கள் அல்ல. எல்லையற்ற பிரபஞ்சத்தின் வீரியமான ஒரு அங்கம். எல்லையற்ற பிரபஞ்சத்தின் அங்கம் நீங்கள் என்றால் உங்களுக்கு எல்லை எப்படி இருக்க முடியும்.? எல்லைகள் நமது சிற்றறிவால் நாமாக ஏற்படுத்திக் கொள்வதே அல்லவா? நூறு வழிகள் உங்களுக்கு அடைத்திருக்கலாம்.

ஆனால் கோடான கோடி வழிகளை பிரபஞ்சம் ஏற்படுத்தி இருக்கும்போது வெறும் நூறில் அனைத்துமே முடிந்து விட்டதாக நீங்கள் எப்படி எடுத்துக் கொள்ள முடியும். இன்னும் பல கோடி வழிகள் உங்களுக்காக பிரபஞ்சத்தால் வகுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே சோர்வை உதறி விட்டு உற்சாகத்தோடு நிமிருங்கள். புதிய வழிகளை ஆராயுங்கள். வெற்றி அலை உங்கள் பக்கம் திரும்பத்தான் போகிறது.

## சோகம்

எந்தச் சம்பவமும் நம்மை சோகப்படுத்துவதில்லை. ஆனால் உண்மைகளை ஏற்க மறுத்துவிட்டு நம் எதிர்கால விளைவுகளைப் பற்றி கற்பனையில் மூழ்கும்போது தான் சோகம் படிப்படியாக நம்மை கௌவிக் கொள்கிறது. குறிப்பிட்ட ஒரு சம்பவம் நம் சிந்தையைக் கிளப்பிவிட, சோகம் ஏற்படுகிறது. நிறைவேறாத விருப்பு வெறுப்புகள் ஏராளமாக இருப்பதால் ஏதோ ஒரு வகையில் ஒவ்வொருவரும் கோபப் படுகிறார்கள். ஒரு காரியம் நிறைவேறாது என்று தெரிந்தவுடன் முயற்சியைக் கைவிடுகிறோம். அது நமக்குள்ளேயே புதைந்துபோய் சோகத்திற்கும் துயரத்திற்கும் வித்திட்டு விடுகிறது. உண்மைகளை ஏற்க மறுப்பதே பல பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. கசப்பான முடிவுகளைத் தள்ளி போடுவதற்கு என்ன காரணம்? இனிமையான சூழ் நிலைகளை மட்டுமே மனம் விரும்புகிறது. இது குழந்தைத் தனமானது. பக்குவமற்ற பார்வை.

நம்மைப் பற்றிய அப்பிப்பிராயத்தை இழப்பதுதான் வாழ்க்கையில் மிகப் பெரிய சோகம். அடுத்தவர்கள் என்ன நினைப்பார்களோ என்று தேவையில்லாமல் கவலைப் பட்டு போலி வாழ்க்கை வாழ்வது அதைவிட பெரிய சோகம். நாம் எதிர்பார்த்த முடிவு கிடைத்து விட்டால் அதை இரு கரம் நீட்டி வரவேற்கிறோம். எதிர்பார்ப்புக்குக் [illegible] மாறுபட்டோ இருந்தால் நாம் ஒடுங்கி உடைந்து போகிறோம். முடிவு [illegible] ஒரே மன நிலையில் இருப்பதுதான் கர்ம யோகிக்கு அடையாளம்.



# மரண வாசலின் முதற்கதவு மது

மரண வாசலின்
முதற்கதவு மது.
நரக வாழ்விற்கு
குறுக்கு வழி மது.

நீ அருந்த விரும்புகிறாய்.
மது அழிக்க விரும்புகிறது.
மனித ஈரல்......
மதுவின் பிரதான உணவு.

மதுவின் உச்ச நிலை
உன் நாவில் தெரியும்.
உன் பேச்சுக்கு
மது கட்டுப்படாது.

பழி பாவம் இவற்றின்
பாதுகாவலன் மது.

கொலை கொள்ளை கற்பழிப்பு
மதுவின் பாட்டாளிகள்.
சட்டத்தை மட்டமாய்
மதிப்பவன் மது.

மரணப் படுக்கையிலும்
மதுவுக்கு நீ சரணம்.
அடித்து விரட்டினாலும்
அகலாத உறவு மது.

சுக போகம் அத்தனையும்
மதுவிற்கே அர்ப்பணமாகும்.
மதுபானம் மனிதன்
உடலை ஊனப்படுத்தும்.

மதுவை வரவேற்கும்
சமயம் எல்லாம்
முகச்சுழிப்பு வழமை.

அடைத்து வைத்தால்
அசையாத மது
குலுக்கித் திறந்தால்
குணத்தைக் காட்டும்.

திறந்தவனையே துரத்தும்
துரோகி மது.
மதுவைக் காதலித்தால்
சாவு சட்டைப் பையில்.

காதலால் கலைபட்டவனுக்கு
மது மறுவாழ்வு கொடுக்கும்.
மது அடிமையாகாது.
மாறாக அடிமைப்படுத்தும்.
மது தன் விடுதலை வரை
மௌனித்துக் கொள்ளும்.

## பத்தனை ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சைகள்

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழுக்கான பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளதாக ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையின் எழுத்துப்பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதி வரையும் செயன்முறைப்பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதியும் ஏழாம் திகதியும் இடம் பெறவுள்ளன.

இந்தப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள இறுதியாண்டு பரீட்சார்த்திகளுக்கும் மீள் பரீட்சார்த்திகளுக்குமான அனுமதி அட்டைகள் மற்றும் நேர அட்டவணைகளை எதிர்வரும் 30 ஆம் திகதி காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக் கொள்ள முடியும்.

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியிலிருந்து கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் பரீட்சைக்காக 167 இறுதியாண்டு மாணவர்களும் 29 மீள்பரீட்சார்த்திகளும் தோற்றவுள்ளனர்.

பரத நாட்டியம் , கர்நாடக சங்கீதம் , விஞ்ஞானம் , தகவல் தொழினுட்பம் ஆகிய பாடங்களுக்கான செயல்முறைப்பரீட்சைகள் ஏப்ரல் மாதம் 6 ஆம் 7 ஆம் திகதிகளில் இடம் பெறவுள்ளன என்று ஸ்ரீபாத தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி ஏ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அட்டன் நிருபர்

## பஸ்ஸிற்காக காத்திருக்கும் மக்கள்

பூண்டுலோயாவிலிருந்து டன்சினேன் ஊடாக நுவரெலியா செல்லும் பஸ் வண்டிகள் நேரத்திற்கு வராமையினாலும் அடிக்கடி பழுதடைந்து போவதினாலும் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பொதுவாக காலை 7.00 மணியளவில் பஸ் வண்டி ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. எனினும் இந்த பஸ்ஸிற்காக பாடசாலை மாணவர்கள், பொது மக்கள் என பலரும் காத்திருக்கின்றனர்.

இருப்பினும் நேரத்திற்கு இந்த பஸ்ஸா னது வராமையாலும் அடிக்கடி பழுதடைந்து போவதாலும் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் தமது அன்றாட கடமைகளை சரியான முறையில் செய்து கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலைமை ஏற்படுகிறது.

மேலும் சில பஸ் வண்டிகள் பஸ் நிறுத்துமிடத்திலேயே அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றிக்கொண்டு வருவதால் இடையில் நிறுத்தாமல் சென்றுவிடவும் சந்தர்ப்பங்களும் உண்டு. இது தொடர்பாக இப்பிரதேசத்துக்கு பொறுப்பான கொத்மலை பிரதேச பஸ் டிப்போ செயலாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.





ஆர்.தியாகு

## பயோ Data by உதயசூரியன்



பெயர் :-மைத்திரிபால சிறிசேன

தற்போதைய பதவி :- சுகாதார அமைச்சர்

பெருமைக்குரிய பதவி :- கட்சியின் செயலாளர்.

பிடித்த விடயம் :- நீதிநேர்மைக்காக சகோதரனை கைதுசெய்ய கூறுவது.

பிடிக்காத விடயம்:-என் அன்பு மகனை கைதுசெய்தது (அப்போ நீதி நேர்மை?)

ஒரே கோபம் :- குளிக்கும் பெண்களை என் மகன் படம் எடுத்ததாக ஊடகங்கள் என்னை விமர்சித்ததை.

பொழுதுபோக்கு :- மலையகத்தில் சுகாதாரத்தை மேம்படுத்த போவதாக கதையளப்பது.(அப்படியா?)

அடிக்கடி கூறுவது:- மஹிந்தவை பிரதமராக்க நானே சிபாரிசு செய்தேன் என்பதை.

எதிர்பார்த்திருக்கும் பதவி:- அடுத்த பிரதமர்

அடிக்கடி வரும் கனவு :- சிலர் என் பிரதமர் ஆசைக்கு ஆப்பு வைக்கும் காட்சி.

மலையக போஷனை மட்டம் தொடர்பாக :- இவ்வளவுகாலம் மலையகம் சார்பாக அமைச்சர்களாக இருக்கும் அவர்களிடம் அல்லவா கேட்க வேண்டும்

(யாவும் கற்பனை)


எம்.தாசன்

★ வெளி உலகத்தை நாம் பார்ப்பதில், கவனிப்பதில் மிகப் பெரிய தவறு இருக்கிறது. ஒன்று, பாதி சிந்தனையோடு பார்த்தபடி இருப்போம், அல்லது நமது அபிப்பிராயங்களை அதில் ஏற்றி பார்த்தபடி இருப்போம். எதிரே என்ன இருக்கிறதோ, அந்த விஷயத்தை அதன் குணங்களோடு நாம் பார்ப்பதில்லை.


★ எவருடைய வார்த்தைகளாவது சுருக்கென்று தைத்தால், எவருடைய இடைஞ்சலாவது காலை உருட்டினால், கலவரப்பட்டு விடக்கூடாது. நின்று நிதானித்து வலியைத் தாங்கிக் கொண்டு மெல்ல முன்னேற வேண்டும். நாம் சறுக்குவதற்கு இது மாதிரி விஷயங்கள் நமக்கு முன் வந்து தோன்றும்.





## கண்ணாமூச்சி



a ஷக்தி



b சூர்யா



c ஜெய்




பொருத்தமான முகத்தைக் கண்டுபிடியுங்கள்


## சூப்பர் சூப்பர்

01


02


03


04




இந்தப் படத்திற்குப் பொருத்தமான உதடு எது?

## யாரது

?

✱இவர் ஒரு திரைப்பட பின்னணிப் பாடகர்.

✱இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, மராத்தி ஆகிய மொழிகளில் பாடல்களைப் பாடியுள்ளார்.

✱இவர் மோதி விளையாடு திரைப்படத்தில் தேனிசைத் தென்றல் தேவாவுடன் இணைந்து பாடல் ஒன்றை பாடியுள்ளார்.

✱இவர் ஏ.ஆர்.ரகுமான் மூலம் தமிழ்த் திரைப்பட உலகில் அறிமுகமானவர்.

✱ இவர் சித்திரா, ஹரிணி, அனுராதா ஸ்ரீராம் போன்றவர்களுடன் இணைந்து பாடியுள்ளார்.

✱ இவர் 300 இற்கும் மேற்பட்ட பாடல்களையும் பாடியுள்ளார்.

இவர் யார்?




**படத்தைப் பார்த்து விடையைச் சொல்லுங்கள் பார்க்கலாம்....**

1. இது எந்தத் திரைப்படத்தின் காட்சி ?

## வெற்றி

தோல்விக் குழிகள் புதைக்க அல்ல
வெற்றியின் வேரை எழுப்ப...!
அவமானங்கள் அழிக்க அல்ல
உன்னை அரசனாக்க...!
பழிச்சொற்கள் பகைக்க அல்ல
உன்னை பண்பாளராக்க...!
துன்பங்கள் துயில அல்ல
உன் தூக்கம் கலைக்க...!
வறுமைகள் வாட்டி
வதைக்க அல்ல நீ வாழ்ந்து
காட்ட...!

## வார்த்தைப் புதிர் - 52




### இடமிருந்து வலம்

01. கோவில் என்றால் இது கண்டிப்பாக இருக்கும்.
02. சொல்.
06. முருகனின் கையில் இருக்கும்.
07. நாளுக்கு நாள் ஏறிச்செல்வது.
08. அம்மி மிதித்து ...... இது பார்க்க வேண்டும் என்பார்கள்.
12. இந்துக்கள் செய்யும் ஒரு சமயச் சடங்கு
14. இதுவும் மருந்தும் மூன்று நாளைக்கு என்பார்கள்.

### வலமிருந்து இடம்

05. நல்ல வசதி வாய்ப்பு இது பேச்சுவழக்கில் சொல்லும் போது.
10. ஓடு ஆங்கிலத்தில்.
11. துன்பம்.
16. அண்மையில் சூர்யா இரட்டைவேடத்தில் நடித்து அசத்திய படம்.

### மேலிருந்து கீழ்

01. கிராமிய நடனங்களில் இதுவும் ஒரு வகை. (குழம்பியுள்ளது)
02. சுக்ரீவனின் சகோதரன்.
03. இது ஒரு கலை.
05. சிறந்த நடிகை சில ஆண்டுகளுக்கு முன் விமான விபத்தில் இறந்தார். (குழம்பியுள்ளது)
06. இது கிடைக்காவிட்டால் திண்டாட்டம்தான்.
07. இதை மதியால் வெல்லலாம்.
08. இது இல்லை என்றால்.?
09. பிரபல தமிழ் நகைச்சுவை நடிகை. (குழம்பியுள்ளது)
13. இது அன்பை முறிக்கும்.

### கீழிருந்து மேல்

04. இது அடிக்க உதவும். (குழம்பியுள்ளது)
14. வில்லன் எதிர்ப்பதம்.
15. சிறு .... பெருவெள்ளம்

# பூங்காவின் புனரமைப்பிற்கென ஒதுக்கப்பட்ட பணம் எங்கே?



வவுனியா நகரில் உள்ள நகரசபைக்கு சொந்தமான பூங்காவனம் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுவதாக நகர மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

வவுனியா நகரசபையின் எல்லைக்குட்பட்டதாக நகரசபை பொதுநூலகத்திற்கு அண்மையில் இப்பூங்கா காணப்படுகின்றது. இப் பூங்காவானது 03.04.1997 இல் அப்போதைய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. அன்றிலிருந்து நகர மக்களாலும், தூர இடங்களில் இருந்துவரும் மக்களாலும் சிறப்பாக பயன்படுத்தப்பட்டு வந்த இப்பூங்காவானது தற்போது கைவிடப்பட்ட



நிலையில் காணப்படுகின்றது.

பூங்காவில் காணப்படுகின்ற பல மரங்கள் பட்டுப் போய் உள்ளதுடன் சிறுவர்களுக்காக அமைக்கப்பட்ட இராட்டினம், ஏணி, ஹெலிகொப்டர் என்பனவும் சிதைவடைந்து காணப்படுகின்றன. இதனால் தற்போது இப்பூங்காவிற்கு வந்துசெல்வோரின் தொகையும் குறைவடைந்துள்ளது.

இது தொடர்பாக நகரப் பகுதியைச் சேர்ந்த எஸ்.தேவசீலன் என்பவர் கூறுகையில்; முன்னைய காலங்களில் ஒவ்வொரு ஞாயிறும் பிள்ளைகளுடன் குடும்பமாக இந்தப் பூங்காவிற்குதான் போறனான். ஆனால், இப்ப போறதில்ல. பிள்ளைகள் விளையாடக்கூடிய வகையில் எதுவுமே இல்லை. எல்லாம் உடைஞ்சு போய் இருக்கு, போதாதற்கு நுளம்புத் தொல்லையும் அதிகம் என்றார்.

இதுதவிர, இப் பூங்காவினை கடந்த காலங்களில் திருமண வைபவம், பூப்புனித நீராட்டுவிழா என்பவற்றுக்கு போட்டோ, வீடியோ எடுப்பவர்கள் பயன்படுத்தி வந்ததுடன் குறும்படம், பாட்டு என்பவற்றுக்கான படப்பிடிப்பின்போதும் பயன்படுத்தி வந்திருந்தனர்.

இதனால், வருடாந்தம் குறிப்பிட்ட அளவிலான வருமானம் வவுனியா நகர சபைக்குக் கிடைத்தது. அதன்மூலம் இப் பூங்காவை சிறப்பாக பராமரிக்க முடிந்ததுடன் வேறு அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் மேற்கொள்ளமுடிந்தது. ஆனால், தற்போது பூமரங்களோ, விளையாட்டு உபகரணங்களோ சீராக இல்லாமையால் இப் பூங்கா பயன்பாடிற்கு இலாயக்கற்ற நிலையில் காணப்படுகின்றது. இதனால், வவுனியா நகர சபைக்கு கணிசமானளவு வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக புகைப்படப்பிடிப்பாளர் என்.நந்தா கூறுகையில்; முன்னைய காலங்களில் படப்பிடிப்பின்போது இங்குதான் வருவோம். நகர அபிவிருத்திக்கு அரசாங்கம் பணம் தருவதில்லை. இருக்கிறதைக் கொண்டு செய்யுறம் என்று நகரசபை உறுப்பினர் ஒருவர் மேடை போட்டு பேசினார். ஆனால், வருமானம் வரக்கூடிய இந்தப் பூங்காவை இப்படியே விட்டால் எப்படி வருமானம் வரும். ஏதாவது செய்தால்தானே அரசாங்கம் நிதி தரும் என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

யுத்தகாலத்தில் கூட சிறப்பாகக் காணப்பட்ட இப்பூங்காவில் தற்போது பூங்காவின் ஒரு பகுதியில் வெட்டப்பட்ட மரங்களின் குப்பைகள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக குவிக்கப்பட்டுள்ளதுடன் அக் குப்பையை செடிகள் மூடி மேடாக காட்சியளிக்கின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர்.

பூங்கா வளவுக்குள் தடைசெய்யப்பட்ட பாதீனியம் செடி பரவலாக காணப்படுகின்றது. நகரசபை பூங்காக்களிலேயே பாதீனியம் வளர்த்தா எப்படி ஊரைத் திருத்துவது என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

இது இவ்வாறு இருக்க, இந்த ஆண்டுக்கான வவுனியா நகரசபையின் வரவு-செலவுத் திட்டத்தில்



பூங்காவின் புனரமைப்புக்கென 20 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், பராமரிப்புக்காக 30 இலட்சம் ரூபா சபை அங்கீகாரத்துடன் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆனால், அதற்கான வேலைகள் இன்றுவரை நடைபெறவில்லை என்பதுடன் ஒன்றுமே இல்லாத பூங்காவை பராமரிக்கவா 30 இலட்சம் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளும், நகரசபை உறுப்பினர்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி நகர மக்களின் சொத்தாகிய பூங்காவை பாதுகாப்பார்களா?

**கே.வாசு**





# மூன்றாவது கண்டத்திலிருந்து தப்புமா இலங்கை

இரண்டு கண்டங்கள் தாண்டியாகிவிட்டது; மூன்றாவது கண்டம் எவ்வாறு அமையப் போகிறது ? ஜெனீவா ஐக்கிய மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் கடந்த வாரம் நிறைவேற்றப் பட்டதை அடுத்து கொழும்பு அரச வட்டாரங்களிலும் ராஜதந்திர வட்டாரங்களிலும் இக்கேள்வி எழுந்துள்ளது.

இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 25 நாடுகள் வாக்களித்தன. எதிராக, இலங்கைக்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்க ளித்தன. எட்டு நாடுகள் நடுநிலை வகித்தன. 2012 இல் ஜெனீவா அமர்வில் அமெரிக்கா இலங்கை குறித்து கொண்டுவந்த தீர்மானத்திற்குக் கிடைத்த வாக்குகள் 24 ஆகும். இம்முறை கூடுதலாக ஒரு நாடு வாக்களித் துள்ளது.

கடந்த ஆண்டு 15 நாடுகளின் ஆதரவைப் பெற்ற இலங்கை 2013 இல் இரண்டு நாடுகளின் ஆதர வை இழக்க வேண்டியதாயிற்று. ஐக்கிய நாடுகளின் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி அட்டவணை எப்போது ஆரம்பித்தது என்பதைப் பார்த்தால், 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப் பட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கி மூன் வன்னிக்குச் சென்று முள்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்ட நிலையில் வைக்கப் பட்டு இருந்த ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்களை பார்வையிட்டார். அதன்பின்னர் பான் கி மூன் கொழும்பு திரும்பி உரையாடினார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவும் பான் கி மூனும் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அக்கூட்டறிக்கையில் இலங்கை ஜனாதிபதி மூன்று உறுதிமொழிகளை வழங்கியிருந்தார்.

முதலாவது - போர்க்குற்ற விசாரணை நடத்துவது.

இரண்டாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவது.

மூன்றாவது இடம்பெயர்ந்தோர் அனைவரையும் அவர்களின் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவது.

இந்த மூன்று உறுதிமொழிகளையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாது. பான் கி மூனுக்கு வழங்கிய மூன்று உறுதிமொழிகளையும் அடிப்படையில் வைத்தே ஐக்கிய நாடுகளின் நகர்வுகள் இடம்பெறுகின்றன.

இரண்டாவது தடவையாக ஜெனீவா அமர்வில் இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்ட பின்னர் கொழும்பு அரசாங்கத்தின் அமைச்சர் டலஸ் அழகப்பெருமா செய்தியாளர் மாநாட்டில் ஒன்றை வெளிப்படையாகச் சொன்னார்:-

இலங்கையைப் பிரித்து இருநாடு களாக்கும் திட்டத்துடன்தான் அமெரிக்கா இலங்கை தொடர்பான தீர்மானங் களைக் கொண்டு வருகின்றது. அந்த இலக்கை அடைவதே அமெரிக்காவின் திட்டமா கும் என்பது அமைச்சர் டலஸ் அழகப்பெரு மவின் கருத்து.

கொடுத்த உறுதி மொழி களை நிறை வேற் றினால் அமெரிக்காவின் திட்டத்தை முறி யடிக்கலாம் என்பது கொழும்பு அரசாங்கத்திற் கு புரியவில்லை. அறுபது வருடங்களாக நீடித்து வருகின்ற இலங்கை இனப்பிரச்சினைக்கு சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடியதான நிரந்தர அரசியல்தீர்வு காணப்ப டும் வரை ஜெனீவா அமர்வுகள் இலங்கை அரசாங்கத் திற்கு தொடர்கதையாகவே இருக்கப் போகிறது என்பது அவதானிகளின் கருத்தாகும்.

கொழும்பு அரசாங்கம் தற்போது வழங்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் இனப்பிரச்சினைக்கு நிலைத்து நிற்கக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றைக் காணத்தவறும் பட்சத்தில், போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச நீதி மன்ற விசாரணை நடத்த வேண்டும் என்று மேற்குலக நாடுகள் 2014 ஜெனீவா அமர்வில் தீர்மானம் கொண்டு வந்தேயாகும் என்பது ராஜதந்திர வட்டாரங்களின் கருத் தாகும்.



அரசாங்கம் பேரினவாதக் கொள்கை யைக் கைவிட்டு இனப்பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல்தீர்வு ஒன்றைக் காணுமானால் போர்க் குற்ற விசாரணை மற்றும் பொருளாதாரத் தடை எல்லாவற்றையும் தாண் டமுடியும் என்பது அரசியல் அவதானி கள் கருத்தாகும். அரசாங்கம் நிய மித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லெண்ண ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் ஜெனீவா தீர்மானத்தின் அடிப்படை.



ஜெனீவா அமர்வின் முடிவில் அமெரிக்கா அது தொடர்பாக எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது. நல்லெண்ண ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தவறின் அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொள்ள நேரிடும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருக்கின்றது. அடுத்த கட்ட நடவடிக்கை பொருளாதாரத் தடையாக இருக்குமா? பொருளாதாரத் தடையாக இருக்காது என்று கொழும்பிலுள்ள அமெரிக்காவின் தூதர் செய்தியாளர்க ளிடம் தெரிவித்திருக்கின்றார்.

இராஜ தந்திரத்தில் நடக்கப் போவதைச் சொல்லா மல், அதற்கு எதிர்மாறாக கருத்து வெளியிடுவது தான் நடைமுறையாகும் என்பது அவதானிகளின் கருத்தா கும். இலங்கை தொடர்பாக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மான ஜெனீவா அமர்வில் நிறைவேற்றப்பட்டது குறித்து ஜனாதிபதி பராக் ஒபாமாவும் முதற்தடவையாக கருத்து வெளியிட் டுள்ளார்.

இலங்கையில் அமைதி மற்றும் உருதிப்பாட்டை ஊக் குவிப்பதில் சர்வதேச சமூகத்திற்கு கடப்பாடு உள்ளது என ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியிருக்கின்றார்.

இதேவேளை அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வாரம் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் ஆகிய நா டுகளுக்கு விஜயம் செய்தபோது கூறியிருக்கும் கருத்து கள் எமது நாட்டின் களநிலைவரத்திற்கும் பொருத்தமாக இருக்கும்.

சுதந்திரமான இறையாண்மைமிக்க பாலஸ்தீன நாடு உருவாகுவதைக் காண அமெரிக்கா உறுதிபூண்டுள்ளது. தங்களுக்கென சொந்த நாட்டை அமைத்துக் கொள்வதற்கு பலஸ்தீனர்களுக்கு உரிமை உள்ளது. இஸ்ரேலும் பலஸ்தீனமும் தடைப்பட்டுள்ள பேச்சு வார்த்தையை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும். இது குறித்து அமெரிக்கா தனது பங்களிப்பைச் செலுத் தும். இஸ்ரேலின் உண்மையான பாதுகாப்புக்கு பலஸ்தீனம் தனி நாடாகுவதே சிறந்த வழி என்று பராக் ஒபாமா கூறியிருக்கின்றார்.

இலங்கைக்கும் இது பொருத்தமாக அமையுமா?

ஆனால், இலங்கை அரசாங்கம் தனது கழுத் துக்கு தானே சுருக்குக் கயிறு ஒன்றைத் தயாரித் துள்ளது. அதுதான் தானே நியமித்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையாகும். அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை முழுமையாக நடைமுறைப்படுத்தி னால், சுருக்குக் கயிற்றிலிருந்து தப்பிக்க முடியும். இல்லையேல்... மூன்றாவது கண்டத்தைத் தாண்டு வது கஷ்டமான காரியம்.

அநாமிகன்




## மனித இரத்தம் பன்றியின் இரத்தத்தை விட சுவையானது





இந்த உலகில் உள்ள மனிதர்கள் அத்தனை பேரும் ஏதோ ஒரு வயில் வித்தியாசமானவர்களாகத் தான் இருக்கிறார்கள்.

அந்த வகையில் கலிபோர்னியாவைச் சேர்ந்த பச்சை குத்தும் கலைஞர் மிஷெல் (வயது 29). இவர் வாரத்திற்கு முப்பத்தி ஆறு லீற்றர் பன்றி இரத்தம் குடிப்பதாக டி.வி. நிகழ்ச்சி ஒன்றில் கூறியுள்ளார். பன்றி இரத்தம் மட்டுமின்றி, வாரத்திற்கு ஒரு முறை மனித இரத்தத்தையும் குடிப்பதாக கூறும் இவர், இரத்தத்தை உணவோடு கலந்தும் சாப்பிடுகிறார். ஓய்வெடுக்கும்போதும், ஓவியம் வரையும்போதும் இரத்தம் குடிப்பதை வழக்கமாக கொண்டிருக்கும் இவர், இதற்காகவே குளிர் சாதனப்பெட்டியில் உறைந்த இரத்தத்தை வைத்திருக்கிறார்.

இதைப்பற்றி மிஷெல் கூறுகையில்; ''சிலருக்கு சிகரெட் பிடிப்பது போல் எனக்கு இரத்தம் பிடித்திருக்கிறது. மனித இரத்தம் பன்றியின் இரத்தத்தை விட சுவையானது. ஆணின் இரத்தம் பெண்ணின் இரத்தத்தைவிட கெட்டியாக இருக்கும். முடிந்த வரை வாரத்திற்கு ஒருமுறை நெருங்கிய நண்பர்களின் கையிலிருந்து இரத்தம் குடிப்பேன். இரத்தம் எனக்கு பிடிக்கும் என்பதற்காக நான் காட்டேரி கிடையாது. இள வயதில் மன அழுத்தத்தால் என்னைக் காயப்படுத்திக் கொள்வேன். அப்பொழுது இரத்தத்தை உறிஞ்சும்போது ஏற்பட்ட பழக்கம்தான் இது'' என்கிறார்.

இதைப்பற்றி இதுவரை எதுவும் அறியாமல் இருந்த அவருடைய தாயார், மிஷெல் 4,500 லீற்றர் இரத்தம் குடித்திருக்கிறார் என்பதை கேட்டு மனம் உடைந்துப் போனார். பின்பு அவரை மருத்துவரிடம் சென்று சிகிச்சைப் பெறுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

## உருளைக்கிழங்கு மட்டும் சாப்பிட்டு உயிர்வாழும் இளம்பெண்

பொதுவாக உணவுப் பழக்கம் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகிறது. ஒருவர் விரும்பி சாப்பிடும் உணவு வகைகள் இன்னொருவருக்கு பிடிக்காமல் போவதுண்டு. ஆனால் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒரு இளம்பெண்ணுக்கோ அதிசயமான உணவுப் பழக்கம் இருக்கிறது.



அங்குள்ள வெல்லிங்பர்க் நகரில் வசிக்கும் கிளாரி ஜோன்ஸ்(23) என்ற பெண்ணுக்கு அவரது குழந்தைப் பருவத்தில் இருந்தே சாதாரண உணவின் மீது கடும் வெறுப்பு ஏற்பட்டு விட்டதாம்.

இவருடைய முழுப் பசியையும் போக்கும் உணவு எதுவென்றால் உருளைக்கிழங்குகள் தான். உருளைக்கிழங்குடன் பாலாடைக்கட்டியை சேர்த்து உணவு தயாரித்து சாப்பி டுகிறார். இத்துடன் முட்டைக்கோஸையும் அவ்வப்போது சேர்க்கிறார்.

இதுவரையில் இவர் ஏராளமான கூடைகள் உருளைக்கிழங்கை சாப்பிட்டு வந்துள்ளார். இவருக்கு மற்ற உணவுகளைக் கண்டாலே குமட்டல் வந்து விடுகிறதாம்.

இது குறித்து அவர் கூறுகையில், இது மோசமான பழக்கம் என்பதை உணருகிறேன். அதேநேரத்தில் புதிய உணவை சாப்பிட பயமாக இருக்கிறது. இதனால் நோய் வந்து விடுமோ என அஞ்சுகிறேன். பிறந்த நாள் ''கேக்''கை கூட சாப்பிட மாட்டேன். என்றாலும் என்னுடைய தாய் விருப்பத்துக்காக ஆண்டு தோறும் கேக் மட்டும் வெட்டிக் கொண்டாடுகிறேன் '' என்று தெரிவித்துள்ளார்.

## பிரிக்க முடியாத நட்பு



நாய்க்கும் ஆட்டுக்கும் ஆகவே ஆகாது. தனியாக மாட்டிக்கொள்ளும் குட்டி ஆடுகளை பல நாய்கள் வேட்டையாட துரத்துவது தான் இதுவரை நடந்திருக்கிறது. ஆனால், ஒரு நாய்க்கும் ஆட்டுக்கும் இடையே விசேஷ நட்பு பூத்திருக்கிறது என்றால் ஆச்சரியம் தானே. நம்பத் தான் வேண்டும். ஆட்டின் பெயர் தெல்மா. நாயின் பெயர் லவுசி. இது லேப்ரடர் வகை நாய் இனத்தைச் சேர்ந்தது. மற்ற மிருகங்களிடம் இலகுவில் ஒட்டாது. ஆனால், எப்படியோ இந்த நாய்க்கும் ஆட்டுக்கும் இடையே நட்பு தொடங்கி விட்டது. அடிக்கடி இவர்கள் சந்தித்து அளவளாவுவார்கள். ஒரு வரை மற்றவர் பார்க்க முடியாவிட்டால் மன அமைதியின்றி தவிப்பார்கள்.

இந்த பிரிக்க முடியாத நட்புக்கு தொடர்ந்து 2 நாட்கள் சோதனை நடத்தப்பட்டது. நாயின் சொந்தக்காரர் நாயை அவிழ்த்து விடாமல் கட்டிப்போடத் தொடங்கினார். இரண்டு நாள் கழித்து நாயை தன்னோடு வோக்கிங் அழைத்து வந்தார். தனது பிரியத்துக்குரிய நாயை காணாமல் தவித்துக் கொண்டிருந்த ஆடு, வோக்கிங் வந்து கொண்டிருந்த நாயை பார்த்து விட்டது.

அவ்வளவு தான். நேராக ஓடிப்போனது. நாயின் எஜமானன் மீது ஓங்கி ஒரே முட்டு. எதிர்பாராத இந்த தாக்குதலில் அவர் எகிறிப்போய் விழ, அப்புறமென்ன... நாய், ஆடு நண்பர்கள் அங்கிருந்து தப்பியோடின.

நாயின் எஜமானர் இந்த நட்பின் வலி(மை) தெரிந்து இப்போது அமைதியாகி விட்டார்.

## உடற்பயிற்சி செய்ததால் ஒவ்வாமைக்கு ஆளான பெண்

உடற்பயிற்சியை மேற்கொள்வதால் தான் ஒவ்வாமை நோய்க்கு ஆளாகுவதாக பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

நான்கு குழந்தைகளின் தாயான கெஸிவ் பீவெர் என்ற 33 வயதுடைய பெண்ணே இவ்வாறு விபரீத நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்.

இவர் சாதாரண பெண்களைப் போன்று உடற்பயிற்சியை மேற்கொள்ளும்போது இவரது இதயத் துடிப்பின் வீதம் அதிகரிப்பதாகவும் அது மரணத்தை தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைவதாகவும் தெரிவித்துள்ளார்.

பஸ்ஸுக்காக ஓடுவது அல்லது குழந்தைகளை துரத்தி விளையாடுவது என இவர் நாளாந்த செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்.



அதன்பின் இவரது முகம் சிவந்து வீங்கிப் போய்விடுகிறதாம். இது ஆபத்தை தோற்றுவிப்பதாக அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

சாதாரண பெண்களைப் போன்று நான் இயங்கும்போது எனது கண்கள் வீங்கத் தொடங்குகின்றன. பின்பு ஐந்து நிமிடங்களில் எனது கண்கள் முழுமையாக மூடிவிடுகின்றன. விசேடமாக நான் குழந்தைகளுடன் நீண்ட நேரத்தை செலவிடும்போது இத்தகைய நிலையை எதிர்கொள்கிறேன்.

ஒரு நாள் எனது கணவருடன் பனிச் சறுக்கலில் ஈடுபடும்போது முதலில் இத்தகைய தாக்குதலை எதிர்கொண்டேன். எனது முகத்தை பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கு மிகவும் சிரமப்பட்டேன்.

நான் ஒவ்வாமை நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதை யாரும் நம்பமாட்டார்கள். இதனைக் கூறும்போது நான் சோம்பேறியென எண்ணுகின்றனர்.

ஆனால், இதுதான் உண்மை. நான் முன்பு விளையாட்டு வீராங்கனையாகவும் உடற்பயிற்சி கூடத்திற்கு செல்பவளாகவும் இருந்தேன்.

கேசியா தனது 20 ஆவது வயதில் இவ்வாறான ஒவ்வாமை நோயினால் முதன்முதலில் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போலிச் சாமியாருக்குக் கிடைத்த தர்மஅடி



மனித சக்திக்கு அப்பாற்பட்ட ஆற்றல் தனக்கு இருப்பதாகச் சொல்லிக் கொண்டு உலகை ஏமாற்றும் போலிச் சாமியார்கள் நாட்டில் மூலை முடுக்கெல்லாம் உலவுகிறார்கள். அதில் சிலரின் லீலைகள் வெளிச்சத்திற்கு வந்திருந்தாலும் இன்றும் பல இடங்கில் இந்த போலிச்சாமியார்களின் அட்டகாச லீலைகள் அரங்கேறிக் கொண்டுதான் இருக்கின்றன.

இந்த ஆன்மீகவாதிகளிடம் பக்தர்கள் தங்கள் குறைகளை போக்கிக் கொள்ளத்தான் அவர்களைத் தேடிச் செல்கிறார்கள்.

பக்தி அவர்களிடம் அதிகரிக்கும் போது, முழுக்க முழுக்க அந்த சாமியாரே தங்கள் கடவுள் என்கிற நிலைக்கு போய் விடுகிறார்கள்.

அப்படிப்பட்ட சூழ்நிலையில், அழகான பக்தைகளை தங்கள் வலையில் வீழ்த்தி, சில சாமியார்கள் தங்களது ஆசைகளைத் தீர்த்துக் கொள்கிறார்கள்.

போலிச் சாமியார்களை மட்டும் இந்த விஷயத்தில் குற்றம் சொல்ல முடியாது. அவர்களே கதி என்று அவர்களை சுற்றிச்சுற்றி வரும் அப்பாவி பொது ஜனங்களும் தங்களை அறியாமலேயே ஒருவகையில் அதற்கு காரணமாகி விடுகிறார்கள்.

ஜோதிடம் பார்க்கிறேன், தோஷம் கழிக்கிறேன் எனக் கூறி, பெண்களிடம், சில்மிஷம் செய்து வந்த மோசடி சகோதரர்களை, பெண்கள் அமைப்பினர் கையும் களவுமாகப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் அண்மையில் இந்தியாவின் புனே பகுதியில் இடம்பெற்றுள்ளது. பீகாரைச் சேர்ந்தவர்கள். ஷியாம்லால் பாண்டே, சந்தோஷ் பாண்டே, மகாவித் பாண்டே மற்றும் ராஜ்குமார் பாண்டே. சகோதரர்களான இவர்கள், மகாராஷ்டிரா மாநிலம், புனே நகரின் யமுனா நகர் என்ற பகுதியில், சாமியார் போல உலா வந்தனர்.

ஜோதிடம் பார்க்கிறோம்; தோஷங்களை கழிக்கிறோம், அதன் மூலம் குடும்பத்தில் அமைதியை ஏற்படுத்துகிறோம் என இவர்கள் கூறியதால், ஏராளமான பெண்கள், ஜோதிடம் பார்க்கச் சென்றனர்.

அவர்களில் சில இளம் பெண்களை, பாண்டே சகோதரர்கள் பாலியல் கொடுமைக்கு ஆளாக்குவதாக புகார் எழுந்தது. அந்தப் பகுதியில் பிரபலமான பெண்கள் அமைப்பான, தாமினி படையினர் என்ற பெண்கள் அமைப்பில், பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் கூறினர். பெண்களை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தும் பாண்டே சகோதரர்களை, கையும் களவுமாக பிடிக்கத் திட்டமிட்ட தாமினி அமைப்பினர் இளம் விதவைப் பெண் ஒருவரை, சாமியார் சகோதரர்களிடம் அனுப்பி வைத்தனர்.

முன்னதாக, அப்பெண்ணுக்கு பொட்டு, பூ, வளையல் எல்லாம் வைத்து ஜோதிடம் பார்க்க அனுப்பி வைத்தனர்.

நடந்த சம்பவம் குறித்து அந்தப் பெண் கூறியதாவது:

பாண்டே சகோதரர்களில் மூத்தவரான, ஷியாம்லால் பாண்டே இருந்த அறைக்குள் என்னை அனுப்பி வைத்தனர். அவர் என்னை உற்றுப் பார்த்துவிட்டு என் கையைப் பிடித்து இழுத்து வைத்து ரேகை பார்க்கும் பாவனையில், சில்மிஷம் செய்தான். உன் கணவர், உன்னை தினமும் அடித்து நொறுக்குவாரே... எனக் கேட்டான். நானும், உண்மை என்பது போல தலையாட்டினேன். உனக்கும், உன் கணவனுக்கும் தோஷம் உள்ளது.

அவனுக்கு முன்பாக நீ இறந்து விடுவாய். தோஷம் கழிக்க வேண்டும். அதற்கு, 2,000 ரூபாய் தர வேண்டும் என்றான்.

மேலும், இப்போதே தோஷம் கழித்து விடுவேன். அதற்கு முன், சில அங்க அடையாளங்களைப் பார்க்க வேண்டும் என, கூறி முறைக்கேடாக நடக்க முயன்றார். ஏற்கனவே கூறி வைத்தது போல், வெளியே இருந்த, வாகினி படையினருக்குத் தகவல் கொடுத்தேன். அவர்கள் உள்ளே புகுந்து, செருப்பு, துடைப்பத்தால், ஷியாம்லாலை, பின்னி எடுத்து, கரும்புள்ளி போட்டு, ஊர்வலமாக பொலீஸ் ஸ்டேஷன் அழைத்து சென்றனர்.

உண்மையில், இதுபோன்ற சம்பவங்கள் இனியும் தொடராமல் இருக்க வேண்டும் என்றால் பக்தர்கள் மத்தியில், குறிப்பாக பக்தைகள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட வேண்டும்.

கோவிலுக்குச் சென்றால் அங்கு அமைதியான சூழ்நிலையில் நிச்சயம் மக்களுக்கு மனச்சாந்தி கிடைக்கும். ஆனால், அங்குள்ள போலிச் சாமியார்கள் பற்றி உங்களுக்கு தெரியாதே? இனியாவது, போலிச் சாமி யாராக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தச் சாமியாராக இருந்தாலும் சரி, அவர்களைத் தேடிச் செல்வதை விட்டு விடுங்கள்.

வேண்டும் என்றால் கோவிலுக்குச் செல்லுங்கள். உங்கள் பிரச்சினையை இறைவனிடம் ஒப்புவியுங்கள் அதுபோதும்.



பொகவந்தலாவை கெர்க்கஸ்வோல்ட் மத்தியபிரிவு தோட்ட முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த தேர்த் திருவிழா அண்மையில் இடம் பெற்றது. இத் திருவிழாவில் இடம் பெற்ற இரதபவணி மற்றும் பறவைக்காவடி நிகழ்வுகளை இங்கு காணலாம். சா.சதீஸ்குமார்

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்

# விதயாதரம்

## கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை


**1 தொடக்கம் 34 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

01. இப்பாடலில் விபரிக்கப்பட்டுள்ள தோல் வாத்தியம்.
தோலில் செய்ததாம்
திருமண பந்தத்திலும் கொட்டுவதாம்
சிறப்பிலும் சில தருணம்
கோவிலும் செல்லுமாம்.




(1) (2) (3)

02. இப்பாடலினால் விபரிக்கப்பட்டுள்ள பொருள் எது ? பொருத்தமான உருவின் கீழ் கோடிடுக.
மிகச் சுவையாம்
பற்றையில் தோன்றுமாம்
மஞ்சள் நிறமாம்
முள்ளுடையதாம்




(1) (2) (3)

03. உருவை நன்கு விபரிக்கும் விடையைத் தெரிவு செய்க.



01) விளையாட்டு, களைப்பு, பாடசாலை
02) விளையாட்டு , உடற்பயிற்சி, மகிழ்ச்சி
03) உடற்பயிற்சி, பணம், நேரம்

04. இவ்வுருக்களின் நிரையிலே அடுத்ததாக வரவேண்டிய பொரு த்தமான உருவைக் கீழே தரப்பட்டுள்ள உருக்களிலிருந்து தெரிவுசெய்க.



A B C i ii iii

05. ஒரு பிள்ளை, காலையில் எழுந்து பாடசாலை செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்க வேண்டிய கருமங்கள் உள்ளன. அவற்றுள் முதலிலும் இறுதியிலும் செய்ய வேண்டிய கருமங்கள் முறையே கீழே காட்டப்பட்டுள்ளன.
இக்கருமங்களில் சரியான வரிசைக் கிரமத்தைக் காட்டுவதற்கு இரண்டாம், மூன்றாம், நான்காம் சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான கருமங்களைக் காட்டும் விடை யாது?

அ) நித்திரை விட்டெழுதல், ஆ) ........................................
இ) ........................................ ஈ) ........................................
உ) வீட்டிலிருந்து புறப்படுதல்.

| 1) | 2) | 3) |
|---|---|---|
| ஆ) உடை அணிதல் | ஆ) உணவு உண்ணுதல் | ஆ) முகம் கழுவுதல் |
| இ) முகம் கழுவுதல் | இ) முகம் கழுவுதல் | இ) உடை அணிதல் |
| ஈ) உணவு உண்ணல் | ஈ ) உடை அணிதல் | ஈ) உணவு உண்ணுதல் |

* 06ஆம், 07ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களை வாக்கியங்களில் எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கும் விடையின் கீழே கோடு இடுக.

06. சிவந்த,வண்ண, நிறைந்த
01) பெயர்ச் சொல்லாக 02) அடை மொழியாக 03) வினை முற்றாக

07. ஆடுக , நடந்தான் , பறந்தன
01) அடை மொழியாக 02) பெயர்ச்சொல்லாக 03) வினைச் சொல்லாக

* **பின்வரும் பாடலை வாசித்து 8 ஆம், 9ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

வண்ணச் சிறகை வானில் உதைத்து
வட்டமிடுதே சிட்டுக் குருவி
எட்ட நின்று பார்த்த போதும்
எண்ணில் ஆசை மனதில் பார்

08. மனதில் ஆசையை உண்டு பண்ணியது எது ?
01) சிறகு 02) வட்டம் 03) சிட்டுக்குருவி

09. இப்பாடலில் வெளிப்படுத்தப்படும் அடை மொழி ஒன்று ?
01) வண்ண 02) எட்ட 03) பார்த்த

10. **“விளையும் பயிரை முளையிலே தெரியும்”** என்பதன் கருத்து :
01) பெரியவர்களாக வளர சிறியவர்களுக்கு உதவவேண்டும்.
02) பயிர் நன்றாக வளர சிறந்த விதை தேவை.
03) ஒருவனின் சிறு வயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

11. சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள் . என்பதைக் குறிக்கும் சரியான பழமொழி:
01) துள்ளுகிற மாடு பொதி சுமக்கும். 02) புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது.
03) காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

* **பின்வரும் கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

12. “கிராமங்களில் உள்ளவர்களே கிளித்தட்டு விளையாடுவதில் விருப்பம் உடையவர்கள்”
01) கிளித்தட்டு விளையாடுவதில் கிராமத்தில் இருப்பவர்கள் மட்டுமே விருப்பம் உடையவர்கள்.
02) நகரங்களில் வசிப்பவர்கள் கிளித்தட்டு விளையாடுவதில் விருப்பம் இல்லாதவர்கள்.
03) கிராமங்களில் வசிப்பவர்கள் கிளித்தட்டு விளையாடுவதில் விருப்பம் இல்லாதவர்கள் அல்லர்.

13. அம்மாவைக் கண்டதும் கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக் குருவியைப் போன்று கண்ணன் வாசற் பக்கம் ஓடினான். பின்வருவனவற்றுள் எது கைப்பிடியிலிருந்து விடுபட்ட சிட்டுக்குருவியைப் போல என்பதன் கருத்தைத் தருவது :
01) மிக மெதுவாக வாசற்பக்கம் சென்றான். 02) இறக்கை கட்டிப் பறந்து சென்றான்.
03) மிக வேகமாக வாசற்பக்கம் சென்றான்.

14. கடலில் எப்போதும் இருப்பது :
01. மீன்களும் நீரும் 02. அலைகளும் மீன்களும்
03. நீரும் உப்புச் சுவையும்

15. ஒரு புத்தகத்தில் எப்போதும் இருப்பது:
01. எழுத்தும் சொற்களும் 02. வாக்கியமும் பந்தியும் 03. தாள்களும் பக்கங்களும்

16. ஒரு வீதியில் இரு மின்கம்பங்களுக்கிடையே 3 கொடிகள் வீதம் தொங்கவிடப்பட்டு அவ் வீதியை அலங்கரித்தனர். வீதியில் 7 மின்கம்பங்கள் இருந்தன எனின் அவற்றுக்கு இடையே தொங்கவிடுவதற்கு எத்தனை கொடிகள் பயன்படுத்தப்பட்டிருக்கும்:
01) 16 கொடிகள் 02) 12 கொடிகள் 03) 18 கொடிகள்


* **17ஆம், 18ஆம் வினாக்களுக்குப் பின்வரும் படங்களை அவதானித்துச் சரியான விடையைத் தெரிவு செய்க .**

17.



01) பிள்ளையொன்று புத்தகம் படிக்கிறது.
02) பிள்ளையொன்று பரீட்சைக்காகப் படிக்கிறது.
03) பிள்ளையொன்று இரவு நேரத்தில் படிக்கிறது.

18.




01) இது காலை நேரம்.
02) இது மாலை நேரம்.
03) ஒளி, பிரகாசம், இயற்கை

19. பொழுதுகளை முறைப்படி காட்டும் விடை:
01) காலை - பகல் - மாலை - இரவு
02) இரவு - பகல் - காலை - மாலை
03) பகல் - மாலை - காலை - இரவு


20) பருமனின் ஒழுங்கு வரிசையில் பிரதேசங்களைக் காட்டும் சரியான ஒழுங்கு முறை:
01) நாடு - மாகாணம்- உலகம் - கிராமம்
02) கிராமம் - உலகம் - மாகணம் - நாடு
03) கிராமம் - மாகாணம் - நாடு - உலகம்

பிரபல ஆசிரியர் : திரு. மு. ஜெயமதன், எஸ்.நவகாந்தன்

21. அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.




22.




23. நான்கு மனிதர்கள் ஒரே இடத்தில் இருந்து புறப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் நடந்து 16 கிலோமீற்றர் தூரம் சென்றனர். ஒரு மணித்தியாலத்தில் ஒரு மனிதன் நடந்த தூரம் எவ்வளவு ?

01) 5 கிலோ மீற்றர் 02) 1 கிலோ மீற்றர் 03) 4 கிலோ மீற்றர்

* **பின்வரும் பாடலைப் பூர்த்தி செய்யப் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்க.**

வெள்ளை .......* .... ஒளி
சிந்திச் சிதறி விரைந்தே பாயுதம்மா
கொள்ளை இன்பங் கொண்டு நெஞ்சம்
குதித்துக் குதித்து ...●....


24. * என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

01) நிலா 02) நட்சத்திரம் 03) சூரியன்

25. ● என்ற குறியீடு உள்ள இடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

01) பாயுதம்மா 02) துள்ளுதம்மா 03) ஆடுதம்மா

* பின்வரும் வரிப்படத்தில் உள்ள வட்டமானது வாழைப்பழத்தைச் சாப்பிட விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது. செவ்வகமானது மாம்பழத்தைச் சாப்பிட விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது. முக்கோணியானது அன்னாசியை விரும்பும் பிள்ளைகளைக் காட்டுகிறது . இத்தகவல்களுக்கேற்ப 26 ஆம், 27ஆம் வினாக்களுக்கு விடை தருக .




26. வாழைப்பழத்தையும் அன்னாசியையும் மாம்பழத்தையும் சாப்பிட விரும்பும் பிள்ளை யார் ?

01) ராஜா 02) குணால் 03) மாலா

27. அன்னாசியையும் மாம்பழத்தையும் சாப்பிட விருப்பமுடையவரும் வாழைப்பழத்தை விரும்பாதவருமான பிள்ளை யார்?


01) குணால் 02) மணி 03) எமிலி

28.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 5 | 3 | 7 | 2 | 6 | 5 |
| 4 | 3 | 4 | 2 | 9 | 6 | 3 | 2 |

இங்கு அதிக தடவை வந்துள்ள இலக்கம் யாது? ..................

29.



இங்கு அதிக தடவை குறிக்கப்பட்டுள்ள வடிவம் எது? ..................................

30. சூரியனைக் கண்ட தாமரை போல என்பதற்குப் பொருத்தமான நிகழ்ச்சி எது ?

01) அழுது கொண்டிருக்கும் பிள்ளை தாயின் முகத்தைக் கண்டு சிரித்தல்.

02) அழுது கொண்டிருந்த பிள்ளை தானே சிரித்தல்.

03) அழுது கொண்டிருந்த பிள்ளை தாமரைப் பூவைக் கண்டு சிரித்தல்.

31. எல்லா மிருகங்களுக்கும் மட்டும் பொதுவான இயல்பு எது?

01) மாமிசத்தை மட்டும் உண்ணுதல்.

02) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.

03) உடல் தோலினால் மூடப்பட்டிருத்தல்.

32. எல்லா மாணவர்களுக்கும் பொதுவான இயல்பு எது?

01) ஏதேனும் ஒரு வகுப்பில் கற்றல்.

02) அதிக எண்ணிக்கையான நண்பர்களைக் கொண்டிருத்தல்.

03) தரம் ஐந்தில் கற்றல்.

குமார், குமரன், நாதன் ஆகிய மூன்று நண்பர்களும் முத்திரை சேகரிப்போராவர்.

* மூவரிடமும் தற்போது 75 முத்திரைகள் உள்ளன.
* ஒவ்வொருவரிடமும் 20 இற்கு மேற்பட்ட முத்திரைகள் உள்ளன.
* குமரனும் குமாரும் சமமான முத்திரைகள் வைத்திருக்கிறார்கள்.
* இருவரையும் விட நாதன் சற்று அதிகமாகவே வைத்திருக்கின்றான்.

33. குமாரிடம் 24 முத்திரைகள் இருக்குமாயின் குமரனிடம் இருக்கும் முத்திரைகள் எத்தனை?

01) 25 முத்திரைகள் 02) 24 முத்திரைகள் 03) 30 முத்திரைகள்

34. நாதனிடமுள்ள முத்திரைகளின் எண்ணிக்கை யாது ?


01) 27 முத்திரைகள் 02) 28 முத்திரைகள் 03) 35 முத்திரைகள்

* 35 தொடக்கம் 40வரையான வினாக்களுக்குப் . புள்ளிக்கோட்டில் விடை தருக.

35. கீழே காட்டப்பட்டுள்ள கோலத்தை அவதானித்து ? அடையாளம் இடப்பட்டுள்ள இடங்களுக்குப் பொருத்தமான எண்ணை எழுதுக.

2 ⟶ 4 + 16
6 + 36 ⟶ 38 .................
5 ⟶ ? + ?

36. பின்வரும் கோலத்தை அவதானித்து அடுத்து வர வேண்டிய உருவை வரைக.



* பின்வரும் இரு ஆங்கிலச் சொற்களிலும் B,D,E,F,N எழுத்துக்குப் பதிலாக 1,2,3,4,5 என்னும் இலக்கங்கள் ( இதே ஒழுங்கிலின்றி ) இடப்பட்டு, அவ்விலக்கங்களில் ஏறுவரிசையில் எழுதப்பட்டுள்ளது.

BEND = 1235
FEED = 1134

37. எழுத்து E ற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது ? ....................................

38. எழுத்து D ற்குப் பதிலாக இடப்பட்டுள்ள இலக்கம் யாது ? ....................................

39. அடைப்பினுள் தரப்பட்டுள்ள எழுத்துக்களுள் மூன்றினைப் பொருத்தமான முறையில் ஒழுங்குபடுத்தி மனிதருக்குப் பயனுள்ள விலங்கு ஒன்றின் பெயரைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| ம | ச | எ | க |
| வ | ரு | கு | து |

.................

40. முதல் எழுத்து கண்ணில் உண்டு மண்ணில் இல்லை. இரண்டாவது எழுத்து கல்லில் உண்டு கடலில் இல்லை மூன்றாவது எழுத்து விலையில் உண்டு தலையில் இல்லை. இக்கூற்றை வைத்து ஆக்கப்படும் மூன்றெழுத்துச் சொல்யாது? .................

## வினாத்தாள் - 02 1 1/4 மணித்தியாலம்

01. பின்வரும் பகுதியை வாசிக்க.

> நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம், விரித்தது போன்ற மலைத் தொடர்கள் இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி. நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள், அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள், அக்காட்சிகளைப் பார்த்து கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன் .

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

1) இங்கு கீதம் இசைத்து வருவது யாது ? ..........................................................

2) **செயற்கை** என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது ? ..................................

3) **பழங்கள்** என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக. ........................................

4) **மரம்** என்ற சொல்லின் பன்மைச் சொல்லை எழுதுக. ............................................

5) இங்கு இடம் பெறும் உவமானத்தை எழுதுக. ...........................................................

6) மேற்குறித்த விடயம் எத்தகைய இடம் பற்றியது . .................................................

02. **அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.**

01) ஒளியைப் பரப்புவது ........................................................ (விளக்கு, விலக்கு)

02) மாணவர் தமது ............................களைச் சிறப்பாகச் செய்தார். ( பனி, பணி)

03. **பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக .**

01) பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன.......................................................

பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

01) நட்சத்திரம் வானில் மின்னுகிறது.....................................................................

04. **பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.**

01) ஏட்டுச்சுரக்காய் ..............................................................................................

02) கைகூடுதல் ..................................................................................................

05. **பின்வரும் ஒவ்வொரு பழமொழிகளினதும் கருத்தை எழுதுக.**

01) அடிமேல் அடிஅடித்தால் அம்மியும் நகரும் ........................................................

02) கடவுளை நம்பினோர் கைவிடப்படார் ..............................................................

06. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

01) ஐயோ பாம்பு ......................................................................................

02) கடவுளே காப்பாற்றமாட்டியா .....................................................................

07. **சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.**

01) மோகன் / பாடசாலைக்குச்/ பாடம் /படித்தான்/ நேற்றுப்/ சென்று

.............................................................................................................

02) மகாவித்தியாலயம் / கல்வியிற்/ பாரதி /விளங்கியது / சிறந்து

.............................................................................................................

08. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை எழுதுக.

01) விளையாட்டு .....................................................................

02) பாடசாலை ........................................................................

03) வைத்தியசாலை .................................................................

09. **கருத்தைத் தமிழில் எழுதுக.**

01) Good Morning ................02) May I go home? .................

03) Silence please ..........................................

10. ஒவ்வொரு சிங்களச் சொல்லிற்கும் பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக.

01) அம்ப கச ........................................ 02) பொள் கச ................

11. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ:

01) பவளமல்லிகை 02) குவளை 03) அந்திமந்தாரை 04) நந்தியாவட்டை

12. இரவில் திரியும் பறவையாக அமைவது :

01) ஆந்தை 02)கிளி 03) கொக்கு 04) மஞ்சள் குருவி

13. இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் நாடு :

01) சீனா 02) இந்தியா 03) கொழும்பு 04) இலங்கை

14. இலங்கையை சிலோன் என்ற பெயரால் அழைத்தவர்கள் :

01) ஆரியர் 02) தமிழர் 03) ஆங்கிலேயர் 04) சிங்களவர்

15. உலோகப் பாத்திரத்தில் இட்டு வைக்கக் கூடாத பொருள்:

01) நீர் 02) சீனி 03) அரிசி 04) உப்பு

16. மின்சாரத் தொழிலாளர் பயன்படுத்தும் உபகரணம்:

01) சுத்தியல் 02) கயிறு 03) மின் சோதிப்பான் 04) கத்தி

17. பொருட்களை வாங்கும் போது கவனிக்க வேண்டியது :

01) விலை 02) காலாவதியாகும் திகதி

03) உற்பத்தித்திகதி 04) மேற்கூறிய யாவும்

18. பனிக்கட்டியை நீரில் இடும் போது :

01) தாழும் 02) மிதக்கும் 03) உறையும்

19. வீதியால் நடந்து செல்வோர்:

01) சாரதிகள் 02) விலங்குகள் 03) பாதசாரிகள்

20. வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச் செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்காக வளர்க்கப்படும் தாவரம் :

01) காவட்டம் புல் 02) செவ்வந்தி 03) துளசி

21. 


படத்தில் உள்ள விலங்கை விபரிக்கும் சரியான கூற்று :

01) முலையூட்டி, விவசாயி, உணவு

02) இடம்பெயரும் இனத்தைப் பெருக்கும், வளர்ச்சியடையும்

03) தாவரஉண்ணி, மூலிகை, அதிசயமானது

22. முதல் உருவிற்குச் சமமான உருவைத் தெரிவு செய்க.




01) 02) 03)

23. வானத்து உடுக்களை எண்ணி விட முடியுமா ? இங்கு உடுக்கள் என்பது :

01)முகில்கள் 02) பறவைகள் 03) நட்சத்திரங்கள்

24. ஒரு பாடசாலையில் உள்ள ஆண் பெண் மாணவர்களைக் குறிக்கும் உருவாக அமைவது :



01) 02) 03)

25. அதிகளவு நீர் தேவைப்படும் பயிர்களில் ஒன்று :

01) வாழை 02) பயறு 03) நெல்

26. இலங்கையின் தேசியக் கொடியில் உள்ள விலங்கு எது?

01) சிங்கம் 02) யானை 03) வாளேந்திய சிங்கம்

27. போர் : அழிவு : ....................................: பொசுங்கல்

01)தீ 02) நீர் 03) சேதம் 04) வெய்யில்

* **27 தொடக்கம் 32 வரையிலான ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்பட்டுள்ள சொற் சோடியின் தொடர்பை விளங்கி அதே தொடர்புடைய மேலுமொரு சொற்சோடியை ஆக்குவதற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள்.**

28. சிலந்தி : சிலந்திவலை ............................................ : காவியம்

01) இலக்கியம் 02) ஆசிரியர் 03) கவிதை 04) கவிஞன்

29. நாட்காட்டி : நாள் ..........................................................: சொல்

01) நூலாசிரியர் 02) புத்தகம் 03) அகராதி 04) இலக்கியம்

30. சதுரம் : சதுரமுகி ................................ : நான்முகி

01) கோடு 02) வட்டம் 03) கோளம் 04) முக்கோணம்


31. அக்கினி மூலை : தென் கிழக்கு .................................: வடகிழக்கு

01) மாலயம் 02) வாயுமூலை 03) ஆவி மூலை 04) ஈசானமூலை

32. பதிப்பாசிரியர் : சஞ்சிகை ............................ : திரைப்படம்

01) இயக்குநர் 02) பாடல் 03) கமரா 04) நடிப்பு

33. இப்படத்தில் காட்டப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடை எது ?



01) புத்தகம், பென்சில், பேனா

02) அதிபர், ஆசிரியர், மாணவர்

03) பாடங்கள், சமூகக்கல்வி , மாணவர்

04) இலக்கியம், உரைநடை, கவிதை

34. இப்படத்தில் காட்டப்படும் தகவல்களை உள்ளடக்கிய விடை எது ?



01) தேயிலை, தென்னை, இறப்பர்

02) பாடசாலை, வலயம், கோட்டம்

03) ஆசிரியர், மாணவர், தொழிலாளர்

35. இலங்கையின் A தர வீதியைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம் :

01) நீலம் 02) கபிலம் 03) சிவப்பு 04) பச்சை

36. இலங்கை அரசாங்க இலச்சினையில் நிலைத்திருப்பதைக் குறிப்பது :

01) தர்மச்சக்கரம் 02) பூவிதழ்கள் 03) நிறைகுடம் 04) சூரியனும் சந்திரனும்

37. இலங்கையில் முதன் முதலில் அமைக்கப்பட்ட குளம் :

01) திசவாவி 02) பசவக்குளம்

03) வவுனிக்குளம் 04) கிரித்தலைக்குளம்

38. மின்னல் தாக்கும் சாத்தியம் கூடுதலாக இருப்பது:

01) வாகனத்தில் செல்லும் போது 02) வயல் வெளியில் வேலை செய்யும் போது

03) தார் வீதியில் செல்லும் போது

39. உருவில் ஒரு சவர்க்காரம் காணப்படுகின்றது



அதன் 01) விளிம்புகளின் எண்ணிக்கை யாது ? ...............................

02) செவ்வக முகங்களின் எண்ணிக்கை யாது ? ..........................

40. 9540 உடன் 605 ஐக் கூட்டுக. கூட்டுத்தொகை யாது? ..........................

41. 6075 இலிருந்து 450ஐக் கழிக்க வித்தியாசம் யாது? ..........................

42. உப்புத்தூள் விரைவாகக் கரைவது?

01) வெந்நீரில் 02) தண்ணீரில் 03) கொதித்தாறிய நீரில்

43. தரப்பட்டுள்ள விளையாட்டுப் பொருளின் பெயர்:



01) தள்ளுவண்டி

02) சுழல்வண்டி

03) சில்லுவண்டி

44. சுயசரிதை என்பது :

01) பிறரைப்பற்றிய விமர்சனம்

02) தன்னைப்பற்றிய தகவல்கள்

03) மாதாந்த அறிக்கை

45. தரப்பட்டுள்ள தகவல்களுக்குப் பொருத்தமான விஞ்ஞானியின் பெயரை எழுதுக.

பாடசாலையில் பல குறும்புகள் செய்தார்

தந்தையின் களஞ்சியத்துக்கு தீ மூட்டினார்

உலகிற்கு மின் விளக்கைத் தந்தார்

01) கிரகம் பெல் 02) மார்க்கோணி 03) தோமஸ் அல்வா எடிசன்

46. ஆறு கடலுடன் கலக்கும் இடம் :

01) முனை 02) ஏரி 03) கழிமுகம் 04) கண்டி


47. 500g சீனியின் விலை ரூ 42.50 உம் 250g பருப்பின் விலை ரூ30.00 உம் ஆகும். 1/2 Kg பருப்பும் 1/4 Kg சீனியும் வாங்கிய குமரன் ரூபா 100.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் யாது ? ..........................

48. 315 மாணவர்கள் ஒரு செயலமர்வுக்காக 3 சம குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர் எனின் ஒரு குழுவிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாது ? ..........................

49. ஒரு கடிகாரமானது 15 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது. ஆனால் 20 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது என நினைத்துக் கடிகாரத்தை சீர் செய்தபின் கடிகாரம் 12.00மணி காட்டியது ஆயின் சரியான நேரத்தை எழுதுங்கள் ..........................

50. தரப்பட்ட உருவின் சுற்றளவு யாது ?

..........................





51. ஒரு சிறிய கோழிப் பண்ணையில் நாளாந்தம் 25 கோழிகள் முட்டையிடும். சனிக்கிழமை மாலை அப் பண்ணையில் இருந்து கொண்டு வரப்பட்ட முட்டைகளின் எண்ணிக்கை 125 எனின் அவன் எத்தினத்திலிருந்து சேகரிக்கப்பட்ட முட்டைகளைக் கொண்டு வந்தான் . ..........................

52. ரூ 47.00 விலையுள்ள ஒரு பயிற்சிப் புத்தகத்தையும் ரூ 12.50 விலையுள்ள பேனா வையும் வாங்குவதற்கு என்னிடம் ரூ 50.00 உள்ளது. மேலும் எவ்வளவு பணம் தேவைப்படும். ..........................

53. ஒரு போத்தலில் உள்ள நீரின் கனவளவு 750ml ஆகும். அத்தகைய 9 போத்தல்களில் உள்ள நீரின் கனவளவை மில்லிலீற்றரில் தருக. ..........................

54. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவை மொத்த உருவின் பரப்பளவின் பின்னமாகக் காட்டுக.



..........................

55. எனக்கு 12 விளிப்புகளும் 8 உச்சிகளும் உள்ளன. எனது ஒவ்வொரு முகமும் சதுரமானது நான் யார்?

..........................

56. **தரப்படும் சந்தர்ப்பத்தைத் தொடர்ந்து பொருத்தமான எழுவாய், பயனிலை களுடன் ஐந்து சொற்களுக்குக் குறையாத ஆறு வாக்கியங்கள் எழுதி நிகழ்வைப் பூரணப்படுத்துக.**

கமலன் பாடசாலையை விட்டு வீடு செல்லும் போது வாகன நெரிசல் ஏற்பட்டது. ஏனென்று அவனுக்குப் புரியவில்லை. அப்போது நோயாளர் காவுவண்டி ஒன்று ஒலி எழுப்பியவாறு வந்து கொண்டிருந்தது. வீதியின் மத்தியில் ஒருவர் இரத்த வெள்ளத்தில் ..........................

01)..........................

02) ..........................

03) ..........................

04) ..........................

05) ..........................



# அழகு..,
உடல் நலம்..,
குழந்தை வளர்ப்பு..,
சாதனை மகளிர்..,
ஆலோசனை..,
உளவியல்..,

## சிநேகிதியே

# கண்களில் இடும் மேக்கப்பை அகற்றுவது எப்படி?


தனு ரசாக்

பெண்களின் முகத்தை முதலில் பார்ப்பவர்களுக்கு அவரைக் கவர்வது அவர்களது அழகிய விழிகளே. அவ் அழகிய கண்களை பெண்கள் பல வழிகளில் ஒப்பனைகளை செய்துகொண்டு மேலும் அவற்றை அழகாகக் காட்டுவதில் அன்றைய காலம் பெண்கள் மட்டுமல்ல இன்றைய காலப் பெண்களும் சளைத்தவர்களல்லர் என்கின்றார் நம் அழகியற் கலை நிபுணரான தனு ரசாக்.

ஆயினும் சில பெண்கள் முகத்திற்கு குறிப்பாக கண்களுக்கு மேக்கப் போடுகின்றனர்.

அதாவது கண்களுக்குக் கீழே மை, மஸ்காரா, ஐ லைனர், ஐ ஷேடோ இன்னும் பல வகைகளில் கண்களுக்கு மேக்கப் போடுகின்றனர். ஆயினும் இன்றைய அவசர காலவோட்டத்தில் இவற்றை முறையாக அகற்றாமல் சிலர் அப்படியே உறங்கச் சென்றுவிடுவார்கள்.

இவ்வாறு அவற்றை அகற்றாமல் இருப்பது கண்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். இவற்றிற்கென்றே தற்போது சந்தையில் விற்கப்படும் மேக்கப் ரிமூவர் மூலம் முறையாக அகற்ற வேண்டும். இவற்றை அகற்றாமல் விட்டால், கண்களுக்கடியில் நாளடைவில் கருவளையங்கள் தோன்றி பார்ப்பதற்கு கண்கள் அவலட்சணமாகிவிடும்.

அத்தோடு தினமும் இரவில் கண்களுக்கான நைட் கிறீம் தடவலாம். அது கண்களின் சோர்வுத் தன்மையை நீக்கும், கண்களுக்கடியிலான சுருக்கங்கள், கருவளையங்கள், கோடுகளையும் நீக்கும்.

காலையிலும் இரவிலும் வெள்ளரிக்காயை வட்டமாக நறுக்கி, கண்களின் மேல் வைத்துக் கொண்டு 10 நிமிடங்கள் ஓய்வெடுத்தால், கண்களுக்கடியில் வீக்கம் குறைந்து கருமையும் மறையும்.

தற்போது இவற்றிற்கென்றே அழகு நிலையங்களில் பல சிகிச்சை முறைகள் வந்துள்ளன. அவற்றின் மூலம் இப்பிரச்சினைக்குரிய தீர்வினையும் பெற்றுக்கொள்ளலாம். அதிக டென்சனினாலும் சிலருக்கு கண்களுக்கு கீழே இவ்வாறான கருவளையங்கள் ஏற்படும். இதன்போது பன்னீரில் பஞ்சை நனைத்து கண்களின் மேல் வைத்து எடுக்கலாம்.

# சுகம் தரும் இல்லம்

எஸ்.பிரியதர்ஷினி


சுத்தமான இல்லமே சுகம் தரும் இல்லம். நாம் வசிக்கும் இல்லத்தை தூய்மையாய் வைத்துக் கொள்ள சில ஆலோசனைகள்.

* பொருட்களை தேவைக்கு மேல், அவை எவ்வளவு மலிவாகக் கிடைத்தாலும் வாங்கிச் சேர்க்காதீர்கள். அவை வீணே இடத்தை பிடித்துக் கொள்ளும்.
* பயனற்ற பொருட்களைக் கழிப்பதில் தயக்கம் வேண்டாம். பின்னால் எதற்காகவேனும் பயன்படும் என்று குப்பையைச் சேர்க்காதீர்கள்.
* மூதாதையர் மீது பற்றும் பாசமும்வைக்க வேண்டியதுதான். அதற்காக அவர்கள் உபயோகித்த பழைய பொருட்களை சேர்த்து வைக்காதீர்கள். அவர்கள் கூறிய அறிவுரைகளைக் கடைப் பிடிப்பதே நாம் அவர்கள் மீது வைத்திருக்கும் மரியாதை.
* அதிக கடவுள்களின் படம் இருந்தால்தான் அதிக பக்தி உடையவர் என்று பொருள் அல்ல. கரப்பான்களும், பல்லிகளும் சூழ, துடைத்து வைக்க இயலாமல் வைத்திருப்பதைக் காட்டிலும் சிறிய படங்களை சுத்தமாக வைத்துக் கொள்வது நல்லது.
* வீட்டை போட்டோ ஸ்டுடியோ ஆக்கி விடாதீர்கள். ஆல்பம் வைத்துக் கொள்ளுங்கள்.
* இலவசமாகக் கிடைக்கிறது என்று வீடு முழுவதும் காலண்டர்களை மாட்டி வைக்காதீர்கள்.
* பால் கணக்கு, டெலிபோன் நம்பர் ஆகியவற்றை சுவற்றில் எழுதி வைக்காதீர்கள். சிறிய டயரியில் குறிக்கப் பழகுங்கள்.
* குறைந்த எண்ணிக்கையில் பாத்திரங்கள் பயன்படுத்தப் பழகுங்கள்.
* கொடியில் துணிகளைத் தோரணமாகத் தொங்கவிடாதீர்கள். பார்க்க சகிக்காது.
* தேவைக்கு ஏற்ப உணவைத் தயாரியுங்கள். சமையல் அறையில் பழைய உணவுகளின் வாசனை இருந்தால் சுகாதாரத்திற்கு கேடு.
* தலையணை சிக்குப் பிடிக்காமல் அடிக்கடி துவைத்து உபயோகிக்க வேண்டும்.
* ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு இடம், அந்தந்த இடத்தில் அந்தந்தப் பொருட்கள் (A place for everything and everything in its place) என்ற பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.



## தையல் பயிற்சி

### ஏ லைன் சட்டை (A Line Frock)



45' அகலமான புடைவை 3y தேவைப்படும்.

**தேவையான அளவு**

* தோள்பட்டை அளவு - 14/2 = 7
* பின் உயரம் - 50 + 1-1/2
* மார்பின் சுற்றளவு - 32/4 = 8 இடுப்பின் சுற்றளவு - 28/4 = 8
* தோள்பட்டையிலிருந்து = 18 இடுப்பு வரை
* இடை சுற்றளவு = 34
* கை உயரம் = 5+1-1/2 = 6-1/2
* கை சுற்றளவு = 10/2+1=6
* கழுத்தின் அகலம் = 4
* கழுத்தின் உயரம் = 5-1/2

படத்தில் காட்டியவாறு முன்பகுதியை வேறாக வெட்டிக்கொள்ள வேண்டும்.

பின் பகுதிக்கு 1' உயர்த்திக்கொள்ள வேண்டும். முன் அக்குள் பகுதியை உள்நோக்கி வரைந்துகொள்ள வேண்டும். பின் அக்குள் பகுதி வெளிநோக்கி வரைந்துகொள்ள வேண்டும்.



குறிப்பு: நீலநிறம் - முன்பகுதி
சிவப்பு - பின்பகுதி

தையல் கலையின் பரிமாணங்கள் தருபவர் :-
திருமதி. ராஜேஸ்வரி குமார் - பண்டாரவளை

# பாடல்



படம் விஸ்வரூபம்
இசை ஷங்கர் இஷான் லாய்
பாடலாசிரியர் - கமல்
பாடியவர்(கள்) கமல்ஹாசன், சங்கர் மகாதேவன்

உன்னைக் காணாது நான் இன்று நான்
இல்லையே
விதை இல்லாமல் வேர் இல்லையே
உன்னைக் காணாது நான் இன்று நான்
இல்லையே
விதை இல்லாமல் வேர் இல்லையே

ஆ: கிருஷ்ணா...

ஆ: உன்னைக் காணாது நான் இன்று நான்
இல்லையே
விதை இல்லாமல் வேர் இல்லையே

நிதம் காண்கின்ற வான் கூட நிஜமல்ல
இதம் சேர்க்கும் கனாக் கூட சுகமல்ல
நீ இல்லாமல் நான் இல்லையே

உன்னைக் காணாமல்...

கமதநிசா... நிதபமகமரி ரிகரிச
உன்னைக் கணாமல் பெண் நெஞ்சு
தடுமாறுதே
விதை இல்லாமல் வேர் இல்லையே

நலின மோக ஷாமல ரங்க

ஆ: சரிவர தூங்காது வாடும்
அனுதினம் உனக்காக ஏங்கும் ராதா தான்
உனக்கென ராதா தான்
உனக்கொரு ராதா தான்

த்ருகிதா த்ருகிடதி...// ததகிடதகதா...//
ததகிட தக தா ததகிட தக தா தாகு தாகு தா...

அவ்வாறு நோக்கினால் எவ்வாறு நாணுவேன்
கண்ணாடி முன் நின்று பார்த்துக் கொண்டேன்
ஒன்றாகச் செய்திட ஒரு நூறு நாடகம்
ஒத்திகைகள் செய்து எதிர் பார்த்திருந்தேன்
எதிர் பாராமலே... அவன்...
எதிர் பாராமலே... அவன்...
ஓ... பின்னிருந்து வந்து என்னை
பம்பரமாய்ச் சுழற்றி விட்டு
உலகுண்ட பெரு வாயில் எந்தன்
வாயோடு வாய் பதித்தான்
இங்கு பூலோகம் என்றொரு பொருள் உள்ளதை
இந்த பூங்கோதை மறந்தாளடி

உடல் அணிந்த ஆடைபோல்
எனை அணிந்து கொள்வாயா
இனி நீ இனி நீ கண்ணா
தூங்காத என் கண்ணின்
துயில் உரித்த கண்ணன் தான்
இனி நீ... இனி நீ...
இது நேராமலே... நான்
உன்னை பாராமலே... நான்
இந்த முழு ஜென்மம் போய் இருந்தால்
என்று அதை எண்ணி வீண் ஏக்கம் ஏங்காமலே
உன்னை மூச்சாக்கி வாழ்வேனடா

தக தக தீம்...//// தக தீம் தக தீம்
தொங்கு தொங்கு தகிட தொங்கு
தக திலாங்கு தொம்கிடதக

மாய திருடன் கண்ணா கண்ணா
காம கலைஞன் கண்ணா கண்ணா
மாய திருடன் கண்ணா கண்ணா
காம கலைஞன் கண்ணா கண்ணா
மாய திருடன் கண்ணா
காம கலைஞன் கண்ணா
கண்ணா கண்ணா
காம கலைஞன் கண்ணா கண்ணா

## சமந்தாவை மிரளவைத்த ஆந்திர ஹீரோக்கள்!



தமிழ், தெலுங்கில் வெளியான, நீ தானே என் பொன் வசந்தம் படத்திற்கு பின் தெலுங்குப் படங்களில் கூடுதல் கவர்ச்சியை வெளிப்படுத்தி வருகிறார் சமந்தா. இதனால், இதுவரை அவரை சீண்டாமலிருந்த அங்குள்ள இளவட்ட ஹீரோக்கள், இப்போது சமந்தா பக்கம் திரும்பியிருப்பதோடு, அவரது கால்ஷீட் வேண்டும் என்பதற்காக, சமந்தாவின் படக் கூலியையும் தாறுமாறாக உயர்த்தி விட்டனர். இதனால், அடுத்து அதிரடி நடிகையாக வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்பட்டிருப்பதை எண்ணி, மிரண்டு போயிருக்கிறார் சமந்தா.

## அஜீத்துடன் மோதும் வில்லன்!

பொல்லாதவன் படத்திற்கு பின் வில்லனாக பிரபலமான கிஷோர், ஹரிதாஸ் படத்தில் நாயகனாக நடித்திருந்தாலும், தொடர்ந்து அப்படி நடிப்பதில் தனக்கு ஆர்வமில்லை என்கிறார். 'என்னைப் பொறுத்தவரை, நான் ஒரு நடிகன். அதனால், வில்லன், குணச்சித்திரம், கதையின் நாயகன் என, கதைகளைப் பொறுத்து மாறு பட்ட வேடங்களில் நடிக்கவே விரும்புகிறேன்...' என்று சொல்லும் கிஷோர், ''தற்போது அஜீத்துடன் வில்லனாக நடிக்கும், வலை படம், தன்னை பெரிய வில்லன் நடிகராக்கும்...'' என்கிறார். அதையடுத்து பொலிவுட்டுக்கு செல்லும் திட்டமும் வைத்துள்ளார்.

## விஜய் படத்தில் வாய்ப்புக் கேட்ட அஞ்சலி!



## நயனை வீழ்த்திய டாப்ஸி!




விஷ்ணுவர்தன் இயக்கும், வலை படத்திற்கு, நயன்தாராவை அஜீத்துக்கு ஜோடி என்றுதான் முதலில் ஒப்பந்தம் செய்தனர். ஆனால், இப்போது டாப்ஸிக்கும் அஜீத்துடன் காட்சிகள் கொடுத்து, அவரையும் இன்னொரு நாயகிபோல் உருவாக்கி விட்டனர். இதனால், இப்படம் தமிழில் தனக்கு பெரிய ரீ-என்ட்ரியை கொடுக்கும் என்று கூறி வந்த நயன்தாரா, இப்போது, வலை படத்தில், தான் ஓரங்கட்டப்படுவதாக சோகமாக கூறி வருகிறார்.

## சினி...

## பிரபுதேவாவின் அடுத்த நாயகி!

நயன்தாராவுடனான பிரிவுக்கு பின் எந்த நடிகையையும் தன்னை நெருங்க விடாமல் இருந்து வந்த பிரபுதேவா, இப்போது, ஜாக்குலைன் என்ற பொலிவுட் நடிகையுடன் தென்படுகிறார். தற்போது பிரபுதேவா இந்தியில் இயக்கிவரும், ''ராமய்யா வஸ்தாவய்யா'' என்ற படத்தின் நாயகியான இந்த ஜாக்குலைன், சில நள்ளிரவு பார்ட்டிகளிலும், மேற்படி நடிகருடன் காட்சி கொடுப்பதால், இவர்களை இணைத்து கிசுகிசு பரவியுள்ளது.



உணவுக்கட்டுப்பாடு,
உடற்பயிற்சி என்று
தீவிரமாக கடைபிடித்து வ
காஜல் அகர்வால் சமீபகா
அனுஷ்கா பாணியில் யோ
எடுத்து வருகிறார். இதற்க
இளம் யோகா பயிற்சியாள
அழைத்து வரும் காஜல், அ
நபருக்கு தேவையான தங்
செலவுகளையும் படாதிபதி
தலையிலேயே கட்டுகிறா



## தனுஷுக்கு 8 லட்சம்!

''ஒய் திஸ் கொலைவெறி'' பாடலின் ஹிட், தனுஷை அதிக சம்பளம் வாங்கும் பின்னணிப் பாடகராகவும் உயர்த்தியுள்ளது. சமீபத்தில் கேடி பில்லா கில்லாடி ரங்கா படத்தில், ஒரு பாடலை பாட ஐந்து இலட்சம் ரூபா சிம்பு வாங்கியுள்ள நிலையில், இரண்டாம் உலகம் படத்தில் ஒரு பாட்டுப் பாட எட்டு இலட்சம் ரூபா வாங்கியுள்ளார் தனுஷ். இதையடுத்து, விரைவில் இந்தப் போட்டியில் தனுஷை முந்திச் செல்ல வேண்டும் என்று அடுத்த போட்டியில் குதித்துள்ளார் சிம்பு.




சினேகாவை திருமணம் செய்து கொள்வதற்கு முன், மந்தமாக இருந்த பிரசன்னாவின் மார்க்கெட், திருமணத்திற்கு பின் சூடு பிடித்துள்ளது. தமிழில், சென்னையில் ஒரு நாள், கல்யாண சமையல் சாதம் உட்பட மூன்று படங்களில் நடிப்பவர் தெலுங்கில், பாய் என்ற பெயரில் நாகார்ஜூனா நடிக்கும் படத்தில், பொலிஸ் வேடத்தில் நடிக்கிறார். இன்னும் சில படங்களில் நடிக்கவும் பேசி வருகிறார். இதையடுத்து, ''சினேகாவை கைபிடித்த நேரம்தான், கைநிறையப் படங்களை கைப்பற்றி, நடித்து வருகிறேன்...'' என்கிறார் பிரசன்னா.



விஷால், ஆர்யா என்று, இரண்டாம் தட்டு ஹீரோக்களை எட்டிப் பார்த்து விட்ட அஞ்சலிக்கு, அடுத்து விஜய், அஜீத் என்று டூயட் பாடும் ஆசை மேலோங்கி உள்ளது. அதற்கான நேரம் பார்த்து வந்தவர், விஜய்யிடம், தன் விருப்பத்தை நேரடியாகவே தெரிவித்துள்ளார். அதற்கு விஜய்யும், 'நேரம் வரும்போது சொல்கிறேன்...' என்று அஞ்சலிக்கு ஆறுதலான பதிலை சொல்ல, செம உற்சாகத்தில் இருக்கிறார் அஞ்சலி.

## ஐஸ்வர்யா இயக்கத்தில் கவுதம்



கோலிவுட்டில் 3 படத்துக்குப் பின்னர் கவுதம் கார்த்திக்கை வைத்து ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா அடுத்த புதிய படம் தொடங்கினார்.

பெயர் சூட்டப்படாத இந்தப் படத்தை ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரிக்கிறது.

கவுதம் கார்த்திக் நடித்த முதல் படமான ''கடல்'' படமும் ஐஸ்வர்யா இயக்கிய முதல் படமான ''3''உம் வசூல் ரீதியாக பெரும் நஷ்டத்தை விநியோகஸ்தர்களுக்கு ஏற்படுத்தின.

இந்நிலையில் முதல் படங்களில் தோல்வியைச் சந்தித்த இருவரும் இப்போது இணைந்திருக்கிறார்கள்.

யுவன் சங்கர் ராஜா இசையில் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் ஆரம்பித்துள்ளனர்.

3 படம் தோல்வியடைந்த போதும் இப்படத்தில் வெளியான கொலைவெறி பாடல் பெரிய வெற்றியைப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.




...ப்பாடு,
...சி என்று
...கடைபிடித்து வந்த
...கர்வால் சமீபகாலமாய்,
... பாணியில் யோகா பயிற்சியும்
...ருகிறார். இதற்காக, ஒரு
...கா பயிற்சியாளரை கூடவே
... வரும் காஜல், அந்த
...தேவையான தங்கும்
...ளையும் படாதிபதிகளின்
...லயே கட்டுகிறாராம்.

## ஏப்ரலில் சேட்டை

சேட்டை கோடை விடுமுறையை முன்னிட்டு ஏப்ரலில் வெளியாகிறது. இந்தி 'டெல்லி பெல்லி'யின் தமிழ் ரீமேக்கான சேட்டையில் ஆர்யா, சந்தானம், பிரேம்ஜி, ஹன்சிகா, நாசர், அஞ்சலி ஆகியோர் நடித்துள்ளனர். கண்ணன் படத்தை இயக்கியுள்ளார். தனுஷின் முதல் தயாரிப்பான 'எதிர்நீச்சல்' படமும் ஏப்ரலில் வெளியாவது உறுதி செய்யப்பட்டுள்ளது. சிவ கார்த்திகேயன், ப்ரியா ஆனந்த் நடித்துள்ள இந்தப் படத்துக்கு அனிருத் இசையமைத்துள்ளார். தனுஷ் சில பாடல்களை பாடியுள்ளார். இந்த இரு படங்களுடன் கேடி பில்லா கில்லாடி ரங்காவும் கோடை கொண்டாட்டத்தில் இணைந்து கொள்ளும் எனத் தெரிகிறது.

## பாடல்



**திரைப்படம்:-** கரகாட்டக்காரன்
**பாடகர்கள்:-** எஸ்.பி.பி, சித்ரா
**இசை:-** இளையராஜா
**பாடலாசிரியர்:-** கங்கை அமரன்

**ஆண்:** குடகு மலை காற்றில் வரும்
பாட்டுக் கேக்குதா என் பைங்கிளி
குடகு மலை காற்றில் வரும் பாட்டுக்
கேக்குதா என் பைங்கிளி
ஏதோ நினைவு தான்
உன்னச் சுத்தி பறக்குது
என்னோட மனசு தான் கண்டபடி தவிக்குது
ஒத்த வழி என் வழி
தானே மானே

(குடகு மலை காற்றில் )

மானே மயிலே மரகதக் குயிலே
தேனே நான் பாடும் தெம்மாங்கே
பூவே பொழுதே பொங்கி வரும் அமுதே
காதில் கேட்டாயோ
என் வாக்கே ஒன்ன எண்ணி
நான் தான் ஒரு ஊர்கோலம் போனேன்
தன்னந்தனியாக நிக்கும்
தேர் போல ஆனேன்
பூப் பூத்த சோலையிலே பொன்னான
மாலையிலே நீ வந்த
வேளையிலே மயிலே -
நீர் பூத்த கண்ணு ரெண்டும்
நீங்காத தாகம் கொண்டு பாடும் பாட்டு

**பெண்:** குடகு மலை காற்றில் ஒரு
பாட்டுப் பாடுது இந்த பைங்கிளி
குடகு மலை காற்றில் ஒரு
பாட்டுப் பாடுது இந்த பைங்கிளி

**பெண்:** மறந்தால் தானே
நினைக்கணும் மாமா
நினைவே நீதானே நீதானே
மனசும் மனசும் இணைஞ்சது மாமா
நெனச்சு தவிச்சேனே நான் தானே
சொல்லிவிட்ட பாட்டு தெற்கு
காத்தோட கேட்டேன்
தூது விட்ட ராசா மனம்
தடுமாற மாட்டேன்
ஊரென்ன சொன்னா என்ன
ஒண்ணாக நின்னா என்ன
உன் பேரை பாடி நிப்பேன் மாமா
தூங்காம உன்ன எண்ணி துடிச்சாலே
இந்தக் கன்னி வா மாமா

(குடகு மலை காற்றில் )

**பெண்:** ஏதோ நினைவு தான் ஒன்னச்
சுத்தி பறக்குது என்னோட மனசு தான்
கண்டபடி தவிக்குது

**ஆண்:** ஒத்த வழி என் வழி தானே மானே

**பெண்:** (குடகு மலை காற்றில்)

**ஆண்:** (குடகு மலை காற்றில்)



# அமைச்சரின் சாதுரியமான பதில்

ஒரு தடவை மன்னன் தனது நாட்டுக்கு வருகை தந்திருக்கும் கல்விமான்கள் புடைசூழ நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்தார்.

அமைச்சரைப் பலர் முன்னிலையில் அவமானப்படுத்த எண்ணிய மன்னன் தனது உடைகளைக் கழற்றி அமைச்சரிடம் கொடுத்து, ''அமைச்சரே! காற்றே இல்லை. ஒரே புழுக்கமாக இருக்கிறது. கொஞ்ச நேரம் என் உடைகளை வைத்திரும்'' என்று கூறினான்.

அமைச்சர் மரியாதையுடன் மன்னனின் உடைகளை வாங்கிக் கொண்டார்.

பிறகு மன்னன் தம்முடன் இருந்த கல்விமான்களை நோக்கி, ''இப்போது அமைச்சர் ஒரு கழுதை சுமக்கும் அளவுக்கு பொதி சுமக்கிறார்,'' என்று கூறிவிட்டுச் சிரித்தார்.

அமைச்சர் அமைதி நிரம்பிய குரலில், ''மன்னர் அவர்களே! என்ன இருந்தாலும் உங்களை நீங்களே கேவலப்படுத்திக் கொள்ளக் கூடாது. நான் தங்களுடைய உடைச் சுமையை தான் சுமந்து கொண்டிருக்கிறேன். அதை வைத்து ஒரு கழுதையின் சுமையை நான் சுமப்பதாக எப்படிக் கூறலாம்? என்ன இருந்தாலும் தாங்கள் மன்னரல்லவா. தாங்களே தங்களைக் கழுதை என்று வர்ணித்துக் கொள்வது எனக்குக் கூட சங்கடமாக இருக்கிறது,'' என்றான்.

சுற்றிலும் இருந்த கல்விமான்கள் அமைச்சரின் சாதுரியமான பதிலைக் கேட்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

## எகிப்து பிரமிட்கள்



எகிப்து நாட்டு மன்னர்கள் தங்களது மரணத்திற்குப் பின் தங்களைப் புதைக்க, உள்ளே ஒரு தந்திர அமைப்புடன், வெளியே கற்கோபுரத்துடன் கட்டிய கட்டிடங்களே பிரமிட்டுகள் எனப்படும்.

எகிப்து நாட்டில் சுமார் 70 பிரமிட்கள் உள்ளன.

இவைகளில் மிகவும் பிரபலமானவை கெய்ரோ நகருக்குப் பக்கத்தில் உள்ள மூன்று பிரமிட்களாகும்.

இதில் மிகப்பெரியது பாரேஷ் ஷி யோப்ஸ் என்ற பிரமிட்தான். 481 அடி உயரம் கொண்டது. இது உலக அதிசயங்களுள் ஒன்றாகும்.

## கோபத்திற்கு விநோதமான தண்டனை!


ரெப் பிராமர் என்ற மனிதர் முப்பது வருடங்கள் பேசாமல் ஏன் சிறிய சத்தம் கூடச் செய்யாமல் மௌன விரதம் பூண்டிருந்தார்.

இந்தத் தண்டனையை இவர் தனக்குத்தானே விதித்துக் கொண்டார். இவர் மகா முன் கோபி, ஆராய்ந்து பார்க்காமல் ஆத்திரங்கொள்ளும் குணம் படைத்தவராக இருந்தார். அவர் மணந்து கொண்ட மனைவி, புதுமணப் பெண் திடீரென்று பரிதாபகரமான மரணத்துக்கு உள்ளானாள். இதைக் கண்ட பிராமர் தன்னுடைய முன் கோபத்தினாலும், முரட்டுத் தனத்தாலும் தான் அவள் இறந்திருக்க வேண்டுமென்று பயந்து இந்தத் தண்டனையைத் தனக்குத் தானே விதித்துக் கொண்டார்.

## விஞ்ஞானியின் அவசரம்

பரிணாமவியலின் தந்தை எனப்படுபவர் சார்லஸ் டார்வின். அவர் ஒருநாள் வண்டுகளைப் பிடிப்பதற்காக ஒரு மரத்தின் பட்டைகளை உரித்துக் கொண்டிருந்தார். அதில் புதுமாதிரியான வண்டுகள் இரண்டு இருந்தன.

அவற்றில் ஒன்றைப் பிடித்து இடதுகையில் வைத்துக் கொண்டு, இரண்டாவது வண்டைப் பிடிக்கப் போகும்போது மூன்றாவது வண்டொன்றும் அம்மரத்தின் பொந்திலிருந்து வெளிப்பட்டது.



உடனே டார்வின் அதையும் பிடித்துக் கொள்ள வேண்டும் என்ற அவசரத்தில் இடது கையில் இருந்த வண்டை வாயில் போட்டு அடக்கிக்கொண்டு,வலதுகையில் இருந்த வண்டை இடதுகைக்குள் மாற்றுவதற்குள் வாயில்

போட்டு அடக்கிக்கொண்டிருந்த வண்டிலிருந்து ஒருவகை புளிப்புத் திரவம் சுரந்து நாக்கை அரிக்க, உடனே கீழே துப்பினார். அப்படித் துப்பிய வேகத்தில் வலது கையிலிருந்த வண்டு பறந்துவிட்டது.

பொந்திலிருந்து வெளிப்பட்ட மூன்றாவது வண்டும் பறந்துவிட்டது.

இதற்காக டார்வின் மிகவும் வருத்தப்பட்டார்.

## தெரிந்து கொள்வோம்!

* நல்ல பாம்பு ஒரு தடவைக்கு சுமார் 200 முட்டைகள் இடும்.
இது தன் ஆயுட் காலத்தில் சுமார் 4 ஆயிரம் மனிதர்களைக் கொல்லக்கூடிய விஷத்தை உற்பத்தி செய்கிறது.
ஆபிரிக்காவில் காணப்படும் கிங் கோப்ரா என்னும் நாகம் தான் உலகில் கொடிய விஷம் கொண்டது.
இது மனிதனை கடித்தால் ஒரே நிமிடத்தில் மரணம் ஏற்படுமாம்.



* பெண் நுளம்பு ஒரு தடவைக்கு 400 முட்டைகள் முதல் ஆயிரம் முட்டைகள் வரை இடும். இந்த முட்டைகள் கூட்டுப்புழுவாக உருமாறி அதன் பின் நுளம்பாகிறது. இந்த மாற்றத்தை அடைவதற்கு 14 முதல் 20 நாட்கள் ஆகின்றன.
நுளம்பு 25 நாட்கள்தான் உயிர்வாழும்.

## இந்த வார குட்டீஸ்



பெயர்:- டிலுக்ஷன்
பெற்றோர்:- சிவகுமார், ரேவதி.
இடம் :- அக்கரப்பத்தனை.



பெயர்:-திக்ஷா
பெற்றோர்:- பிரபுராம், சசிரேகா.
இடம் :- மாத்தளை.

உங்கள் செல்லங்களின் புகைப்படங்களும் இடம்பெற வேண்டுமானால் உங்கள் விபரங்களை உதயசூரியன், இந்த வார குட்டீஸ் என குறிப்பிட்டு எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள் அல்லது thinaupcountry@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள். மேலதிக தொடர்புகளுக்கு 0112540695.

## பாலைவன எலி!


பகல் முழுவதும் வளைக்குள் ஓய்வெடுத்து, இரவில் சூரிய வெப்பம் தணிந்த பிறகு பாலைவனத்தில் இரை தேட ஆரம்பிக்கும். இதன் உடலில் வியர்வை உண்டாவதில்லை. மிகச் சிறிய அளவில் சிறுநீர் வெளியேறும். இவ்வகை எலிகள் 3 ஆண்டுகள் வரை தண்ணீர் குடிக்காமல் உயிர்வாழும் ஆற்றல் உள்ளவை.

## சிந்தனைத் துளிகள்

* சுறுசுறுப்பானவர்களுக்கு கண்ணீர் விட நேரம் இருக்காது.
* அன்பைக் கடன் கொடு. அது அதிக வட்டியுடன் உன்னிடம் திரும்பிவரும்.
* சரியாக சிந்திக்கத் தெரிந்து கொண்டால் உலகத்தையே மாற்றிவிடலாம்.
* உள்ளம் வசமானால் உலகம் வசமாகும்.

★ **முதலாம், இரண்டாம் வினாக்களில் தரப்பட்ட உருவங்களில் ஒன்று மற்றைய தில் இருந்து வேறுபட்டது. வேறுபட்ட உருவைத் தெரிவு செய்க.**


(1) 1. 2. 3. 4.




(2) 1. ஆ 2. ஐ 3. ஒ 4. ஏ

★ **3ஆம், 4ஆம் வினாக்களில் ஒவ்வொரு கட்டத்திலும் உள்ள சோடி உருக்க ளிடையே ஏதோவொரு ஒத்த தன்மை உள்ளது. ஒரு கட்டம் ஒத்த தன்மை அற்றது அவ்வுருவைத் தெரிவு செய்க.**

(3) 1. 2. 3.




(4) 1. 2. 3.



★ **5ஆம் 6ஆம் வினாக்களில் தரப்படும் சொற்றொடர்கள் உணர்த்தும் பொருத்த மான உருவைத் தெரிவு செய்க.**


(5) நிலக்கீழ்த்தண்டு, மருந்து, மனிதன்

1. 2. 3.



(6) முலையூட்டி, தீமை, இரவு, வளை

1. 2. 3.



★ **பின்வரும் பாடலை வாசித்து 7, 8 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

ஆலும் வேலும்
பல்லுக்குறுதி
நாலும் இரண்டும்
சொல்லுக்குறுதி

(7) மேற்குறித்த வரிகளில் குறிப்பிடப்படும் தாவரங்கள் எத்தனை

1. நான்கு 2. இரண்டு 3. எட்டு

(8) மேற்குறித்த வரிகளில் குறிப்பிடப்படும் நூல்களில் ஒன்று

1. நல்வழி 2. திருக்குறள் 3. மூதுரை

(9) ''வேலியே பயிரை மேய்ந்தாற் போல்'' என்பதன் கருத்து

1. வேலியின்றி பயிர்கள் அழிந்தன.
2. காவலாளியே களவெடுத்தல்.
3. வேலி பயிர்களை அழித்தது.


(10) நீண்ட நாள் சுகவீனமுற்றிருந்ததால், அம்மா நீண்டநாள் வேலைக்குப் போக முடியவில்லை. அதனால், வேலையில் இருந்து நிறுத்தி விட்டார்கள். இதனை விளக்கும் விடையினைத் தெரிவு செய்க.

1. கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி
2. மரத்திலிருந்து விழுந்தவனை மாடேறி மிதித்தது போல
3. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை


(11) வறுமையால் வாடிய கயல்விழிக்கு ஒரு குழந்தை உண்டு. அவள் குழந்தையையும் சுமந்து கூலி வேலை செய்து, பிள்ளைக்குத் தேவையான எல்லாவற்றையும் வாங்கிக் கொடுப்பாள். இக் கூற்றை விளக்கும் பழமொழி

1. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?
2. காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு
3. பாத்திரம் அறிந்து பிச்சை கொடு

(12) தரப்பட்ட உதாரணங்களை அவதானித்து - ? - இடப்பட்ட இடத்தில் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.



(13) 6 பக்கங்களுடைய கடதாசி ஒன்றை முறிகோடு வழியே இரண்டாக மடித்த பின் புள்ளிக்கோடு வழியே வெட்டினால் கிடைக்கும் தளவடிவங்கள்





1. அறுகோணி, ஐங்கோணி 2. நாற்பக்கல், முக்கோணி
3. ஐங்கோணி, நாற்பக்கல்

(14) இத் திண்ம உருவின் பக்கத் தோற்றம் பின்வருவனவற்றுள் எது?




1. சன்லைட் 2. SunLight 3. SLS

(15) இவ்வுருக்களின் பயன்பாடுகள் முறையே சரியாகக் காட்டும் விடை




1. அறிவு, ஆண், மழை, அழகு
2. பட்டம், ஆண், வெயில், காலம்
3. ஞானம், அழகு, மழை, காலம்


(16) கடிகாரமொன்றின் மணிமுள் 1/ 4 வட்டம் சுழலும் போது, அதன் நிமிடமுள் எத்தனை 1/ 4 கால் வட்டம் சுழலும்

1. 3 2. 4 3. 12

ஆசிரியர் : திரு. க. தவயோகராஜா

[17] 
இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதி
1. முழு உருவின் காற்பங்கு
2. முழு உருவின் காற்பங்கை விடக்குறைய
3. காற்பங்கை விடக் கூட


[18] மானசன் விளையாட்டு மைதானத்திலுள்ள ஓரிடத்திலிருந்து வடக்கு நோக்கி 50m உம் பின் இடப்பக்கமாகத் திரும்பி 100m. உம் பின் வலப்பக் கமாகத் திரும்பி 50m உம் மீண்டும் வலப்பக்கமாக 200m உம் திரும்பவும் வலப்பக்கமாக 100m உம் சென்று நிற்கிறான் அவன் ஆரம்பித்த இடத்தி லிருந்து எவ்வளவு தூரத்தில் என்ன திசையில் நிற்கிறான்
1. கிழக்கு 100m 2. கிழக்கு 200m 3. மேற்கு 100m


இப் பெரிய சதுரமுகியைச் சுற்றி வர வர்ணம் பூசப்பட்ட பின் கோடுகள் வழியே வெட்டி வேறாக்கப்பட்டது.


[19] வேறாக்கப்பட்ட சதுரமுகிகளில் நிறம் பூசப்படாத முகங்கள் எத்தனை?
1. 16 2. 24 3. 12

[20] சதுரமொன்றின் சுற்றளவும் செவ்வகமொன்றின் சுற்றளவும் சமனாகும் சதுரத்தின் நீளம் 8Cm செவ்வகத்தின் அகலம் 4Cm எனின் செவ்வகத்தின் நீளம் யாது? 1. 15Cm 2. 12Cm 3. 10Cm


★ 21 - 23 வரையான வினாக்களிற்கு வெற்றுக் கூடுகளில் வரவேண்டிய எண்ணைத் தெரிவு செய்க.

[21] 



? இடப்பட்ட கூட்டில் வரவேண்டிய எண்
1. 32 2. 28 3. 25

[22] 


1. 48
2. 36
3. 56

[23] 

1. 10 2. 18 3. 22


[24] வட்டமான கடதாசித்துண்டு இரண்டாக மடித்து வெட்டி நீக்கப்பட்ட விதத்தை உரு காட்டுகிறது.

இக் கடதாசியை விரித்தால் காணக் கூடிய தோற்றம் பின்வருவனவற்றுள் எது?




[25] பொருத்தமான சொற் கூட்டத்தைக் கொண்ட அமைப்பின் கீழ் கோடிடுக
1. சுவந்தல் காந்தல் பந்தல்
2. செம்பு தும்பு நெம்பு
3. தெப்பம் வெப்பம் கப்பம்

[26] 

நிறந்தீட்டப்பட்ட பகுதிக்குப் பொருத்தமான உயிரினம் எது?
1. வௌவால் 2. அணில் 3. எலி

[27] A,B,C என்பவற்றிற்குப் பொருத்தமான விடை
1. பன்றி, வௌவால், மரநாய் 2. எலி, பன்றி, வௌவால்
3. வௌவால், பன்றி, எலி

[28] எதிர்ப்பக்கங்களில் ஒரே மாதிரியான எழுத்துக்களைக் கொண்டமைந்த தாயக்கட்டையின் வலையுரு எது?



[29] வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.




[30] ஒழுங்கின்றி இருக்கும் இச் சம்பவத்தை ஒழுங்குபடுத்தும் போது, மூன்றாவது வாக்கியம் எது எனத் தெரிவு செய்க.
A. நேற்று மாலை கடலுக்குச் சென்ற படகுகள் தொலைவில் வருவது தெரிந்தது
B. கீர்த்தியினதும் அவனது அம்மாவினதும் முகங்களில் புன்னகை பூத்தது
C. அவன் தனது அம்மாவுடன் காலையிலே கடற்கரைக்குச் சென்றான்.
D. அப்பா சென்ற படகு வரும் வரை ஏங்கிக் கொண்டிருந்தான் .
E. கீர்த்தி அதிகாலையிலேயே எழுந்தான்.
1. D 2. B 3. A


★ மிகவும் சரியான கருத்துள்ள வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

[31] 1. நல்ல நடத்தைகள் நல்ல பிள்ளையை உருவாக்கும்.
2. நல்ல நடத்தைகள் பிள்ளையை நன்றாக உருவாக்கும்.
3. நல்ல நடத்தைகள் பிள்ளை நல்லதை உருவாக்கும்.

[32] ஒரு வாக்கியத்தில் நிதமும் இருப்பது
1. கருத்தும் செயலும் 2.. சொல்லும் செயலும் 3. எழுவாயும் பயனிலையும்

[33] பவன் முழு நோன்மதி தினமன்று இரவு வானில் பல உடுத்தொகுகளைத் மிகத் தெளிவாகப் பார்த்ததாகக் கூறினான். இக் கூற்று;
1. பிழை 2. சரி 3. கூறமுடியாது

[34] நாதஸ்வரம் – வாசித்தல் போல கொம்பு ..............................
1. மீட்டுதல் 2. வாசித்தல் 3. ஊதுதல்

[35] 
இவ்வுருவில் உள்ள நாற்பக்கல்கள் எத்தனை?
1. 5 2. 10 3. 4

[36] செந்தூரி பணக்கார வீட்டுப்பிள்ளை அவள் நல்ல நல்ல கதைப்புத்தகங்களைப் பாடசாலைக்கு கொண்டு வருவதுண்டு வகுப்பிலுள்ளவர்களுக்கும் வாசிக்கக் கொடுப்பாள் செந்தூரியைக் குறிப்பிட மிகப் பொருத்தமானது.
1. சுயநலவாதி 2. தன்னலவாதி 3. பரோபகாரி

[37] தீக்குச்சிகளைப் பயன்படுத்தி உரோம இலக்கங்களை உருவாக்கும் ஒரு பிள்ளைக்கு 36ஐ உருவாக்க 9 குச்சிகளும், 39 ஐ உருவாக்க 9 தீக்குச்சிகளும் தேவைப்பட்டன. 38ஐ உருவாக்க அப் பிள்ளைக்கு எத்தனை தீக்குச்சிகள் தேவை?
1. 9 2. 12 3. 11

[38] பாடசாலைகளில் பொறுப்புகள் சரியாகப் பங்கிடப்பட்ட விடை
1. அதிபர் பிரதிஅதிபர் உபஅதிபர் பகுதிதலைவர் வகுப்பாசிரியர்
2. அதிபர் உபஅதிபர் பிரதிஅதிபர் பகுதிதலைவர் வகுப்பாசிரியர்
3. அதிபர் பிரதிஅதிபர் உப்அதிபர் வகுப்பாசிரியர் பகுதித்தலைவர்

[39] இவ்வுலகில் நான் இன்றேல் எவ்வுயிரினமும் வாழ முடியாது என்னை எவரும் கண்டது மில்லை என்னால் இவ்வுலகுக்கு நன்மையுமுண்டு சில வேளை தீமையுமுண்டு நான் யார் ..............................

[40] வெற்றிடத்தில் இரு எழுத்துக்களை இடுவதன் மூலம் இரண்டு சொற்களை உருவாக்க முடியும். அவ்வெழுத்துக்களை வெற்றிடத்தில் இட்டு இரு சொற்களையும் கோடிட்ட இடத்தில் எழுதுக.
சத்..... ..... பி 1.................... 2....................

# வினாத்தாள் - 02 1 1/4 மணித்தியாலம்

★ இப்பந்தியை வாசிக்க.

பாடப்புத்தகங்களைப் படிப்பதனால் மட்டும் ஒருவர் அறிவினைப்பெற்றுவிட முடியாது. வேறு புத்தகங்களையும் தேடி வாசிக்க வேண்டும். உங்கள் பாடசாலையில் சிறந்த நூல் நிலையம் இருக்கின்றது. அதனை நன்கு பிரயோசனப்படுத்திக் கொள். கண்டதும் கற்கப் பண்டிதனாவான் என்பது எம் முன்னோர் கூறிய அமுதமொழி. ஆமாம்! நிறைய வாசிப்பதனாலே தான் மனிதன் ஒருவன் பூரணத்துவம் அடைகின்றான். ஏனெனில், பல நூல்களைப் படிப்பதால் புதுப்புது அனுபவங்களைப் பெறமுடியும். அது மட்டுமன்று புத்தகங்கள் ஒருவருக்குச் சிறந்த நண்பர்கள் ஆகும். நல்ல நண்பனைப் போல நல்ல புத்தகமும் எமக்கு நல்லவழி புகட்டும். மாணவப்பருவமும் கிடைப்பதற்கு அரியது. அதனால், அப்பருவத்தைப் பிரயோசனம் உள்ளதாகக் கழிக்க வேண்டும். நல்ல புத்தகங்களைத் தேடிப் பெற்று அவற்றைக் கருத்தூன்றி வாசித்தல் பயன் தரும். பயனுள்ள கருத்துக்களைக் குறித்து வைத்துக் கொள்ளல் சாலச்சிறந்தது. அகராதியைப் பயன்படுத்தி பொருள் தெரியாத சொற்களின் கருத்தை அறிந்து கொள்ளல் அவசியம். பத்திரிகைகள், கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள் எனப்பலவற்றையும் வாசித்து உனது அறிவைப்பெருக்கிக் கொள். சிறுவயதில் பெறும் இப்பயிற்சி என்றும் கைகொடுக்கும்.

★ மேலுள்ள பந்தியைக் கொண்டு 01 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு விடை தருக.

01: இப்பந்தி மூலம் வலியுறுத்திக் கூறப்படுவது யாது?

..................................................

02. ஒருவனுக்கு நல்வழி காட்டுபவை எவை? ..................................

03. பயன் என்ற கருத்தைத் தரும் சொல்லை எழுதுக ..................................

04. பயனுள்ள வாசிப்பு எது எனக் கூறப்பட்டுள்ளது?..................................

05. பொருள் தெரியாத சொற்களின் கருத்தை அறிந்து கொள்ள உதவும் நூல் எது?

..................................................

06. நல்வழி எனும் சொல்லைப் பிரித்தெழுதுக. ..................................

07. " தொட்டிற்பழக்கம் சுடுகாடு வரைக்கும்" என்ற பழமொழியின் கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவு செய்து எழுதுக.

..................................................

08. **குறைத்து** என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..................................

09. இறந்த கால வினைமுற்று ஒன்றை எழுதுக. ..................................

10. சொற்களின் என்ற பன்மைச் சொல்லை ஒருமைச் சொல்லாக எழுதுக.

..................................................

★ பின்வரும் சொற்றொடர்களின் கருத்தை எழுதுக.

11. அறை கூவுதல் ..................................

12. துண்டு விழுதல் ..................................

★ பின்வரும் வாக்கியத்தில் பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

13. இலக்குமணா என்ன திகைத்துப் போய் நிற்கிறாய்

★ பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வசனம் எழுதுக.

14. இன்று / வண்டியில்/ பாடசாலைக்கு / நான் / தான் / புகை / வந்தேன் /காலையில்

..................................................

★ தனிச் சொல்லில் விடை தருக.

15. வானொலி நிகழ்ச்சிகளை விரும்பிக் கேட்பவர்கள்..................................

16. பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன ..................................

17. நூல் நூற்று ஆடை தயாரிப்பவர் ..................................

★ பின்வரும் இணைமொழிகளில் விடுபட்ட பகுதியை எழுதுக.

18. ஏழை ................. 19.......................... பதவி

★ பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர்வாக்கியமாக எழுதுக.

20. வித்யன் காலையில் எழுந்தான். தனது கடமைகள் முடித்தான். அவன் பாடசாலை சென்றான்.

..................................................

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

21. Hardware - .................................. 2. Delete - ..................................

23. Keyboard - ..................................

★ பின்வரும் தமிழ் வாக்கியத்தை ஆங்கிலத்தில் எழுதுக.

24. தயவு செய்து உங்கள் வீட்டு வேலையைச் செய்யுங்கள்.

..................................................

★ பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

25. கடல் மிகவும் பெரியது ..................................

★ பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

26. அபே பந்தி காமறய ..................................

27. ஸ்த்துதிய் நங்கி மம கிகிங் என்னம் ..................................

★ 28 தொடக்கம் 51 வரையான வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

28. அதிக நீர் தேவைப்படும் தாவரங்களில் ஒன்று.

1. இராவணன்மீசை 2. ஈஞ்சு 3. கற்றாளை 4. குரக்கன்

29. இலங்கையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

1. 200 2. 225 3. 125 4. 215

30. 

இவ்வுருவில் உள்ளவர்;

1. உலகில் முதல் பெண் பிரதமர் 2. உலகில் முதல் பெண் ஜனாதிபதி

3. இலங்கையின் முதல் பெண் பிரதமர்

4. இலங்கையின் முதல் பெண் அமைச்சர்

31. 

இவ்வுருவில் உள்ளது;



1. ஒருமுலையூட்டி 2. பறவையினங்களில் ஒன்று

3. பாலூட்டிப்பறவை 4. இறக்கைகள் உடைய மிருகம்

32. கூடுகட்டும் பறவைகளில் ஒன்று;

1. மரங்கொத்தி 2. தேனீ 3. தையல்சிட்டு 4. குளவி

33. குரங்கு போன்று செல்லும் உரு எது?

1.  2.  3.  4. 

34. 

இவ்வுரு குறிக்கும் விளையாட்டு;

1. ஹொக்கி 2. துடுப்பாட்டம்

3. கிட்டிப்புள் 5. றக்பி

35. கொள்ளை நோய்களில் ஒன்று;

1. பிளேக்நோய் 2. காய்ச்சல் 3. விலங்குவிசர்நோய் 5. வாந்திபேதி

36. மணியாசு பயன்படுத்தப்படுவது;

1. வீடுகட்டும் போது 2. கதவு செய்யும் போது

3. கத்தி செய்யும் போது 4. நகை செய்யும் போது





37. 


இத்தாவரம்;

1. செடி 2. கொடி

3. மரம் 4. பூண்டு

38. நேரே செல்க என்ற குறியீடு எது?

1.  2.  3.  4. 

39. 

இப்பற்றுகை எது?

1. மேல்முகப்பற்றுகை 2. கீழ்முகப்பற்றுகை

3. குறுக்குமுகப்பற்றுகை 4. கலப்புப்பற்றுகை

40. நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி;

1. நண்டு 2. திமிங்கிலம் 3. பாம்பு 4. ஒக்ரோபஸ்

41. தேசப்படமொன்றில் கபில நிறத்தால் குறிப்பிடுவது;

1. நெடுஞ்சாலை 2. மலை 3. வண்டில்பாதை 4. பாடசாலை

42. நோய்க் காவிகளில் ஒன்று;

1. நாய் 2. பன்றி 3. வீட்டுஈ 4. பாம்பு

43. ஆண்கள் விளையாடும் கூடைப்பந்தாட்ட அணியொன்றில் விளையாடும் வீரர்களின் எண்ணிக்கை


1. 07 2. 06 3. 05 4. 11

44. வெட்டும் முனை பல்லுப்பல்லாக இருக்கும் உபகரணங்களில் ஒன்று

1. சவரஅலகு 2. அருவிஅரிவாள்

3. இரும்புக்கத்தி 4. கடதாசிவெட்டும் கத்தி

45. மூலிகைக்குப் பயன்படுத்தப்படும் இலைகளில் ஒன்று;

1.  2.  3.  4. 

46. பூமாலை கட்டப் பயன்படும் பூக்கள் கொண்டது;

1. பொன்னொச்சி, நொச்சி, நித்தியகல்யாணி, காகிதப்பூ
2. மல்லிகை, முல்லை, குண்டுமல்லிகை, செவ்வரத்தை
3. நித்தியகல்யாணி, எக்ஸ்சோரா, பொன்னொச்சி, காகிதப்பூ
4. அலரி, நந்தியாவட்டை, வில்வம், பொன்னாவரை

47. சக்தி தரும் உணவுகளைக் கொண்ட தொகுதி;

1. பலாக்காய், பயறு, கருப்பட்டி, இறைச்சி
2. கோதுமை, ஈரப்பலா, தேங்காய், தோடம்பழம்
3. பாற்சோறு, நிலக்கடலை, மரவள்ளி, தேங்காய்
4. பருப்பு, கருவாடு, முட்டை, பால்

48. பனாட்டு பாதுகாத்து வைக்கும் முறை;

1. தகரத்திலடைத்தல் 2. உலர்த்துதல்

3. குளிரூட்டியில் வைத்தல் 4. பொதி செய்து வைத்தல்

49. இலங்கை குடியரசானது;

1. சுதந்திரத்தின் முன்பு 2. சுதந்திரதினமன்று

3. சுதந்திரத்தின் பின்பு 4. போர்த்துக்கேயர் விட்டுச்சென்ற போது

50. கிரிக்கெட் போட்டியின் போது ஒரு ஓவரில் வீசவேண்டிய பந்துகளின் எண்ணிக்கை யாது?

1. 04 2. 06 3. 08 4. 05

51. புதிதாக வெளியிடப்பட்ட காசுத்தாள் பற்றிய கூற்றுக்களில் சரியானது;

1. நீளங்கள் சமம் 2. அகலங்கள் சமம்

3. நீளங்களும் அகலங்களும் சமம் 4. தாள்களின் பின்புறத்தில் பறவைகளின் படம் உள்ளது

★ **52 தொடக்கம் 56 வரையான கூற்றுக்கள் சரியாயின் ( ✓ ) எனவும் பிழையாயின் ( X ) எனவும் அடையாளமிடுக.**

52. சூரியன் கோள்களில் ஒன்று [ ]

53. உயிரினங்கள் எல்லாம் சுவாசித்தலின் போது ஒட்சிசனை உள்ளெடுக்கின்றன. [ ]

54. ஈருடக வாழிகள் எல்லாம் நீரிலே முட்டை இடுபவை [ ]

55. பேரீச்சம்பழத்தில் இரும்புச்சத்து அதிகம் உண்டு. [ ]

56. மாணவர்கள் எல்லோருக்கும் இலவச சீருடை, இலவச உணவு கிடைக்கிறது. [ ]

★ **பின்வரும் தாவரங்களின் பெயர்களை எழுதுக.**



57. ..............................



58. ..............................



59. ..............................



60. ..............................

61. 80 முதல் 100வரை எத்தனை இரட்டை எண்கள் உள்ளன? ..............................

62. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்று ஆரம்பித்த நேரம் 20: 40: 30 நிகழ்ச்சி முடிந்த நேரம் 26: 20: 10 எனின், நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்ட நேரம் யாது?

..............................

63. 9097 எனும் எண்குறியைச் சொற்களில் எழுதுக.

..............................


★ **வெற்றிடம் நிரப்புக.**

64. 390நிமிடங்கள் = .............................. மணி.............................. நிமிடம்

65. 60 மணித்தியாலம் = .............................. நாள்.............................. மணி

66. $\frac{1}{4} = \frac{\square}{16} = \frac{3}{\square}$

67. வாயுமூலை ..............................க்கும் ..............................க்கும் இடையே உண்டு




திண்ம உருவில் உள்ள

68. உச்சிகள் எத்தனை? ..............................

69. முகங்கள் எத்தனை? ..............................

70. 150g தேயிலை ரூபா 90.00எனின், 250g தேயிலை என்ன விலை?

..............................





71. யாழ்ப்பாணத்தில் இருந்து பூநகரிவரை உள்ள தூரத்திற்கும், யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத்தீவு வரையுள்ள தூரத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசம் யாது?


..............................

72. பூநகரியிலிருந்து ஆனையிறவிற்கு சென்று வர எவ்வளவு தூரம் பயணம் செய்ய வேண்டும்?

..............................




6cm நீளமும் 2 cm அகலமும் உள்ள செவ்வக வடிவ கீங்கள் இரண்டினால் ஆக்கப்பட்ட இவ் உருவின்



73. சுற்றளவு யாது? ..............................

74. பரப்பளவு யாது? ..............................

75. பின்வரும் ஒவ்வொரு படத்தையும் பார்த்து ஒவ்வொரு வாக்கியம் எழுதுக. ஒருவாக்கியத்தில் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.

1. 

..............................

..............................

2. 

..............................

..............................

3. 

..............................

..............................

4. 

..............................

..............................

# கடன் சுமையால் மீண்டும் ஒரு தற்கொலை



தென்னிந்திய சினிமாப் படங்களை மிஞ்சிவிடும் அளவிற்கு சில சம்பவங்கள் எம் மத்தியில் அரங்கேறி வருகின்றன. பணத்திற்காக திட்டமிட்ட கொலை, கடன் சுமையால் தற்கொலை, கள்ளக் காதலால் குழந்தைகள் நடுத்தெருவில் என ஏகப்பட்ட சம்பவங்கள் வெளிச்சத்திற்கு வந்தாலும் அச்சம்பவங்களை படிப்பினையாக எடுக்க மறுப்பதால் குற்றச் செயல்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே இருக்கின்றன. அந்த வகையில் இந்த வாரமும் கலைந்துபோன குடும்பம் ஒன்று தொடர்பான தகவல்களை உதயசூரியன் வாசகர்களுக்காக முன்வைக்கிறோம்.

மாத்தளையின் தோட்டப் பகுதியொன்றை வசிப்பிடமாகக் கொண்ட நவீன் வாட்டசாட்டமான அழகிய இளைஞன் (32 வயது) மாத்தளை நகரில் ஆட்டோ சாரதியாக பணியாற்றி வந்தான். காதல் யாரையும் அவ்வளவு இலகுவில் விட்டு வைப்பதில்லையே.

இயற்கை நியதிப்படி நவீனும் காதல் மோகத்தில் விழுந்தான். பெற்றோரின் எதிர்ப்புக்கு மத்தியில் சுகந்தியை காதல் திருமணம் செய்துகொண்டான். நவீனும் சுகந்தியும் இன்பமாக தம் வாழ்க்கையை கொண்டு சென்றனர். நாளடைவில் பெற்றோர் மத்தியில் காணப்பட்ட எதிர்ப்புகளும் பனிபோல விலக ஆரம்பித்தது. இவர்களின் அன்புக்கு பரிசாக சுகந்தி குழந்தையை பெற்றெடுத்தாள். ஆட்டோ ஓட்டும் தொழிலில் போதிய வருமானம் கிடைக்காததால் வெளிநாடு சென்று சம்பாதிக்கலாம் என்று நவீன் திட்டம் தீட்டினான். இதை சுகந்தியிடம் கூறியபோது அவளும் சம்மதித்தாள்.

நவீன் தன் மனைவியையும் குழந்தையையும் விட்டுவிட்டு வெளிநாடு சென்றான். அவன் எதிர்பார்த்தது போல அங்கு வேலை அமையவில்லை. மரத்திலிருந்து விழுந்தவனை மாடு முட்டிய கதையாய் வருமானம் திருப்திகரமாக அமையவில்லை. வேலைப்பளு அதிகமாகவும் சம்பளம் கையைக் கடிக்கக்கூடியதுமாகவே இருந்தது.

இருப்பினும் வெளிநாடு வந்துவிட்டோம் இரண்டு வருடம் பல்லைக்கடித்துக் கொண்டு இருந்துவிட்டு சென்றுவிடுவோம் என நாட்களை எண்ணி காலத்தைக் கழித்தான். இரு வருடம் முடிய தன் நாட்டுக்கு வந்து சேர்ந்த நவீனுக்கும் சுகந்திக்குமிடையில் முன்னைய நெருக்கமான அன்பு இருக்கவில்லையென அயலவர் கூறுகின்றனர். நாளடைவில் அன்பில் விரிசல் ஏற்பட்டு முரண்பாட்டால் சுகந்தி குழந்தையுடன் தன் தாய்வீட்டுக்கு சென்றுவிடுகிறாள். நவீனுக்கு மதுப் பழக்கமும் தொற்றிக்கொள்ள பழையபடி ஆட்டோ ஓட்டும் தொழிலையே செய்யத் தொடங்கினான். நாட்கள் நகரத் தொடங்கின.

தன் மனைவி குழந்தையை சமாதானப்படுத்தி தன் வீட்டுக்கு அழைத்து வருவதைவிட்டுவிட்டு (மறந்துவிட்டு) நவீன் புதிய காதல் பாடம் படிக்க ஆரம்பித்துவிட்டான். இவனுடைய அழகிய தோற்றத்தில் மயங்கிப்போன மாலா இவனிடம் மனதைப் பறிகொடுத்தாள். தான் திருமணம் ஆனவன், குழந்தை உள்ளது என்பவற்றை மறைத்து சாதாரண தர பரீட்சையுடன் பள்ளிப்படிப்பை நிறுத்திக்கொண்ட மாலாவுடன் காதல் பாடம் படிக்க ஆரம்பிக்கிறான் நவீன்.

திருமண வயதை எட்ட சில மாதங்களே உள்ள மாலா நவீனின் பேச்சில் மயங்கி தன் வீட்டுக்குத் தெரியாமல் அவனுடன் வெளியேறிவிட்டாள். இருவரும் யாருக்கும் தெரியாமல் தலைமறைவாகி திருமணம் செய்துகொண்டனர். சில மாதங்கள் நகர்கின்றன. தன் புதிய மனைவி கர்ப்பமடைய நவீன் தன் குடும்பத்துடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். கர்ப்பமான தன் புதிய மனைவியை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்ல, பெற்ற மனம் பித்து என்பது போல நவீனை அவன் தாய் ஏற்றுக் கொண்டாள்.



நவீன் இரண்டாம் திருமணம் செய்துகொண்டது முதல் மனைவி சுகந்திக்கு தெரியவர அவள் ருத்ர தாண்டவம் ஆடியதோடு மட்டுமல்லாமல் பொலிஸில் முறைபாடு செய்தாள். வழக்குத் தீர்ப்பு என தன் முதல் மனைவிக்கும் குழந்தைக்கும் ஜீவனாம்சம் கொடுக்க நவீன் ஒத்துக் கொண்டான். ஆட்டோவிற்கான பினான்ஸ், முதல் மனைவி, குழந்தைக்கான ஜீவனாம்சம், குடும்பச் சுமை என வருமானத்தை விட செலவு தலைக்கு மேல் அதிகரிக்க இதிலிருந்து தப்பிக்க வட்டிக்குப் பணம் வாங்கி உடனடி தீர்வு பெற முயற்சி செய்தான். ஆட்டோ ஓட்டிக் கிடைக்கும் பணத்தில் கடனை கட்டுப்படுத்த முடியாமல் கடன் தொகை பத்தாயிரம் இருபதாயிரத்திலிருந்து இரண்டு இலட்சம், ஐந்து இலட்சம் என வட்டி குட்டிபோட்டு நவீனின் குரல்வளையை நசுக்க ஆரம்பிக்கின்றது. தினம் கடன் கொடுத்தவர்களின் நச்சரிப்பால் நிம்மதியை இழந்த நவீன் ஒரு முடிவை எடுக்கிறான்.

விடிந்த பொழுது நவீனின் இரண்டு மனைவி உட்பட இரு குழந்தைகளுக்கு சோகமான பொழுதாகவே புலர்ந்தது. ஆம் கடன் சுமை உட்பட தன்னுடைய தவறான செயற்பாடுகளை விட்டு மீள முடியாமல் தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டான். மனைவி இருக்கும்போதே இன்னொரு பெண்ணை கள்ளத்தனமாகத் திருமணம் செய்து குடும்பம் நடத்தியது.

கடன் சுமை, அளவுக்கு மீறிய செலவு என நவீனின் மரணத்திற்கு காரணம் கூறினாலும் அந்த இரு மனைவிக்கும் பிறந்த இரு குழந்தைகளும் என்ன பாவம் செய்தார்கள்?

அளவுக்கு மீறிய செலவு, வட்டிக்கு கடன் வாங்குதல் தவறான நடத்தைகளால் குடும்பங்கள் சீரழிகின்றன என்பதற்காகவே இத்தகவலை நாம் முன்வைக்கிறோம்.

எம்.தாசன்

# நகைச்சுவைப் பேச்சு எனக்கு வராது!

சூரியன் தான் எனது தாய் வானொலி... ஒலிபரப்பு நுணுக்கங்கள் எதுவுமே தெரியாமல் இந்தத் துறைக்குள் நுழைந்தேன். இன்று பட்டைத் தீட்டப்பட்டு ஒரு செய்தி வாசிப்பாளராக, தொகுப்பாளராக, மேடை அறிவிப்பாளராக சோபிப்பதற்கு சூரியன் தான் காரணம் என்கிறார் முன்னாள் சூரியன் வானொலி அறிவிப்பாளரும், வெற்றி வானொலியின் சிறந்த அறிவிப்பாளர்களில் ஒருவருமான சங்கீதா. சங்கீதா இந்த வார உதயசூரியனில் உங்களுடன் அவரைப்பற்றி பகிர்ந்து கொள்கிறார்...

அன்பான ரசிகர்களுக்கு வணக்கம்! என்னைப்பற்றி சொல்ல வேண்டுமானால், அப்பா, அம்மா, இரண்டு தம்பிகள் என இருந்த குடும்பத்திற்குள் இப்போது கணவரும் இணைந்துள்ளார்.

கார்மேல் பாத்திமா தேசிய கல்லூரியில் ஆரம்பக்கல்வி, பட்டிருப்பு தேசிய பாடசாலையில் இடைநிலைக்கல்வி, வின்சன்ட் மகளிர் உயர்தர தேசிய பாடசாலையில் உயர் கல்வி என பாடசாலைக் காலத்தை முடித்துக் கொண்ட எனக்கு எதிர்பாராத விதத்தில் இத்துறைக்குள் நுழையும் சந்தர்ப்பம் கிடைத்தது. இருந்தாலும் ஆரம்பத்தில் பாடசாலையில் வானொலிக்கு குரல் கொடுத்த அனுபவம் இருந்தது.



**அறிவிப்புத்துறைக்கு வந்த முதல் நாள் அனுபவம்:-** இன்றைக்கே என் குரல் வானொலியில் கேட்டுவிடும் என்ற ஒரு நப்பாசையுடன் அலுவலகத்திற்குள் நுழைந்த நாள் அது. கொஞ்சம் படபடப்பு, நிறைய சந்தோஷத்துடன், புதிய சூழ்நிலைக்குள் அடியெடுத்து வைத்தேன்

**முதன் முதலாக தொகுத்து வழங்கிய நிகழ்ச்சி:-**
முதன் முதலில் குரல் ஒலித்தது இலங்கை வானொலியின் புதிய உலகம் கிறிஸ்தவ நிகழ்ச்சியில் தான். வானொலி அறிவிப்பாளரானதன் பின் குமுதினி அக்காவுடன் இணைந்து வண்ணப்பூமாலை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினேன். என்னைப் பற்றிய அறிமுகத்துடன், அந்த வானுக்கு ரெண்டு தீபங்கள் என்ற பாடலை ஒலிபரப்பியது இன்னும் ஞாபகமிருக்கிறது.



**யாருடன் இணைந்து நிகழ்ச்சிசெய்யப் பிடிக்கும்?**
நான் நேசிக்கும் அறிவிப்பாளர்களில் ஒருவரான கே.ஜெயகிருஷ்ணா. சிறுவயது முதலே "உங்களிடமிருந்து விடைபெற்றுக்கொள்வது உங்கள் அன்பின் கே.ஜெயகிருஷ்ணா" என்று அவர் தொகுத்தளிக்கும் நிகழ்ச்சியை நிறைவு செய்யும் கம்பீரக் குரலுக்காகவே அவரை பிடிக்கும். சிறந்த குரல்வளம், நேர்த்தியான ஒலிபரப்பு பாங்கு இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். அவருடன் ஒரு நிகழ்ச்சி செய்ய வேண்டும் என்ற ஆசை இன்னும் உள்ளது.

**ஒரு அறிவிப்பாளர் எப்படி இருக்கக்கூடாது?** மற்றவர்களின் முன்னேற்றம், திறமை குறித்து பொறாமை கொள்ளக்கூடாது. தனித்தன்மையின்றி இன்னொருவர் போல அறிவிப்புச்செய்தல், குறுக்கு வழியினை பின்பற்றல் போன்ற விடயங்களை கனவிலும் நினைக்கக் கூடாது. தன் திறமையை நம்பாமல், வெற்றிக்காக எதையும் செய்யலாம் என்ற மனப்பாங்கை தவிர்க்க வேண்டும்.

**இந்த துறையில் உங்களின் அடையாளம் :-** தெளிவான உச்சரிப்பு, வேகமான அறிவிப்புப் பாணி, செய்தி வாசிப்பில் தனித்தன்மை.


எஸ்.ரோவன்

**உங்களை கவர்ந்த அறிவிப்பாளர்கள் யார்?**
இலங்கையில் - அமரர். கே.எஸ்.ராஜா மற்றும் ஆங்கில அறிவிப்பாளர் அமரர் ரவி ஜோன். இந்தியாவில் விஜய் தொலைக்காட்சியின் தொகுப்பாளர் கோபிநாத்.

**உங்களுடைய ரோல் மொடல்?**
சந்தேகமே இல்லை. எப்போதுமே அம்மாதான்.

**தொலைக்காட்சி தொகுப்பாளினியாக பணியாற்றிய அனுபவம்?** நிறையவே இருக்கிறது. சக்தி டீ.வி.யில், ஸ்ரீபிருந்தனின் தயாரிப்பில் சாட் ஷோ, ரூபவாஹினியில் பகுதிநேர அறிவிப்பாளராக காலைச் செய்திகள் மற்றும் பத்திரிகைக் கண்ணோட்டம் ஆகியவற்றையும், வசந்தம் தொலைக்காட்சியில் காலை மற்றும் இரவு நேர பிரதான செய்திகள், காலை நேர தலைவாசல் நேரடி நிகழ்ச்சி, கோணேஷின் தயாரிப்பில் ஆரோக்கியம் - மருத்துவ நேர்காணல் மற்றும் இர்ஃபானின் தயாரிப்பில் நிலாவே வா ஆகிய நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருக்கிறேன்.

**உங்களுடைய வானொலி வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்?**
தெரிந்தவர்களின் மரணம்தான். அதிலும் எங்களோடு இருந்து பேசிச் சென்ற ஒருவர் அகால மரணமாகி, அதனை நானே செய்திகளில் அறிவிக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. ஒரு நாள், மதிய நேர செய்திகளை வாசித்த போது, ஊடகவியலாளர் நிமல்ராஜனின் மரணம் குறித்த அறிவித்தலை, கலையகமே கலங்கிய கண்களுடன் நிற்க, கண்ணீருடன் அந்தச் செய்தியை உணர்வுகளைத் துடைத்தபடி உள்ளம் பதற வாசித்த நாளை இன்னும் மறக்க முடியவில்லை.

**வெற்றி அறிவிப்பாளராக இருக்கும் அனுபவம் பற்றி...**
ஒரு அறிவிப்பாளராக மட்டுமல்லாது நிகழ்ச்சி முகாமையாளராகவும் இருக்கிறேன். ஒரே நேரத்தில் இரு குதிரைகளில் சவாரி செய்வது கொஞ்சம் சவாலாகவும், சந்தோஷமாகவும் இருக்கின்றது.

**திறமைகள் இருந்தும் சாதிக்க முடியாதுபோன சந்தர்ப்பங்கள்?**
அப்படியென்று முழுமையாகச் சொல்ல முடியாது. ஆனாலும் சரியான நேரங்களில் கிடைக்கவேண்டிய அங்கீகாரங்கள் கிடைக்காமல் போயிருக்கின்றன.

**சந்திக்க விரும்பும் நபர்?** ஆங் சான் சூகி... வீட்டுக் காவலில் வருடக்கணக்காக சிறைவைக்கப்பட்டிருந்த போதும், தளராது எதிர்த்து நின்ற அந்த போர்க்குணத்திற்காகவே என்றாவது ஒருநாள் அந்த இரும்பு மனுஷியை நேரில் காணவேண்டும்.

**வேறு அறிவிப்பாளர்களிடம் கண்ட திறமைகள்?** நகைச்சுவை ததும்பப் பேசுவது என்பது எனக்கு காத தூரம். நகைச்சுவையாய் பேசும் அறிவிப்பாளர்களைக் கண்டால், குறிப்பாக வெள்ளையன் அண்ணாவின் நிகழ்ச்சியை பார்க்கும் போதும் கேட்கும் போதும் பொறாமையாய் இருக்கும்.

**கூற விரும்புவது?** என்றும் உங்கள் ஆதரவு எனக்கு பக்கபலமாக இருக்க வேண்டும். இன்று போலவே மாறாத அன்பை தர வேண்டும். நேர்மையான விமர்சனங்களை கூறுங்கள். எங்களுடைய குறைகளை திருத்திக் கொள்ள சந்தர்ப்பமாக அமையும் என்பதோடு இந்த வேளையில் என் நேயர்களுக்கு மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



# மது போதையுடன் பாடசாலைக்கு வந்த மாணவன்

## முகம் சுளிக்க வைக்கும் மாணவர் செயற்பாடுகள்

நாட்டின் எதிர்கால வித்துக்களான மாணவர்களின் அண்மைகால போக்குகளும் அவர்களின் செயற்பாடுகளும் திருப்திகரமாக இல்லை என்பதை தினசரி வரும் செய்திகள் புடம்போட்டுக் காட்டுகின்றன. மாணவர்களுக்கான ஒழுக்க வரையறைகளை கல்வி அமைச்சு நடைமுறைப்படுத்த வேண்டும் என குரல்கள் ஒலித்தாலும் அவை உரிய தரப்புகளுக்கு செவிடன் காதில் ஊதிய சங்காகவே இருக்கின்றது. மாணவர்களுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் (கண்டித்தல், தண்டித்தல்) இன்றி பூரண சுதந்திரம் வழங்கப்படுவதால் மாணவர்கள் அதைத் தவறான வழியில் பயன்படுத்த முனைந்துள்ளதை கோடிட்டுக் காட்ட விரும்புகின்றோம்.

இதற்கு முன்னர் 8 மாணவிகள் கர்ப்பம் தரித்திருந்த விடயம் தொடர்பாகவும் அவர்களுடைய கர்ப்பத்திற்கு உ/த வகுப்பு மாணவர்களே காரணம் எனும் அதிர்ச்சியான தகவலை வெளியிட்டிருந்தோம். இதேபோல முகம் சுழிக்க வைக்கும் இன்னும் சில சம்பவங்களை இங்கு முன்வைக்க விரும்புகின்றோம். மத்திய மாகாணத்திற்கு உட்பட்ட பிரபல ஆண்கள் பாடசாலை நேரத்தில் ஒரு மாணவன் மிதமிஞ்சிய மதுபோதையில் பாடசாலை வளவுக்குள் நுழைந்தது மட்டுமல்லாமல் ரகளையில் ஈடுபட்ட கவலைக்கிடமான சம்பவம் பதிவாகியுள்ளது.

இது தொடர்பாக தெரியவருவதாவது: பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்று வருவதால் மாணவர்களுக்கான பயிற்சிக்கு நேரம் ஒதுக்கி பயிற்சி அளிக்கப்படுவது வழமை. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி குறிப்பிட்ட (சா/த) மாணவன் நண்பர்களுடன் சேர்ந்து மது அருந்திவிட்டு பாடசாலைக்குள் நுழைந்துள்ளான்.

மிதமிஞ்சிய போதையுடன் பாடசாலைக்குள் நுழைந்து அதிபரை பெயர் குறிப்பிட்டு அழைத்து ரகளை செய்துள்ளான். பின் அம்மாணவனின் போதையை தெளியவைத்து உரிய விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தற்போது அம்மாணவன் பாடசாலையை விட்டு இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தகவல்கள் கிடைத்துள்ளன. தவறான சகவாசம், பழக்க வழக்கங்கள் எந்தளவும் ஒரு மாணவனின் வாழ்க்கையை புரட்டிப் போடுகின்றன என்பதற்கு இச்சம்பவம் அனைவருக்கும் ஒரு படிப்பினை.

இதேபோல மத்திய மாகாணத்தில் கம்பளை கல்வி வலயத்திற்கு உட்பட்ட பிரபலமான பாடசாலை ஒன்றில் கணினிப் பிரிவை உடைத்து சுமார் 80 ஆயிரம் பெறுமதியான கணினியின் பாகங்களை கொள்ளையிட்ட மாணவர்கள் தொடர்பான தகவல்கள் அனைவருக்கும் அதிர்ச்சியாக அமைந்திருக்கும்.

பாடசாலையின் கணினிப் பிரிவின் ஜன்னல்களை மூடுவது போல இலேசாக திறந்துவைத்துவிட்டு மாலை நேரத்தில் வந்து பொருட்களை கொள்ளையடித்துள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை புத்தளம் பகுதியைச் சேர்ந்த பிரபல பாடசாலை ஒன்றில் 16, 17 வயதுடைய மாணவர்கள் இருவரை இனம் தெரியாத குழுவொன்று கடத்தி கடுமையாகத் தாக்கிவிட்டு இரவு 10 மணியளவில் விடுவித்துள்ளது. இம் மாணவர்கள் இருவரும் கடத்தப்பட்டு தாக்கப்பட்டதன் பின்னணியில் காதல் லீலைகள் இருக்குமென சந்தேகிக்கும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இதேபோல மாத்தளை விஜய கல்லூரி மற்றும் புனித தோமையர் ஆண்கள் பாடசாலை மாணவர் குழுக்களுக்கிடையில் கடந்தவாரம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இரு மாணவர்கள் மாத்தளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக தகவல் கிடைக்கின்றன. காதல் விவகாரங்களுக்காக மாணவர்கள் கோஷ்டி சண்டையில் ஈடுபடுவது கல்வியை விட காதல் விடயங்களிலேயே மாணவர்கள் அதிக நாட்டம் காட்டுவதாகப் புலனாகின்றது.

ஜா-எல தடுகம பகுதியில் பூட்டப்பட்டிருந்த சில்லறைக் கடையை உடைத்து 10 ஆயிரம் ரூபாவை 14 வயது பாடசாலை மாணவன் உட்பட மூவர் திருடியுள்ளனர். சில்லறைக் கடை வியாபாரி குடும்பம் சகிதம் பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த வேளையில், பட்டப்பகலிலேயே இம் மாணவன் உட்பட மூவர் சேர்ந்து இக் கைவரிசையைக் காட்டியுள்ளனர். பின்கதவு உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்த பக்கத்து கடைக்காரர்கள் தகவலை உடனடியாகத் தெரியப்படுத்த இம் மாணவன் உட்பட மூவரும் பிடிபட்டுள்ளனர்.

மாணவர் மத்தியில் குற்றச் செயல்கள் நிதம் நிதம் அதிகரிக்கின்றன என்பதற்கு இன்னுமொரு சம்பவத்தையும் குறிப்பிடுகின்றோம். தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவி (12 வயது) தனது காதலுக்கு தந்தை எதிர்ப்பு தெரிவித்ததால் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் ஒன்று புத்தளம் கரம்ப பகுதியில் பதிவாகியுள்ளது.

தனது காதலனுடன் இச்சிறுமி கதைத்துக்கொண்டிருப்பதைக் கண்ட தந்தை அவர்களின் காதலை கடுமையாக எதிர்த்துள்ளார். சிறுமிக்கு புத்திமதி கூறியுள்ளார். மனமுடைந்து போன சிறுமி தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டாரென பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இங்கு நாம் குறிப்பிட்ட சம்பவங்கள் அனைத்துமே கடந்த இரு வாரங்களில் எம்மை வந்தடைந்த செய்திகள். இதைவிட அச்சுக்கு வராத எவ்வளவோ செய்திகள் நிதம் அரங்கேறிய வண்ணமே இருக்கின்றன. பாடசாலை மாணவியுடன் குடும்பம் நடத்திய பிக்கு, போதைப் பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர் என ஏகப்பட்ட செய்திகளை பக்கம் பக்கமாக எழுதினாலும் இக் குற்றச் செயல்கள் குறைவதாக இல்லை. இதற்கு ஒழுங்கான ஒழுக்க வரையறைகள் இல்லாமையே காரணம் என்பதை திடமாகக் கூறலாம்.

மாணவர் ஒழுக்க விடயத்தில் ஆசிரியர், அதிபர் அக்கறையுடன் செயற்பட்டாலும், ஒரு வரையறைக்கு மேல் மாணவர்களை அவர்களால் கட்டுப்படுத்த முடியாது எனும் யதார்த்தத்தை உரிய தரப்புக்கள் ஏற்று மாணவர்களின் ஒழுக்கத்தை சீர்மை செய்ய ஒழுக்க வரைமுறைகளை ஏற்படுத்த வேண்டும். கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதில் பலனில்லை என்பதை பெற்றோர் உட்பட சகலரும் புரிந்துகொள்ளவேண்டும்.

எம்.தாசன்.

# வீடு வாங்க வெளிநாடு சென்றேன் நோயை வாங்கி நடைப்பிணமாக வந்தேன்!

குடும்ப வறுமையைத் துடைக்க பிள்ளைகளின் படிப்புச் செலவு, வீடு ஒன்றை அமைக்க என ஏதோ ஒரு குறிக்கோளுடன் அநேகமான பெண்கள் வெளிநாடுகளுக்குச் செல்லுகின்றனர்.

மிகச் சிலரின் கனவுகள் நனவாக பலரின் கனவுகள் காற்றோடு கலைந்து விடுகின்றன. அது மட்டுமல்ல அவர்களின் வெளிநாட்டுப் பயணம் அவர்களுக்கு தீராத கண்ணீரையும் கவலையையும் கூடத் தந்து விடுகிறது.



தனது குடும்பத்திற்கான நிரந்தர வீடு ஒன்றை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் வெளிநாடு சென்று பல கொடுமைகளை அனுபவித்து நாடு திரும்பிய மஞ்சுளாவை சந்திக்கும் வாய்ப்பு அண்மையில் எமக்குக் கிடைத்தது.

வட்டவள கடவள தோட்டத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்தான் மன்னதிகே மஞ்சுளா பெரேரா. இவருக்கு வயது 32. இவரின் கணவர் ராமசந்திரன் சத்தியகுமார். இவர்களுக்கு ஒரு மகன். சாதாரண குடும்பம். ஏனையவர்களைப் போன்று வசதி வாய்ப்புகளோடு வாழமுடியாவிட்டாலும் ஏதோ வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

மஞ்சுளாவின் கணவர் தனியார் பேருந்து ஒன்றில் நடத்துனராகப் பணிபுரிந்து வருகின்றார். இவரின் வருமானம் குடும்பத்தை கொண்டு நடத்துமளவிற்கு போதுமானதாக இருக்கவில்லை. அத்தோடு தமது குடும்பத்திற்கு வீடு ஒன்றை அமைத்துக் கொள்ளும் எண்ணமும் இவர்களுக்கு இருந்தது.

நாளடைவில் இந்த எண்ணம் ஆளமாக வேரூன்றி வீட்டைக் கட்டுவதற்காக மத்திய கிழக்கு நோக்கிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டார் மஞ்சுளா.

இவர்களின் முயற்சி வெற்றியடைய சவுதிஅரேபியாவின் தம்மாம் என்ற நாட்டுக்கு 15.11.2011 இல் பணிப்பெண்ணாகச் சென்றார்.

இவ்வாறு சென்ற மஞ்சுளா ஐந்து மாதங்கள் மட்டுமே எந்தவிதமான பிரச்சினைகளும் இன்றி நோயாளி ஒருவரை பராமரிக்கும் தொழிலைச் செய்துவந்தார்.

இப்படியே ஆறு மாதங்கள் கடந்தன. குறித்த நோயாளிக்கு இருந்த நோய் மஞ்சுளாவைத் தொற்றிக்கொள்ள, இந்த விடயம் வைத்திய பரிசோதனையின் மூலம் அம்பலமாகியது.

இந்நோய்த் தொற்றுக்கு ஆளாகியிருப்பதால் உடனடியாக நாட்டைவிட்டு இலங்கைக்கு செல்லுமாறு வைத்தியர் கூற, விடயத்தை வீட்டு எஜமானியிடம் மஞ்சுளா தெரிவித்துள்ளார்.

இதற்கு பின்னரே எஜமானர்களின் உண்மையான உருவம் வெளிப்படத் தொடங்கியது. அன்றிலிருந்து கொடுமைகள் ஆரம்பித்தன.

மஞ்சுளாவின் காலில் துவக்கினால் தாக்கி, இறப்பர் பட்டியால் கழுத்தை நெறித்து கொலை செய்யும் அளவிற்குத் துணிந்துவிட்டார்கள்.

நடந்த கொடுமைகளை தொலைபேசியினூடாக கணவருக்கு அறிவிக்க, கணவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் தொடர்பு கொண்டு தன்னிலைமைகளை கூறி மஞ்சுளாவை இலங்கைக்கு வரவழைக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

தொடர்ந்து மேற்கொண்ட முயற்சியின் பயனாக 2012.08.14 ஆம் திகதி இலங்கைக்கு வந்து சேர்ந்தார். இலங்கை வந்த மஞ்சுளாவிற்கு வீடு திரும்புவதற்குக் கூட பணம் இருக்கவில்லை. சுவசெவன என்ற நிறுவனத்தின் ஊடாக 800 ரூபா பணம் உதவி செய்ததாகவும், அப் பணத்தை எடுத்துக் கொண்டு வீடு திரும்பியதாகவும் மஞ்சுளா தெரிவிக்கின்றார்.

தற்போது மஞ்சுளாவிற்கு மத்திய மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாதாந்தம் மருத்துவச் செலவிற்காக 450 ரூபா வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மஞ்சுளாவை இலங்கைக்கு வரவழைக்கும் முயற்சியில் ஈடுபட்ட கணவரின் தொழிலும் தற்போது பறிபோயுள்ளது. இருந்த தொழிலையும் இழந்துவிட்ட கணவர், மருத்துவ செலவுக்காக மற்றவர்களை நாடும் மஞ்சளா, நடந்தது எதுவுமே தெரியாமல் இவர்களின் குழந்தை, இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிலையில். இவர்களின் வீட்டுக்கனவும் வெறும் கனவாகவே போய்விட்டது.

இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டப்போவது யார்?

**சதீஸ்குமார்**

டயகம மேற்கு 3ம் பிரிவு தோட்டம்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
புனராவர்தன பஞ்சகுண்ட அஷ்டபந்தன
பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்.

- விழா ஆரம்பம் : 27.03.2013 புதன்கிழமை
- எண்ணைக்காப்பு : 28.03.2013 வியாழக்கிழமை
- மகா கும்பாபிஷேகம், அன்னதானம் : 29.03.2013 வெள்ளிக்கிழமை

இரவு 9.00 மணிக்கு ஸ்ரீதரன் தலைமையிலான இசை நிகழ்ச்சி

விழா சிறப்புற அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.
இங்ஙனம் ஆலய பரிபாலன சபை,
தோட்ட தலைவர்மார்கள், தோட்ட பொதுமக்கள்

அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக!

சர்வதேச விருது பெற்ற
R.L. கிளெமன்ற் வழங்கும்
சர்வதேச தரச்சான்றிதழ் பெறுவதற்கான
கேக் வகுப்புகள் பல்வேறு கேக் கலவைகள், மங்கள நிகழ்ச்சிகளுக்கான கேக் மாதிரிகள், சீனி மலர் மற்றும் பிறந்த தின கேக் வகை புடிங், கெட்டோ சீனி டோல்ஸ் மற்றும் பேஸ்ரி பாடநெறிகள்

மு.ப. 9.00 மணியிலிருந்து மதியம் 12.00 மணி வரை மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்



- வென்னப்புவ ஏப்ரல் 04, I.C.S. உயர் கல்வி நிறுவனம், வென்னப்புவ
- கொட்டாஞ்சேனை ஏப்ரல் 05, சாந்த லூசியா ஆசன தேவாலயம், மிஷன் மண்டபம்
- கண்டி ஏப்ரல் 06 ஸ்ரீ புஷ்பாதான மண்டபம்
- கொழும்பு ஏப்ரல் 07, 106/14, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு - 15
- நீர்கொழும்பு ஏப்ரல் 08 பர்ஹா மண்டபம்
- மாத்தறை ஏப்ரல் 09, பேக் அன்ட் ரேக் காலி வீதி, வல்கம, மாத்தறை.
- வெள்ளவத்தை ஏப்ரல் 10 சாந்த லோரன்ஸ், தேவாலய மண்டபம்
- மஹபாகே ஏப்ரல் 11, 546, நீர்கொழும்பு வீதி, மஹபாகே, ராகம

அமெரிக்கா வில்ரன் கேக் பாடசாலை பாடநெறி இலக்கம் 1,2 மற்றும் 3 ஐக்கிய இராச்சியம் KPME Limited School of Cake Decoration & Confectionary சர்வதேச பாடசாலையின் உயர் டிப்ளோமா பாடநெறிகளை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட விசேட பாடநெறிகளுக்காகவும் இப்பொழுது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

Presented by
விசாரணை : 011 2522201 இணையதளம்: www.clementcake.com



## நீ யார்?

உன் உடல் மட்டும்
உத்தமமாக இருந்து
என்ன பலன்
நேர்மையற்ற உன்
எண்ணங்களும்
வெற்று வார்த்தைகளினாலும்
வைராக்கியமான என் நெஞ்சில்
நெளிவு,சுழிவு ஏற்படுத்தி
வெற்றுத் தாளான என் நெஞ்சை
கரும் புள்ளிக் கூட்டமாக்கியவளே!
எத்தனையோ பசப்பு வார்த்தைகளை
என் மீது வீசி
என் உண்மையான
உறவுகளை நான் சாந்தவர்களை
என்னிலிருந்து தூரப்படுத்தியவளே...
கரைப்பார் கரைத்தால்
கல்லும் கரையும்
நான் கரையமாட்டேன்
என்றிருந்தேன்
என்னை காவு கொண்டவளே
என்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள
எனக்குத் தெரியும்
சந்தர்ப்ப சூழ்நிலைக்கு
பாவம் செய்பவர்களையே
சமூகம் மன்னிப்பதில்லை
உன் போன்றவர்களை
என்ன செய்யலாம்
நீயே உன் மனச்சாட்சியிடம் கேள்
உனக்கது உண்டா?
என்பதிலும் எனக்குச் சந்தேகம்
நீ பூப்போட்டு அலங்கரிக்கும்
உன் உடல் தான்
நீ செத்த பின் புழுக்களின் உணவு

மு.கா.முகம்மது அஸ்வர்,திருகோணமலை.

## சொல்லாத காதல்

அவன் என் மீது வைத்திருந்த
அன்பு காதல் என்று
அன்று தெரியவில்லை
இன்று அதைச் அறிந்தும்
அவனிடம் சொல்ல முடியவில்லை
என்வாழ்வில் காதல் எனும்
விதையை விதைதான்
அது விருட்சமாய்
ஆவதற்கு முன்பே நீ விதை விதைத்த
மண்ணிலேயே புதைத்து
விட்டாயே என் வாழ்வில்
தொடர் புள்ளிகளை மட்டும் வைத்து
விட்டு கோலம் போட மறந்து விட்டாயே

லோ.தனலெட்சுமி,அக்கரபத்தனை.

## மழை

மேக புத்தகத்தில்
எழுதப்பட்டு பூமிக்கு
வந்து சேர்ந்த ஏடுகள்

## இருட்டு

சூரியனின் மறைவுக்கு
பின் தோன்றும்
கறுப்பு அழகி

நே.மதன்குமார்,ஹொப்டன்.



## மலையகம்

பச்சை நிறப் போர்வையை
போர்த்திக் கொண்டிருக்கும்
மலையக பூமித்தாயே!
நீ போர்வையை
போர்த்திக் கொண்டு
உறங்குவதனால் தான்
உன் பிள்ளைகள் படும்
துன்பம் உனக்கு புரிய
வில்லை போலும்!
மதில் போல் மலைகள்
மலையகத்திலே
நிறைந்திருக்க
வசந்த காலம் வந்திடவே
வந்திடும் மக்கள்
கூட்டம்
மலையகத்திற்கு
மகிழ்ச்சியுடன்!
சிறப்பான சித்திரையிலே
வசந்த காலம் வந்து
விட்டாலும்
வருவதில்லை வசந்த காலம்
இங்கு வாழும் மக்களுக்கு

வி.விஜயகுமார்,மாத்தளை.

## உனக்காக

தாயை மீறி உன்னைத்தேடி
வந்தேன்
எனக்காக நீ காத்திருப்பாய் என்று
ஆனால் என்னை காக்க
வைத்துவிட்டாயே!
உனக்காக அனைத்தையும்
இழப்பேன்
உன்னோடு சேர்ந்து மீண்டும்
பெறுவேன் எல்லாம்
நானும்...... உனக்காக

எச்.நதி, இரக்குவானை.

## மறதி...

உயிர் விடச்
சொல்
இக்கணமே
சம்மதிக்கிறேன்!
மறக்க மட்டும்
சொல்லாதே
அடிக்கடி
நான் மறந்து
போகும் விடயமே
மறக்க வேண்டும்
என்பதை தான்!

கிருஷ்ணசாமி அருள்,கொக்காகலை.

## நடிக்க தெரியாது

இதயம் எத்தனை முறை
காயப்பட்டாலும் மனதிற்கு
பிடித்த உன்னை மறக்காது
காரணம் இதயத்துக்கு
நடிக்க தெரியாது
துடிக்க மட்டுமே தெரியும்

சுபதர்ஷனா,நாவலப்பிட்டிய.



## நினைவுகளுடன் வாழவாவது விடு

என் உயிரை சுட்டெரித்தால்
பரவாயில்லை -உன்
நினைவுகளை
சுமக்கும் என் இதயத்தை
சுட்டெரிக்காதே!
சேர்ந்து வாழ கிடைக்காவிடினும்
நினைவுகளுடன்
வாழவாவது விடு

த.கஜேந்திரன்,ருவான்வெல்ல.

## பிடிக்கும்

சில பத்திரிகைகளினால் என்
கவிதைகள் நிராகரிக்கப்படும் போது
ஏற்படும் வலியை விட - உன்னால்
என் காதல் நிராகரிக்கப்படும் போது
அதிக வலிகளை உணர்கின்றேன்
காரணம் படிக்கப்பட்ட பின் தான்
என் கவிதைகள்
நிராகரிக்கப்படுகின்றன ஆனால்
என் காதலோ!
உன்னால் படிக்கப்படாமலே
நிராகரிக்கப்படுகின்றது.
நீ ஒருமுறை படித்துப்பார்
உன்னை விட
என்னை உனக்கு அதிகம் பிடிக்கும்

கே. கிருஷ்ண ராஜ்,ஸ்டேலிங்.

## நீயும் நானும்

பகுபதம் பகாப்பதம்
இரண்டையும் நன்றாகப்
படித்த பின்பு
இதயத்தில் அழுத்தி
எழுதிக் கொண்டேன்
நீயும் நானும்
பகாப்பதம் என்று

ந.ஷோபனா,மட்டக்களப்பு.

## நான் விட்ட தவறுகள்

காற்றை சுவாசித்தேன்
சூறாவளி வரும்
என்பதை உணராமல்...!
மழையை இரசித்தேன்
வெள்ளம் வரும்
என்பதை அறியாமல்....!
பகலை ஆட்சேபித்தேன்
இரவு சூழ்ந்திடுமே
என்பதை யோசிக்காமல்
அன்பை உள்வாங்கினேன்
என் வாழ்வே தனிமையாகும்
என்பதை நினையாமல்...!

வை.பூஜா, போகவந்தலாவ.

## வருவாயா?

உன் நினைவுகளுடன்
என்னை போராட
விட்டு விட்டு
தொலைதூரம் சென்று
விட்டாய்
நீ வருவாய்
என்ற காத்திருப்பில்
காலம் கழிகிறது
வருவாயா என்னை
மீட்டுச் செல்ல?

பா.பவானி,இரத்தினபுரி.

## நட்பு

நட்பு எனும் கடலை தாண்ட
ஒரு நண்பன் தேவை அந்த
நண்பனே நீ தான் அது தான்
நட்பு

எம்.எப். அஸ்மத்,காவத்தை.

க வி தை க ள்



## காத்திருக்கிறேன்

தனிமையை தத்தெடுத்து
மௌனத்தை
சிலை செதுக்கி
நீ வரும் வரை
காத்திருக்கிறேன்
மௌனச் சிலைக்கு
வார்த்தைகளால் உயிர்
கொடுக்க

சு.வினோதா,நுவரெலியா.

## இதுதான் காதல்

காதல் என்பது கப்பல் மாதிரி
சிலரை கரையில் சேர்க்கும்
சிலரை கல்லறையில் சேர்க்கும்


## உண்மை

தூண்டிலில் சிக்கிய மீனும்
காதலில் சிக்கிய பெண்ணும்
துடிப்பது நிச்சயம்

ரு.பிரகாஷ்,ஹொப்டன்.

உதய சூரியன் "கவிதைச்சமர்"
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல. 68, எலிஹவுஸ் வீதி, கொழும்பு 15.
பெயர்:-------------------------
முகவரி:-------------------------
தொலைபேசி இல--------------------

டொக்டர் அமுதன் தன் அறையில் கட்டிலில் படுத்திருந்தார். அன்று அவருக்கு ஓய்வுநாள். அந்த நாட்களில் அவர் நிறைய வாசிப்பார். அதிலும் மலையக எழுத்தாளர்களின் புத்தகங்களைத் தேடி வாங்கிப் படிப்பார். புத்தக வெளியீடுகளைத் தவறவிடமாட்டார். அன்று மலையக எழுத்தாளர்களில் மிக பிரபல்யமான ஒருவரின் நாவலை ஆவலுடன் படித்துக்கொண்டிருந்தார். உன்னையே உறவென்று என்ற



# நினைத்ததை முடிப்பவன்! 41

பாலா.சங்குப்பிள்ளை

அந்த நாவலை கிட்டத்தட்ட ஐந்து தடவை படித்துவிட்டார். ஆனால், எத்தனை முறை வாசித்தாலும் திகட்டவில்லை. மலையகத்தில் கல்வியில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தக்கூடிய அரிய பணியினை செய்யும் ஆசிரியர்களின் தியாக சிந்தனையினை மிகச் சிறப்பாக அந்த நாவலில் கதாசிரியர் கூறியிருந்தார். அதைவிட காதலின் புனிதத்தினை புதுவிதமாக மிக அழகாக ஆசிரியர் சுட்டிக்காட்டியமையானது அவருக்குத் தன்னுடைய கடந்த காலத்தினை ஞாபகப்படுத்தியது.

"பால் சூடாயிருக்கு...." பவானி கதவருகே பால் குவளையுடன் நின்றிருந்தாள்.

"இங்க வா பவானி.... இந்தா இதுல பணம் இருக்கு... பழைய உடுப்புகளை தூரப் போட்டுட்டு புதுசா வாங்கிக்க... காலையில பார்த்தேன். சப்பாத்து தேய்ந்து கிழிந்து போயிருக்கு. எதுவேணும்னாலும் என்கிட்டே கேட்கக் கூச்சமாயிருந்தா அம்மாகிட்ட சொல்ல வேண்டியதுதானே."

பவானி கண்ணீருடன் அவனைப் பார்த்தாள்.

"சொந்தக்காரங்களே என்னை வெறுத்து ஒதுக்கினாங்க. ஆனா, நீங்களும் அம்மாவும் என்மேல் இவ்வளவு அன்பு காட்டுறீங்களே.... நான் என்ன கைமாறு செய்யப்போறேன்...."

"என்னோட வாரிசா நீ டொக்டராகணும். என்னை மாதிரியே நம்ம சமூகத்துக்கு எல்லா உதவியும் செய்யணும். அதுமட்டும் செஞ்சா போதும். சரி.... போகும்போது கதவை சாத்திட்டுப் போ...."

டொக்டர் அமுதன் மெதுவாகக் கண்களை மூடினார்.

அவர் நினைவுகள் வேகமாகப் பின்னோக்கிப் பயணமாயின. அப்போது அவருக்கு வயது 21. கொழும்பு பல்கலைக்கழகத்தில் வைத்தியருக்கு படித்துக் கொண்டிருந்தார். அங்கேதான் ராஜகுமாரியை சந்தித்தார். அமுதன் சாதாரண தோட்டத் தொழிலாளியின் மகன். ஆனால், அவளோ ஒரு பெரிய தோட்டத்துக்கே சொந்தக்காரரின் மகள். பணக்காரி. ஆனால், பண்புள்ளவள். மற்றவர்களுக்கு உதவி செய்யும் குணமுள்ளவள். கொள்ளையழகைக் கொண்டவளாக இருந்தாலும் கொள்கையில் தங்கமாகத் திகழ்ந்தாள். பணக்காரியென்ற திமிர் கிடையாது. அவளுடைய தோழிகள் அனைவருமே சாதாரணமானவர்களாகவே இருந்தார்கள்.

அமுதன் இரண்டாமாண்டு மாணவனாக இருந்த வேளையில்தான் அவள் முதலாமாண்டு மாணவியாக வந்தாள். வழமையாக நடக்கும் பகிடிவதை கட்டம் கட்டமாக நடக்கத்தான் செய்தது. ராஜகுமாரியும் இதற்கு விதிவிலக்கல்ல. அவளை மாணவர்கள் சுற்றி வளைத்தபோது அந்த வழியாக வந்த அமுதன் சட்டென ஓடிவந்தான். அவள் தனக்கு வேண்டியவள் என்றும் எனவே பகிடிவதை செய்யவேண்டாமென்றும் வாதாடி அவளை விடுவித்தான். அன்றிலிருந்து எங்கே கண்டாலும் அமுதனிடம் ஓடிவந்து கதைப்பாள்.

"அன்னைக்கி நீங்க மட்டும் வந்திருக்காட்டி நான் ரொம்ப சிரமப்பட்டிருப்பேன்.... எப்படி உங்களுக்கு நன்றி சொல்லுறதுன்னே தெரியலை.... நான் பதுளைப் பக்கம் எங்கப்பா எஸ்டேட் ஓனர் நீங்க...."

"எனக்கு நுவரெலியா பக்கம். எங்கப்பா சின்ன வயசிலேயே இறந்துட்டாரு. அம்மாதான் எனக்கு எல்லாம். அம்மா மலையில ஏறி கஷ்டப்படுறாங்க. நான் மலையளவு கஷ்டங்களை மனசுல அடக்கிக்கிட்டு படிக்கிறேன். அவங்களோட லட்சியம் என்னை டொக்டராக்குறதுதான்...."

ராஜகுமாரி அவனை அதிசயத்துடன் பார்த்தாள்.

"நீங்க வெளிப்படையா பேசுறது. எனக்கு ரொம்ப பிடிக்குது. மத்தவங்களாயிருந்தா நிச்சயமா பொய்தான் சொல்லியிருப்பாங்க.... ஏழையாயிருந்தாலும் கோழையாயிருக்கக்கூடாதுன்னு சொல்லுவாங்க. நீங்க உண்மையிலேயே உயர்வானவர்தான்..."

"அதுசரி.... நீங்கதான் வசதியான குடும்பத்து பெண்ணாச்சே.... டொக்டராகி நீங்க என்ன செய்யப்போறீங்க?"

"வசதியானவங்கன்னா எங்களுக்கு மட்டும் அன்பு, பாசம், இரக்கம் இருக்கக்கூடாதா?".

"ரொம்ப நல்லாதான் பேசுறீங்க. ஆனா யதார்த்தத்துக்கு இதெல்லாம் சரிப்பட்டு வருமான்னு தெரியலை...."

அப்புறம் அவர்கள் அடிக்கடி சந்தித்தார்கள். பேசினார்கள். எல்லாமே படிப்பு சம்பந்தமாகவும் சமூகம் பற்றியதாகவுமே இருக்கும். வாரத்துக்கொருமுறை ராஜகுமாரி வீட்டிலிருந்து விஷேட சாப்பாடு வரும். அவள் அமுதனுக்கு கொடுக்காமல் ஒருபிடி சோறு உண்ணமாட்டாள். அமுதன் மறுத்தால் அவள் பிடிவாதம் செய்வாள். எனவே, அவன் இணங்கிவிடுவான். ஒருமுறை அவளின் பிறந்தநாள் வந்தது. அவள் அமுதனுடன் அவனின் நெருங்கிய கூட்டாளிகளையும் ஹோட்டலொன்றுக்கு அழைத்துச் சென்று விருந்து படைத்து அவர்களை திக்குமுக்காட வைத்துவிட்டாள். அவளுடன் ஒன்றாகப் படிக்கும் சக மாணவிகளுக்கு ஏதாவது கஷ்டமென்றால் உடனடியாக உதவி செய்பவள் அவளாகத்தானிருக்கும். இப்படியாக எந்தப் பக்கம் பார்த்தாலும் எல்லா வகையிலும் ராஜகுமாரி வித்தியாசமானவளாக பணக்காரியென்ற அகங்காரமில்லாதவளாக உயர்வானவளாகவே இருந்தாள்.

அப்படிப்பட்டவளுக்கும் அமுதனுக்குமிடையே காதல் ஏற்பட்டது எதிர்பாராததாகும். ஒருநாள் இரவு அமுதன் தன் விடுதியறையில் தூங்காமல் விடியவிடிய சத்தம் போடத் தொடங்கினான். உடம்பு நெருப்பு போல சுட்டது. அறையிலிருந்த சக நண்பர்கள் விடுதி பொறுப்பாளருக்கு அறிவிக்க உடனடியாக அவன் அரச மருத்துவமனைக்கு கொண்டுபோகப் பட்டான்.

(தொடரும்...)

பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத வீட்டுத் தாதிமார்கள் தேவை (கொழும்பு)
தகைமை :
ஆண்டு 10 க்கு மேல் கல்வி கற்றிருத்தல் விரும்பத்தக்கது.
உணவு, தங்குமிட வசதிகளுடன் மாத வருமானம் ரூ.10,000 - 18,000/-
தொடர்பு : We Care Home Nursing
T.P : 011 3053293, 0777568349

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

28.03.13

முதல்

03.04.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | கவலை | ஏமாற்றம் | சிக்கல் | பொறாமை | இலாபம் | உயர்வு | புகழ் |
| ரிஷபம் | வரவு | வெற்றி | உதவி | மேன்மை | நன்மை | சினம் | கீர்த்தி |
| மிதுனம் | தாமதம் | கவலை | நன்மை | ஆதரவு | போட்டி | அன்பு | சுபம் |
| கடகம் | செலவு | இலாபம் | சிரமம் | போட்டி | தனம் | போட்டி | நட்பு |
| சிம்மம் | ஆதரவு | நட்பு | நிம்மதி | மகிழ்ச்சி | வெற்றி | ஜெயம் | அன்பு |
| கன்னி | அசதி | தடங்கல் | இலாபம் | ஆதாயம் | அமைதி | நன்மை | சாந்தி |
| துலாம் | வெற்றி | மகிழ்ச்சி | சுகம் | நோய் | பயம் | பகை | வெற்றி |
| விருச்சிகம் | வருத்தம் | தாமதம் | மேன்மை | இன்பம் | தாமதம் | இன்பம் | வரவு |
| தனுசு | நன்மை | சுகம் | வெற்றி | நன்மை | நலம் | திடம் | சுகம் |
| மகரம் | அமைதி | வரவு | நற்செயல் | சோர்வு | கோபம் | பெருமை | கோபம் |
| கும்பம் | செலவு | சிக்கல் | ஆக்கம் | விவேகம் | திறமை | மகிழ்ச்சி | பாராட்டு |
| மீனம் | பயம் | அசதி | அன்பு | பகை | புகழ் | விவேகம் | திறமை |



## குழந்தைகள் அம்மாவைத் தேடுவது ஏன்?

குழந்தைகள் தாயிடம் அதிக பாசம் காட்டுவதை நீங்கள் பார்த்திருக்கலாம். சில குழந்தைகள் அழுவதை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், அம்மாவைப் பார்த்தாலே உடனே அழுகையை நிறுத்திவிடும்.

பிறந்து சில மாதங்களில் ஆட்களைப் பார்த்து இனம் காணத் தெரியாத பொழுதே தன் தாயினை குழந்தை நன்றாக அடையாளம் தெரிந்து வைத்திருக்கும். தாயின் அரவணைப்பிற்குப் பிறகே சமாதானம் அடையும். இல்லாவிட்டால் காரணமே இல்லாமல் அழுவதை நாம் பார்க்கலாம்.

ஆனால், இதுபோன்ற பாசத்தை தந்தையுடன் குழந்தை வெளிப்படுத்துவது கிடையாது. தாய்-குழந்தைக்கு மட்டும் அப்படி என்ன பிணைப்பிருக்கிறது? என்று விஞ்ஞானிகள் ஆராய்ந்து வந்தனர்.

ஒக்சிடொக்சின் என்னும் ஒருவித ஹோர்மோன்கள் பெண்களின் உடலில் காணப்படுகின்றன. இவைதான் தாய் - குழந்தையின் பிணைப்பைத் தூண்டுகிறது.

அதுமட்டுமல்லாமல் வேறு சில பணிகளிலும் இந்த ஹோர்மோன்கள் பணியாற்றுகிறது. தாய்க்கு, பாலூட்டும் உணர்ச்சியை அதிகமாக்குவது, உடல் உழைப்பைத் தூண்டுவது, குழந்தைகளை தாயின் அருகாமையை எதிர்பார்த்து காத்திருக்க வைப்பது போன்ற பணிகளில் ஒக்சிடொக்சின் பங்கேற்கிறது.

இப்போது புரிகிறதா குழந்தை எ[illegible] அம்மாவி[illegible]கொள்கின்றது [illegible]

## திருடனின் பரிசு!


''மிரட்டியும் பயமுறுத்தியும் பெறும் மதிப்பும் மரியாதையும் நிலைக்குமா?''

நிலைக்காது... ஒருமுறை சார்லி சாப்ளின் வெளியே சென்று வீடு திரும்பும்போது அவருடைய கோட்டுப் பையில் யாரோ ஒருவரது தங்க கைக் கடிகாரமோ இருந்தது. அதை அவர் காவல் துறையிடம் ஒப்படைத்தார். அது பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டது.

மறுநாள் சாப்ளினுக்கு ஒரு கடிதம் வந்தது. அதில், ஐயா! நான் ஒரு திருடன். உங்கள் அபிமானி. நான்தான் அந்தத் திருட்டுக் கடிகாரத்தை தங்கள் பையில் போட்டேன். என் பரிசாக அதை ஏற்றுக்கொள்ளவும் என்று இருந்தது. சாப்ளின் அந்தக் கடிதத்தையும் காவல் துறையில் ஒப்படைத்தார். அதுவும் விளம்பரப்படுத்தப்பட்டது. மறுநாள் சாப்ளினுக்கு ஒரு பார்சலும் கடிதமும் வந்தது. அதில், ஐயா! அந்த தங்கக் கடிகாரம் என்னிடம் இருந்து திருடப்பட்டதுதான். ஆனால், நான் அந்தத் திருடனைவிட தங்கள் மேல் அதிக மதிப்பு வைத்துள்ளேன். எனவே, அந்த கடிகாரத்தையும் இத்துடன் அனுப்பியுள்ள தங்கச் செயினையும் என் பரிசாக ஏற்றுக்கொள்ளவும் என்று இருந்தது. இப்படித் தாமாக போட்டி போட்டுக்கொண்டு வரும் மதிப்பும் மரியாதையும் தான் என்றென்றும் நிலைக்கும்!

## இருந்தாலும்...

மக்கள் நியாயம் தெரியாதவர்கள். சுயநலவாதிகள்.
இருந்தாலும் அவர்களை நேசியுங்கள்.
நன்மை செய்தாலும் ஏதாவது உள்நோக்கம் கற்பிப்பார்கள்.
இருந்தாலும் அவர்களுக்கு நன்மை செய்யுங்கள்.
நீங்கள் வெற்றி அடைந்தால், உண்மையான எதிரிகளும் தவறான நண்பர்களும் கிடைப்பார்கள்.
இருந்தாலும் வெற்றிக்காகப் பாடுபடுங்கள்.
நீங்கள் இன்று செய்யும் நன்மை நாளை மறக்கப்படும்.
இருந்தாலும் நல்லதே செய்யுங்கள்.
நேர்மை உங்களுக்குத் துன்பம்தான் கொடுக்கும்.
இருந்தாலும் நேர்மையாய் இருங்கள்.
பல ஆண்டின் உழைப்பு ஒரே நாள் அழிக்கப்படக் கூடும்.
இருந்தாலும் தொடர்ந்து உழையுங்கள்.
மக்களுக்கு உண்மையிலேயே உதவி தேவை.
ஆனால், நீங்கள் உதவி செய்தால் உதைப்பார்கள்.
இருந்தாலும் உதவி செய்யுங்கள்.




அன்பு கொடு மரியாதை கொடு என
அடுத்தவரிடம் பிச்சையெடுக்கும்
பிச்சைக்காரனாக இருக்காதே!
கேட்காமலேயே கொடுக்கும்
செல்வந்தனாக இரு!
அன்பும் மரியாதையும்
கேட்டு பெறப்பட
வேண்டியவை அல்ல!
கொடுத்து பெறப்பட வேண்டியவை!

வாழ்க்கை என்பது அழகிய
ஒருவழிச் சாலையைப் போன்றது.
அந்தச் சாலையில்
பயணிக்கும் போது
நீங்கள் திரும்பிப் பார்க்க முடியுமே
தவிர திரும்பிப்போக முடியாது.
ஆகவே, எதையும் இழந்துவிடாமல்
வாழ்க்கையில் ஒவ்வொரு நொடி
யையும் அனுபவித்து மகிழுங்கள்!

ஒருவர் மேல் அளவுக்கு அதிகமாக அன்பு வைக்கும் முன் தெரிந்து கொள், உனக்கு அந்த உறவு நிரந்தரமானது அல்ல, ஒரு நாள் உன்னை விட்டுப் பிரியும் என்று....

சவப்பெட்டி இறுதி யாத்திரைக்கு தயாராக இருக்க, அங்கு வந்திருந்தவர் தன் நண்பரின் நற்குணங்களைப் பற்றி சிறு உரை நிகழ்த்தினார்.
''மறைந்த நண்பர் கற்பில் ராமன்! எவ்வித தீயப் பழக்கங்களும் அண்டாமல் நெருப்பாய் வாழ்ந்தவர்! ஒரு மனிதன் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு உதாரணமாய் வாழ்ந்து உயிர் நீத்தவர்...''
இறந்தவரின் மனைவி தன் மகனை அழைத்து, ''ராஜா சவப் பெட்டிக்குள் இருக்கிறது உங்க அப்பாவா இல்லை வேற யாராவதான்னு கொஞ்சம் பாரு''

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க




ஒரு எறும்பு தாயிடம் சொன்னது அம்மா இந்த ஈ இற்கெல்லாம் மரியாதை கொடுத்து மனிதர்கள் ஈமெயில் வைத்திருக்கிறார்கள். சுறுசுறுப்பில் சிறந்த நமது பெயரில் எறும்பு மெயில் ஏன் வைக்கவில்லை?

எழுந்திருப்பதை 10 நிமிடம் தள்ளிப் போடுவதிலிருந்து அன்றைய தோல்விகள் ஆரம்பமாகின்றது.

எதிர்ப்பு இருக்கும் என்பதற்காக
கருத்துகளை முடக்கி
வைக்காதீர்கள்!
அங்கீகாரம் பெற்ற எல்லா
கருத்துகளும் ஒரு காலத்தில்
எதிர்க்கப்பட்டவையே

அப்பா: டேய் அங்க என்னடா பண்ணிக்கிட்டு இருக்க?
மகன்: கடிகாரம் நின்னுப் போச்சுப்பா.
அப்பா : சாவி கொடுடா சரியாகிடும்.
மகன் : அதான்பா ரொம்ப நேரமா கொடுத்துக்கிட்டு இருக்கேன். அது வாங்கவே மாட்டேங்குதுப்பா.

## பெண்கள் அழகு


சிங்கத்தில் அழகு - ஆண் சிங்கம்!
யானையில் அழகு - ஆண் யானை!!
மயிலில் அழகு - ஆண் மயில்!!!
மனித இனத்தில்மட்டும் - ஏன்
பெண்கள் அழகு?
ஆண்கள்
வர்ணிப்பதால்....!

அமெரிக்கன் : இந்தத் துணி கிழியவே கிழியாது.
ஜப்பானியர் - அடேயப்பா சூப்பர்!!!
ஆபிரிக்கன் - ஆச்சரியமா இருக்கே...
தமிழன் : யோவ் யாருகிட்ட கதவிடு றீங்க. கிழியாதுன்னா எப்படிய்யா எனக்கு 2 மீற்றர் துணி கிழிச்சு தாற?

உன்னுடைய திறமையால் வெற்றிகொள். மற்றவர்களின் குறையை குறிவைத்துத் தாக்காதே. ஏனென்றால் உன்னுடைய வெற்றி உன்னுடைய உழைப்பில் மட்டுமே பிறரின் தோல்வியில் அல்ல...!

**பெண்:** நீ எந்த அளவுக்கு என்னை நேசிக்கிறாய்?
**ஆண்:** என் இதயம் மொபைல்...! அதில் உள்ள 'சிம்' நீ...!
பெண்: கடவுளே நான் அதிர்ஷ்டசாலி...!
**ஆண்:** (தனக்குள்) அந்த மொபைலுக்கு இரண்டு 'சிம்' இருக்கிறது என்று அவளுக்குத் தெரியாம போனதுக்கு நன்றி கடவுளே...!

உன்னை
திட்டுபவர்களிடமும் எரிச்சல்
மூட்டுபவர்களிடமும்
விவாதம் செய்தால்
உன் உடலுக்கும் மனதுக்கும்
தான் வீண்பாதிப்பு
உண்டாகும்.




ஒரு கிராமத்து ஆள் நகரத்துக்கு வந்தார். ஒரு வீட்டில், ''கதவைத் தட்டாதீர்கள். அழைப்பு மணியை அடிக்கவும்'' என்று எழுதிய பலகை இருந்தது. அதைப் பார்த்த அவர் அழைப்பு மணியை அடித்தார். வீட்டினுள்ளிருந்து ஒருவர் வந்து கதவைத் திறந்து, ''உங்களுக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டார். கிராமத்து ஆளும், ''எனக்கு ஒன்றும் வேண்டாம். இதில் அழைப்புமணியை அடிக்கச் சொல்லி இருந்ததால் அடித்தேன்'' என்றார். வீட்டுக்காரருக்கோ கோபம் வந்து விட்டது. அவர் ''எனக்குத் தெரியும். இந்தக் குரங்குகளெல்லாம் மரத்துக்கு மரம் தாவித் திரியுமே அந்த கிராமத்தான்தானே நீ?'' என்றார். கிராமத்து ஆளோ கொஞ்சம் கூடப் பதற்றமில்லாது சொன்னார்.
''அது பரவாயில்லை, இங்கே நகரத்திலே ஒரு அழைப்பு மணி அடித்தாலே ஒரு குரங்கு வந்து நிற்கிறதே''



# வாகனத்தை வழி மறித்து நின்ற அமானுஷ்ய உருவம்

ஆவி, பேய்கள் என்று யாராவது சொன்னால்... எனக்கு காதுகுத்த வராதீங்க, என்று சொல்லி அந்த இடத்தை விட்டு அகன்று செல்கின்ற வழக்கம் உள்ளவன் நான்.

ஆனால்... அந்தச் சம்பவம் மாத்திரம் நடக்காமலிருந்தால் இன்றும் கூட அப்படித்தான் இருந்திருப்பேன் என்று சொல்லும் சுரேஸிற்கு வயது 40 இற்குள் இருக்கலாம். இரண்டு குழந்தைகளின் தந்தை. இப்போது கொழும்பில் பிரபல கம்பனியில் சாரதியாக பணியாற்றுகிறார்.

கண்டியில் சாரதியாக பணியாற்றிக் கொண்டிருந்த சுரேஷ் அங்கிருந்து கொழும்பிற்கு வந்தது ஏன்? ஆவிதான் காரணம் என்கிறார்.

சில மாதங்களுக்கு முன் சுரேஷ் கண்டியிலுள்ள பிரபல கம்பனியில் பணியாற் றிக் கொண்டிருந்தார். வியாபாரத்திற்குத் தேவையான பொருட்களை கொண்டு சென்று பரிமாற்றம் செய்வதுதான் இவரது வேலை.

இதற்காக இரவு, பகல் என நாட்டின் பல பாகங்களுக்கும் பயணம் செய்ய வேண்டிய நிலை. ஒரு சமயம் அநுராதபுரத்திற்கு செல்ல வேண்டியிருந்தது. அந்தப் பயணத்தில்தான் என் வாழ்க்கையில் மறக்கமுடியாத அந்தச் சம்பவம் நடந்தது என்று சொல்லும் சுரேஸின் முகத்தில் அன்றைய நாள் பீதி பிரதிபலிக்கிறது.

அன்று ஒரு சனிக்கிழமை. பொருட்களை ஏற்றிய லொறியை செலுத்தியபடி இரண்டு உதவியாளர்களுடன் புறப்பட்டேன்.

ஒரு இடத்தில் பாதை புனரமைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மாற்றுவழியாகப் போகவும் என்ற அறிவித்தல் பலகை காணப்பட்டது. மாற்று வழி ஆரம்பத்தில் கொஞ்சம் கரடுமுரடானதாக இருந்தது. பின் மிகப் பயங்கரமானதாக இருந்தது.

காட்டு வழி. இரு புறமும் அடர்ந்த மரங்கள். ஆபத்து என்று கூச்சலிட்டாலும் ஓடிவர ஒருவருமற்ற வனாந்தரம். அங்கும் இங்குமாக மிருகங்கள் பாதையில் குறுக்கிட்டுக் கொண்டிருந்தன. மிக நிதானமாக வாகனத்தைச் செலுத்த வேண்டிய கட்டாயம்.

இடைவழியில் காட்டு எருமைகளும் யானைகளும் எதிர்ப்படலாம் என்று கேள்வியுற்றிருந்தேன்.

நேரம் நள்ளிரவு 12 மணியைத் தாண்டியிருந்தது. உடன் வந்த உதவியாளர்கள் இருவரும் சீட்டில் சாய்ந்தபடி உறங்கிப் போயிருந்தார்கள்.

நான் நிதானமாக வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு வளைவில் திடீரென்று ஒரு உருவம்.. கரிய பெரிய உருவம், சட்டென்று பிரேக் பிடித்து வண்டியை நிறுத்தி என்னை நான் சுதாரிக்கும் முன்னர் அந்தக் கரிய உருவம் பாதையின் மறுபுறத்திற்கு சென்று மறைந்தது. அது ஒரு காட்டெருமையாக இருக்கக் கூடும்.

பயத்தில் எனக்கு வியர்த்து வடிந்தது.

போத்தலில் இருந்த தண்ணீரைக் குடித்து என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். என்னுடன் வந்த உதவியாளர்கள் உறங்கிக் கொண்டேதான் இருந்தார்கள்.

இன்னும் சிறிது தூரம் கடந்ததும் லொறியின் இயக்கம் திடீரென நின்றது. மீண்டும் ஸ்டார்ட் செய்தேன். அப்போதுதான் கவனித்தேன் முன் இருக்கைக்கருகிலிருந்த கதவு திறந்திருந்தது. இது எப்படி சாத்தியம்? சில வேளை காட்டெருமை குறுக்கே வந்தபோது வண்டி குலுங்கலுடன் நின்றதல்லவா? அப்போது திறந்திருக்கக் கூடுமோ; என நினைத்தபடி கதவை மூடி லொக் செய்தேன்.

மீண்டும் வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தபோது எனக்கு அருகில் யாரோ உட்கார்ந்திருப்பதைப் போல ஓர் உணர்வு, என்னுடன் வந்தவர்கள் பின்பக்கத்தில் தான் இருந்தார்கள்.

திடீரென தோளில் யாரோ உரசியதைப் போல் இருந்தது. வாகனத்திற்குள் இனம்புரியாத ஒரு உஷ்ணக்காற்று பரவியது. மூச்செடுப்பதற்கே சிரமமாக இருப்பதைப் போல உணர்ந்தேன்.

பின்னால் திரும்பி உறங்கிக் கொண்டிருப்பவர்களை எழுப்பவேண்டும் என தோன்றியது ஆனால் என்னால் முடியவில்லை. ஆனால் வாகனத்தை நேராக சீராக செலுத்திக் கொண்டிருந்தேன்.

என் தோளில் யாரோ கைபோட்டு அழுத்திப் பிடிப்பதைப் போலிருந்தது. என் அருகில் மங்கல் வெள்ளையாக ஒரு உருவம் அமர்ந்திருந்தது. என்னால் வாய்விட்டு அலற முடியவில்லை. தொண்டைக்குழியில் ஏதோ அடைத்திருந்ததைப் போல் இருந்தது. உடல் முழுவதும் வியர்த்து தொப்பலாக நனைந்திருந்தது.

நான் தன்னிலை மறந்திருந்தேன்.

மீண்டும் ஒரு சடன் பிரேக். வாகனத்தின் முன் கதவு தடாலென திறந்தது. நானும் சட்டென சுய உணர்வு பெற்றேன்.

வாகனத்தின் கதவை மூடிவிட்டு பின்னால் உறங்கிக் கொண்டிருந்த இருவரையும் தட்டியெழுப்பி விபரம் சொன்னேன். அவர்கள் இருவரும் மிகவும் பயந்து போனார்கள். இருவரையும் முன்னால் வந்து எனது இருக்கைக்கு அருகில் அமரச் செய்தேன். வாகனத்தில் முன்னர் இருந்த புழுக்கம் இப்போது இல்லை.

வாகனம் சீராக சென்று கொண்டிருந்தது. அருகில் இருவர் இருந்ததால் எனக்கும் கொஞ்சம் தைரியமாக இருந்தது.


வாகனம் ஒரு கிலோமீற்றர் தூரம் பயணித்திருக்கும். அப்போது வீதியின் முன்னால் ஒரு வெள்ளை நிற வெளிச்சம்,....... இல்லை ஒரு உருவம் ...

அருகில் நெருங்கிய போது அந்த உருவம் நன்றாகப் புலப்பட்டது. ஒரு ஆள் உயரத்தில் புகைபோல ஏதோவொன்று... அந்த உருவம் வீதியின் மத்தியில் நின்றிருந்தது, எனக்கு கை கால் உதறடுத்தது. மூவருமே அந்த உருவத்தை பார்த்தோம்... வாகனத்தை நிறுத்துவதா அல்லது செல்வதா என்று புரிவில்லை. கண்களை மூடிக்கொண்டு ஆக்ஸிலேட்டரை மிதித்தேன். வாகனம் ஏதோவொன்றில் மோதி குடைசாய்ந்தது.

மறுநாள் கண்விழித்தபோது ஆஸ்பத்திரியில் கிடந்தேன்.

குணமாகியபின் முதல் வேலையாக அந்த சாரதி வேலையை விட்டு விலகினேன். இந்தச் சம்பவம் என்னால் மறக்கவே முடியாதது என்கிறார் சுரேஷ்.

தகவல் தொகுப்பு அபி



## திகில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுங்கள்

பேய் இருப்பது உண்மையா? பொய்யா
என்ற விவாதங்கள் ஒரு புறமிருக்க பேய்
என்ற பெயரைக் கேட்டதுமே பலருக்கு கிலி பிடித்துவிடும். நள்ளி
ரவு, தனிமை போன்ற சூழ்நிலைகளில் சும்மா ஒரு கயிற்றுத்துண்டைக்
கூட பேய் என நினைத்து அலறிவிடுவார்கள். நீங்கள் அல்லது உங்கள்
நண்பர்கள் சந்தித்த பேய் பற்றிய அனுபவம் உள்ளதா? அதை எமது
வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

எமது முகவரி
உதயசூரியன் திகில் அனுபவங்கள்
தினக்குரல் இல-68, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.






அந்தக் கால சூப்பர் ஜோடிகள், இந்தக் காலத்தில்...!







மகளுடன் ஐஸ்வர்யா ராய்





மகளுடன் ஷோபனா



குடும்பத்துடன் ஸ்ரீதேவி

# கலாட்டா









## ஆல்பம்

எப்படி இருந்தவங்க
இப்படி ஆயிட்டாங்களே என்று நாம்
அடிக்கடி சொல்வதுண்டு.
ஆம்! காலம் எப்படிப் போகிறது என்
பதை பார்த்தால் வியப்பாகத்தான்
இருக்கிறது.
நடிகர் பிரபுவின் ஆல்பம்
இங்கே உங்களுக்காக!

இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (68,எலிஹவுஸ் ரோட், கொழும்பு 15) 28.03.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.